26 Years
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
# விளம்பரம்
VLAMBARAM™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com

RBC Insurance
அனைத்து காப்புறுதி மற்றும் சேமிப்புத்திட்ட தேவைகளுக்கும்...
Jey Ahamparam
416 301 1733
உங்கள் வாகன, வீட்டு (for your Home & Auto)

துரித பணமாற்றுச் சேவையில் முன்னோடிகள்
மு.காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave., East, Suite # 3
(Eglinton & Markham)
Scarborough, ON M1J 2H6
Tel. - 416.267.8221
எமக்கு வேறு கிளைகள் எதுவும் இல்லை

நதி 26 | பாலம் 01 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | JANUARY 01, 2016

# காலநிலை மாற்றம்! பாரிஸ் மாநாடு

காலநிலை மாற்றம் பற்றி ஆராய்ந்து ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்க என ஐக்கிய நாடுகள் சபையின் மாநாடு நொவம்பர் 30, 2015இல் இருந்து டிசம்பர் 12, 2015வரை பிரான்ஸ் இல் உள்ள பாரிஸ் நகரில் நடைபெற்றது. இம் மாநாட்டின் இறுதியில் அதில் கலந்து கொண்ட 196 நாடுகளாலும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட "பாரிஸ் உடன்படிக்கை" வெளியிடப்பட்டது. அதன்படி காலநிலை மாற்றத்தால் உலகம் வெப்பமயமாதலை 2°c அளவிற்கு குறைவாக வைத்திருக்க வேண்டும் என முடிவு எடுக்கப்பட்டது. அதாவது உலகில் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட முன்னர் 1880ஆம் ஆண்டில் உலகின் சுற்றாடல் இருந்த சராசரி வெப்பநிலையை இனிமேல் 2°c இற்கு அதிகரிக்க விடமாட்டோம் என்ற உடன்பாடே கையெழுத்திடப்பட்டது.

உலகின் சுற்றாடலின் சராசரி வெப்பநிலை 1880ஆம் ஆண்டில் 13.73°c ஆக இருந்தது. இது 2012இல் 0.85°c ஆல் அதிகரித்து 14.58°c ஆக மாறிவிட்டது. உலகில் உள்ள காலநிலையை அவதானிக்கும் பல நிலையங்களின் கணிப்பின்படி இந்த ஆண்டு 1880ஆம் ஆண்டில் இருந்ததைவிட உலகின் சுற்றாடலின் சராசரி வெப்பநிலை 1°c ஆல் அதிகரித்து 14.73°c இற்கு வந்துவிடும் எனக் கூறப்படுகிறது.

இவ் அதிகரிப்பை இந்த நூற்றாண்டு முடிவதற்கிடையில் (2100க்கு முன்னர்) 2°c இற்கு ஏறவிடாமல் தடுக்கவே இவ் உலக நாடுகள் எல்லாம் முயன்று வருகின்றன. இதேநேரம் கனேடிய பிரதமர் ஜஸ்ரின் ரூடோ உட்பட சிலநாடுகளின் தலைவர்கள் தாங்கள் இந்த உலகின் சுற்றாடலின் சராசரி வெப்பநிலையை 1.5°c இற்கு கூட அதிகரிக்க விடாமல் நாட்டில் பசுமை வாயுக்கள் வெளியேற்றத்தை கட்டுப்படுத்த முயற்சிகள் எடுப்போம் என உறுதி அளித்துள்ளனர்.

இது ஒரு வரலாற்று முக்கியமான, சமநிலையான, இலட்சிய பூர்வமான உடன்படிக்கை என்று கூறிய கனேடிய பிரதமர் ஜஸ்ரின் ரூடோ அடுத்த 90 நாட்களுள் கனடாவின் மாகாணங்களினதும் மற்றும் பிரதேசங்களினதும் முதல்வர்களைச் சந்தித்து பொதுப்போக்குவரத்து, பசுமையை முன்னிறுத்தும் உள்ளக கட்டமைப்புக்களை உருவாக்குதல், பசுமையான தொழில்நுட்பங்களை பாவித்து நமது சமூகத்தில் பொருளாதார மற்றும் புதிய வேலை வாய்ப்புக்களை உருவாக்குதல் தொடர்பாக கலந்துரையாடுவேன் என்றார். இந்த காலநிலை மாற்றம் பற்றிய மாநாட்டில் கனடா பங்குபற்றி மிகவும் வலுமையான, நேர்மறையான, சர்வதேச கலந்துரையாடலில் ஈடுபட்டது தொடர்பாக கனேடிய மக்கள் பெருமைப்பட வேண்டும் என்றார். தற்போது இந்த உடன்படிக்கையில் உள்ளவற்றை நடைமுறைப்படுத்த கனேடியர்களும் மற்றும் உலக மக்களும் கடினமாக உழைக்க வேண்டும் என்றார்.

இவ் உடன்படிக்கை தொடர்பாக கருத்து வெளியிட்ட அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா இவ் அறிக்கை ஒரு வலுவானதும் சரித்திரபிரசித்தி பெற்றதுமாகும். இது இந்த உலகத்தை காலநிலை

தொடர்ச்சி 03ஆம் பக்கம்




Raj A. Rasaratnam
Sales Representative
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc
Real Estate Brokerage

LEXUS OF RICHMOND HILL
LEXUS
I CAN HELP YOU WITH NEW OR PREOWNED LEXUS
INCENTIVES AS MUCH AS $6,000 ON SELECTED NEW LEXUS
COME IN FOR A TEST DRIVE AND RECEIVE A FREE GIFT.
குமார் ஜெகசோதி
Kumar Jegasothy
Pre-owned Sales Consultant

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd.,
Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

TD Canada Trust
Supen Subramaniyam
(Manager, Residential Mortgage)
ADVICE WHEREVER WHENEVER
416-844-8692
888-809-9154

இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE
Dr. Iru Vijayanathan,
BDS, FAGD, MFDS RCPS (Glasg)
DENTAL SURGEON
அவசரகால பல் வைத்திய சேவைகள்
பல் அடைத்தல் (White Filling / Silver Filling)
பல் பிடுங்குதல், ஞானப்பல் பிடுங்குதல்
பல்வேர் அடைத்தல் (Root Canal) மூலம் பல் பிடுங்காமல் பாதுகாத்தல்
முரசு கரைதல், முரசிலிருந்து இரத்தம் வடிதல், வாய்துர்நாற்றம் ஆகிய முரசு வியாதிகளுக்குச் சிகிச்சை
சிறுவர்களுக்கான பற்சிகிச்சைகள்
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markham & Steeles
Tel: 416.609.2022

Buying Selling Residential & Commercial
Sothees Means Service
SOTHEES Kathirgamathamby
Sales Representative
HOMELIFE / Miracle Realty LTD., Brokerage
*Independently Owned Operated
* Free visa
* Free lawyer fee
* Home Warranty
416.704.1179
Toll Free: 1855 SOTHEES


HOMES FOR SALE *COMMERCIAL*INVESTMENTS
Markham & 14 th ave
1369k
4 car garage executive w/o luxury home approxi 4000 sqft
Ajax......taunton
4 brn 4 wsrm fin basement
highglen and markham
4 bm 6 wsrm w/fam rm sep entrance live &rent
Mccocowan/finch
2 plus 1 den 2 wsrm
Scarborough...sheppard
539k
3 brn 2wm fin basement
Markham
95k
1100/- rent all included
Cafetaria
15 years of service
Pat Pushpakanthan
Real Estate Broker
COMMERCIAL & RESIDENTIAL
416-894-1187
Rental corner
2+1 condo apt 1650/-
1+1 condo apt 1400/-
studio apt 999/-
3 bm bangalow 1590/-
Century 21
Hall of Famer
PAT WILL BEAT ANY DEAL*!!
BROKERAGE
80 Corporate Dr. Suite 208 Toronto M1H3G5 416-290 1200


Allstate.
You're in good hands.
Allstate Insurance Company Of Canada
Home & Auto Insurance
வீடு, வாகன காப்புறுதி
Suren Navaratnarajah
(Agent)
Cell: 416.520.6916
E-mail: snavaratnarajah@allstate.ca


THINKING OF SELLING, BUYING OR INVESTING
Always committed to work in the client's best interest
Act with Market Conditions
Exposing Your Property to 1000's of Potential Buyers
Call me to find out how much your home worth.
Free Market Evaluation without any Oblications
TRUST
HONEST
GUARANTEE
We do sell Cottages & Recreational Properties
Muthiah Sivabalan
Sales Representative
Friendly and Confidential Service Just Call
Cell: 416.399.6640
msbalan78@gmail.com
NOT INTENDED TO SOLICIT PROPERTIES PRESENTLY UNDER CONTRACT
HomeLife/GTA Realty Inc.
Brokerage*
5215 Finch Ave. East, Suite #203
Toronto, ON M1S 0C2
Off: 416.321.6969 Fax: 416.321.6963
*Independently Owned and Operated
Higher Standards Agents... Higher Results!


Friends MATRIMONY
திருமணத்
உங்கள் தேடலுக்கோர் முற்றுப் புள்ளி...
சனி, ஞாயிறுகளில்
12:00pm-6:00pm
இலவசமாக திருமண
பொருத்தம் பார்க்கப்படும்
5000 மேற்பட்ட பொருத்தமான வரன்கள் உங்கள் தெரிவுக்கு
மிக இலகுவாக இணையத்தில் பதிவு செய்யும் வசதி
அல்லது தொலைபேசி, தபால், email ஊடாக பதிவு செய்யலாம்
info@friendsmatrimony.com
www.friendsmatrimony.com
Choose Your Life Partnar Here
அலுவலக நேரம்: திங்கள் முதல் வெள்ளி 10:30a.m- 7:00p.m
Sri Lanka
Ph: 94-112-363663
No-11- 2/1, 33rd lane,
Wellawatta,
Canada
info: 647-709-1536
GTA Square
5215 Finch Ave. E. Unit 257


# காலநிலை...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

மாற்றத்தால் ஏற்படப்போகும் தீயவிளைவுகளில் இருந்து பாதுகாக்க கூடிய ஒரு சந்தர்ப்பத்தைத் தருகிறது என்றார். இவ் அறிக்கையை வெளிக்கொணர அமெரிக்கா கடந்த ஏழாண்டுகளாக பெரும்முயற்சி செய்ததையிட்டு அமெரிக்க மக்கள் பெருமைப்பட வேண்டும் என்றார். இதே போல் இம்மாநாட்டில் பங்குபற்றிய ஏனைய நாட்டு தலைவர்கள் மற்றும் சுற்றுப்புற சுற்றாடல் சம்பந்தமான அமைச்சுக்களை சேர்ந்தவர்களும் எமது பிள்ளைகள் மற்றும் வருங்கால சந்ததியினருக்காக இந்த உடன்படிக்கையை நிறைவேற்ற எல்லோரும் முயலவேண்டும் என கூறியுள்ளார்கள்.

இதுவே உலகின் பல நாடுகள் (196 நாடுகள்) கலந்து கொண்டு எடுத்த முதலாவது விரிவான சுற்றுப்புறச் சூழல் உடன்படிக்கை ஆகும். இவ்வறிக்கை 'பாரிஸ் உடன்படிக்கை' என 31 பக்கத்தில் டிசம்பர் 12, 2015இல் வெளியிடப் பட்டுள்ளது. இதற்கு முன்னரும் 1997 Kyoto, ஜப்பானில் காலநிலை மாற்றம் சம்பந்தமாக ஓர் உடன்படிக்கை எடுக்கப் பட்டிருந்தாலும் அதற்கு வளர்முக நாடுகளின் சம்மதம் பெறப்படாதபடியால் அதை நடைமுறைபடுத்த முடியவில்லை. கனடாவும் அவ் உடன்படிக்கையில் இருந்து 2012இல் விலகியது.

இந்த 196 நாடுகளும் ஏற்றுக்கொண்ட 'பாரிஸ் உடன்படிக்கை' ஐ ஒரு சட்டபூர்வமான எல்லோரையும் கட்டுப் படுத்தப்படக்கூடிய உடன்படிக்கையாக மாற்ற குறைந்தது 55%மான பசுமை வாயுக்கள் வெளியேற்றத்தை கொண்டுள்ள நாடுகளில் 55 நாடுகள் தங்களது நாட்டின் நாடாளுமன்றங்களில் இவ்வுடன்படிக்கைக்கு ஆதரவாக தீர்மானம் நிறைவேற்றி இவ் உடன்படிக்கையில் ஏப்ரல் 21, 2017இற்கு முன்னர் கையொப்பம் இட வேண்டும்.




இந்த பசுமை வாயுக்கள் வெளியேற்றத்தை உலகில் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப் பட்ட காலத்தில் இருந்து (1880ஆம் ஆண்டில் இருந்து) வெளியிட்டு வரும் நாடுகளில் முதல் 10 நாடுகளாக அமெரிக்கா 28.5%, சீனா 9.36%, ரஸ்சியாவுடன் சேர்ந்த நாடுகள் 7.95%, ஜேர்மனி 6.78%, ஐக்கிய இராச்சியம் 5.73%, ஜப்பான் 3.88%, பிரான்ஸ் 2.37%, இந்தியா 2.52%, கனடா 2.17% மற்றும் உக்கிரேன் 2.13%உம் இருக்கின்றன. இந்த 10 நாடுகளுமே இதுவரை வெளியேறிய பசுமைவாயுக்களில் 71.75% இற்கு காரண-மானவர்களாகும்.

இந்த பாரிஸ் உடன்படிக்கையில் குறிப்பிடக்கூடிய விடயமாக கார்பன் சமநிலை அடைதலை உலக நாடுகள் 2050 இற்கு பின்னர் 2100 இற்கு முன்னர் எட்ட வேண்டும் என கூறப்பட்டுள்ளது. அதாவது காபன் சமநிலை அடைதல் என்றால் மனித செயல்களால் வெளியேறும் பசுமை வாயுக்களின் அளவு நிலம், நீர் மற்றும் மரங்கள் போன்றவை இயற்கை நிகழ்வுகளால் உள் எடுக்கும் அளவிற்கு சமமாக இருத்தல் ஆகும். இவ்வுடன் படிக்கையில் பசுமைவாயுக்கள் வெளியேற்றத்தை நிறுத்தி உலகம் வெப்பமயமாதலைத் தடுக்க பணக்கார நாடுகள் வளர்முக நாடுகளுக்கு நிதி உதவி அளிக்க வேண்டும் என கூறப்பட்டுள்ளது. இதற்காக 2020ஆம் ஆண்டிலிருந்து பணக்கார நாடுகள் 100 பில்லியன்

தொடர்ச்சி 08ஆம் பக்கம்



# வெள்ளம் அளித்த பாடம்

## அரசியல் வாதிகளை வெறுக்கும் தமிழக இளைஞர்கள்!

தமிழக இளைஞர்கள் மனதுக்குள் உறங்கிக் கிடந்த, மாற்றத்துக்கான விருப்பத்தை, எழுப்பி விட்டிருக்கிறது சென்னை வெள்ளம். ஆளும்கட்சியான அதிமுகவை தோற்கடிக்க திமுகவுடன் விஜயகாந்த் சேருவாரா மாட்டாரா? மக்கள் நல கூட்டணி பலம்பெறுமா? தேசிய கட்சிக-ளான காங்கிரஸும் பாஜகவும் என்ன ஆகும்? பாமகா நிலை என்ன? என அரசி யல் விமர்சகர்கள் விவாதித்துக் கொண்டிருக்க, 2016 சட்டசபைத் தேர்தல் வாக்காளர்களில் பெரும்பகுதியினரான இளம் தலைமுறை வாக்காளர்களோ, இவர்கள் எல்லாம் வேண்டாம் புதிதாக ஒருவர் வேண்டும் என வீதிக்கு வரத் தொடங்கியிருக்கிறார்கள். தமிழக இளம் வயதினரின் இந்த மனமாற்றத்துக்கு பல காரணங்கள். அதில் ஒன்று, சென்னை வெள்ளம்!

‘சென்னை வெள்ளம் ஓர் எச்சரிக்கை. இதனை ஒரு பாடமாக எடுத்துக்கொண்டு இனிவரும் காலங்களில் இதுபோன்ற பேரிடர் நிகழாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்’ என்றுதான் இப்போது தமிழ்நாட்டில் எல்லா அரசியல் கட்சிகளும் பேசுகின்றன. ஆனால், இந்த வருடம் மட்டுமா தமிழ்நாட்டில் வெள்ளம் வந்திருக்கிறது எனக் கேள்வி எழுப்புகிறார்கள் தமிழக இளைஞர்கள். ஆறுகள் கரை கடப்பது வருடம்தோறும் தமிழ்நாட்டில் நடப்பதுதான். ‘வெள்ள அபாயம்’ என டைப் செய்து கூகிளில்



தேடினால், அனேகமாகத் தமிழ்நாடு முழுக்க எல்லா ஊர்களையும் கூகிள் காட்டுகிறது. சில கடந்த பத்து தினங்களில் அறிவிக்கப்பட்டவை, மற்றவை அதற்கும் முன்னால். மாமழை வெள்ளத்தில் சென்னை மிதந்தபோது, வைகை அணை நிரம்பியது காரணமாக, வெயில் காயும் மதுரைக்கும் வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டது. இந்த வருடம் மழையால் பாதிக்கப்படாத தமிழ்நாட்டின் பகுதிகள் பாதுகாப்பான பகுதிகள் என்று அர்த்தமல்ல. அவை எல்லாம் கடந்த பத்து வருடத்திற்குள் ஒருமுறையாவது பாதிப்புக்குள்ளானவை என்பதுதான் நிதர்சனம். வெள்ள அபாயம் இல்லாமல் சாதாரண மழையைக்கூட எதிர்கொள்ள முடியாத நிலையில்தான் தமிழகத்தின் எல்லாப் பகுதிகளும் இன்று இருக்கிறது என்பதையே இது காட்டுகிறது!

‘அணைகள் வெள்ள அபாயத்தைக் குறைக்கிறது. நீர் மின்சாரம் உற்பத்தி செய்ய உதவுகிறது’ என்கிறது விக்கிபிடியா விளக்கம். ஆனால், ‘அணைகள் வெள்ள அபாயத்தை அதிகரிக்கிறது’ என்பதுதான் தமிழ்நாட்டு மக்கள் அனுபவங்கள்.

தமிழ்நாடு முழுவதும் மிகப்பெரிய, பெரிய, சிறிய என மொத்தம் 127 அணைகள் உள்ளன. எல்லா அணைகளும் பொதுப் பணித்துறையின் மூலம் பராமரிக்கப்பட்டு வருகின்றன. விவசாய நிலங்களுக்குப் பாசனம், மின் உற்பத்தி தவிர குடிநீர் ஆதாரமாகவும் விளங்கி வருகிறது இந்த அணைகள். தமிழகத்திலேயே அதிக எண்ணிக்கையில் அணைகள் உள்ள மாவட்டம் திருநெல்வேலிதான். பாபநாசம் (143 அடி), சேர்வலாறு (156 அடி), மணிமுத்தாறு (85 அடி) ஆகிய பெரிய அணைகள் உட்படத் திருநெல்வேலி மாவட்டத்தில் மொத்தம் 11 அணைகள்

தொடர்ச்சி 08ஆம் பக்கம்



# மலரும்

# 2016

## இனிய ஆண்டாக அமைய வாழ்த்துக்கள்

உங்களது மோட்கேஜ்
தேவைகள் அனைத்திற்கும்

"மோட்கேஜ் கிளினிக்"

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.






எமது முகவரி

**1504 Markham Rd,**
**Toronto, ON, M1B 2V9**
**(Markham & HWY 401)**

**416-613-2788 / 416-816-9011**

**Walk-in Welcome Mon - Sat 09am-05pm**

MORTGAGE ALLIANCE

RIGHTBROKER = RIGHTMORTGAGE

Lic # 10530



**Jayson Fowler** BA (Law)
Mortgage Agent / Former Underwriter
FSCO Lic # M 15002593

**416-613-2788 / 416-816-9011**



சுதேசன் பத்மநாதன் M.Com, B.Com (Hon)
Mortgage Agent / Real Estate Sales Representative
FSCO Lic # M 12001741
**Cell : 647-861-8240**



ஜெ(Jey) இராசதுரை MBA, BBA (Hon), AMP
Team Leader / Mortgage Agent / Real Estate Sales Representative
FSCO Lic # M 09001428
**Cell : 416-624-4843**




- ஆதித்தன் -

# கிராம இராச்சியத் திட்டம்

## வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு ஏற்புடையதல்ல!

புதிய அரசாங்கத்தினால் கொண்டு வரப்படவுள்ள 'கிராம இராச்சியம்' என்ற திட்டத்திற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு கடும் எதிர்ப்பினை தெரிவித்து வருகின்றது. இது மாகாணசபைக்குள்ள அதிகாரங்களை மத்திய அரசாங்கம் அபகரிக்கும் திட்டம் என்று கூட்டமைப் பினரால் குற்றம் சாட்டப்படுகின்றது.

வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் இத்திட்டத்தை எதிர்ப்ப தாக அறிவித்துள்ளார். கிராம இராச்சியம் என்ற திட்டத்தினூடாக, மாகாண சபைகளின் அதிகாரங்களை பறிக்கும் முனைப்புக்களில் மத்திய அரசாங்கம் ஈடுபடுகின்றது என்று அவர் குற்றஞ் சாட்டியுள்ளார். கடந்த அரசாங்கத்திற்கும் தற்போதைய அரசாங்கத் திற்கும் இடை யில் வேறுபாடு எதுவும் இல்லை எனவும், அரசின் இவ்வாறான திட்டங்களால் தென்பகுதிகள் நன்மையடை கின்றனவே தவிர எமது பகுதிகளில் எந்த மாற்றங்களும் இல்லை என அவர் கூறுகின்றார்.

தற்போதையஅரசாங்கம் நல்லெண்ண சமிக்ஞைகளை வெளியிடுவது போன்று காட்டிக் கொண்டு மாகாணங்களை கட்டுப்படுத்தி முடக்க முயல்கிறது. இந்த கிராம இராச்சியத் திட்டத்தை பிரதமர் ரணில் விக்ரமசிங்க முன் வைத்திருக்கிறார். இது தொடர்பில் அவர் என்னுடன் பேசவில்லை. அவரின் செயலாளர் ஊடாக பிரதம செயலருக்கு இத்திட்டம் தொடர்பில் தெரியப்படுத்தியிருக்கின்றார். கிராமிய அபிவிருத்தி முழுமையாக மாகாணத்துக்கு உட்பட்ட விடயமாகும். மாகாண அதிகாரத்தைப் பிரித்தெடுக்கும் முயற்சியே கிராம இராச்சியத் திட்டம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா நாடாளு மன்றில் உரையாற்றுகையில் இந்த திட்டம் தொடர்பில் கருத்துக்களை வெளியிட்டிருக்கின்றார். 'கிராம இராச்சியம்' என்ற திட்டத்தின் ஊடாக மாகாண சபை களின் அதிகாரங்கள் பறிக்கப்படும் சாத்தியங்கள் காணப்படுவதால், அந்த திட்டத்தினை அரசாங்கம் மீளப்பெற்றுக் கொள்ள வேண்டும் என்று மாவை சேனாதி ராஜா வலியுறுத்தியுள்ளார். இந்த திட்டம் மாகாண சபைகளுக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளது. நிர்வாக நடவடிக்கை க்காக இது அனுப்பப்பட்டிருக்குமானால் பரிசீலிக்கலாம். ஆனால், தேசிய இனப் பிரச்சினைக்கு அதிகாரப் பரவலாக்கத்துடன் சமஷ்டி அடிப்படையில் தீர்வுகாணப்பட வேண்டும் என்று பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவி த்திருக்கும் நிலையில், அதிகாரங்களை மத்தியில் குவிக்கும் வகையில் இந்தத் திட்டம் இருக்குமானால் அதை நாம் எதிர்ப்போம் என்று அவர் தெரிவித்துள்ளார்.





தற்போதைய சூழலில் அதனை மீளப்பெறுவதே சிறந்தது என்றும், இனப்பிரச்சினையைத் தீர்த்த பின்னர்- அதிகாரங்களைப் பகிர்ந்த பின்னர்- நிர்வாகப் பணிகளுக்காக இவ்வாறான திட்டங்களை எடுத்தால் பரவாயில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். ஆனால், இருக்கின்ற அதிகாரத்தைப் பறிக்கும் முயற்சியில் இறங்கக் கூடாது என்றும் மாவை சேனாதிராஜா சுட்டிக்காட்டியுள்ளார்.

மஹிந்த அரசாங்கத்தினால் முன்னர் கொண்டு வரப்பட்ட திவிநெகும (வாழ்வின் எழுச்சி) என்ற திட்டத்திற்கும் அப்போது தமிழ் மக்கள் தரப்பில் எதிர்ப்பு வெளியிடப் பட்டது. திவிநெகும சட்டமூலம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையினால் அப்போது நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற ப்பட்டது. அப்போதைய பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஸ வினால் நாடாளு மன்றத்தில் சமர்ப்பிக்க ப்பட்ட இந்த சட்ட மூலத்திற்கு ஆதரவாக 160 வாக்குகளும் எதிராக 53 வாக்குகளும் அளிக்கப்பட்டன. ஐக்கிய தேசிய கட்சி, தமிழ் தேசிய கூட்டமைப்பு, ஜே.வி.பி ஆகிய கட்சிகள் குறித்த சட்டமூலத்திற்கு எதிராக வாக்களித்தன.

அப்போது, திவிநெகும சட்டமூலம் தொடர்பில் நாடாளுமன்றில் நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு கடுமையான எதிர்ப்பினை வெளியிட்டது. திவிநெகும மாகாணசபைக-ளின் அதிகாரங்களை பறிக்கும் வகையிலான சட்டமூலம் என குற்றம் சாட்டப்பட்டது.

1988ம் ஆண்டு 13ம் திருத்தச் சட்டத்தின் மூலம் மாகாணசபைகளுக்கு குறைந்தளவு அதிகாரங்கள் வழங்கப்பட்டன. இந்த அதிகாரங்களையும் மீளப்பெற்றுக் கொள்ள இச்சட்டத்தின் மூலம் முயற்சிக்கப்படுகின்றது என தெரிவிக்கப்பட்டது. இந்தச் சட்டமூலம் ஓர் ஏகாதிபத்திய அதிகாரங்களை உள்ள டக்கியது என்றும் சுட்டிக் காட்டப்பட்டது.

மாகாணங்களின் ஆதிகாரங்களை பறிப்பது மட்டுமல்லாமல், திவிநெகும ஊடாக பாரிய நிதி மோசடிகள் இடம்பெற்றமையும், இது தொடர்பில் முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஸ தற்போது விசாரணைகளுக்குட்படுத்தப்பட்டு வருகின்றமையும் இங்கு குறிப்பிடத் தக்கது.

அரசாங்கத்தினால் கொண்டுவரப்படும் சில திட்டங்கள் பொதுவான பார்வையில் நன்மை தருவ தாக புலப்பட்டாலும் அதன் நோக்கம் குறித்து ஆராய்கின்ற போது சிக்கல்கள் ஏற்படுகின்றன. முன்னைய, மஹிந்த அரசாங்கத்தினால் கொண்டு வரப்பட்ட திவிநெகும திட்டத்தைப் போன்றே கிராம இராச்சியத் திட்டத்தையும் ஒப்பிடக் கூடிய நிலைமை இன்று ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான திட்டங்கள் ஏனைய மாகாணங்களுக்கு நன்மை பயப்பதாக இருந்தாலும், வடக்கு கிழக்கு மாகாணங் களுக்கு அவ்வாறு இல்லை. இதனை புதிய நல்லாட்சி அரசாங்கம் கருத்திற்கொள்ள வேண்டும்.

வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் எனவும். இதன் முலமாக நீண்ட காலமாக இழுபட்டு வரும் இனப் பிரச்சினைக்கு தீர்வு ஒன்றை வழங்க முடியும் என்றும் சர்வதேச சமூகமும் வலியுறுத்தி வருகின்றது.

மஹிந்த அரசாங்கம் முன்னர் பேச்சளவில் அதனை ஏற்றுக்கொண்டிருந்தாலும் அதற்கு முரணாகவே பல நடவடிக்கை களை மேற்கொண்டு வந்தது. திவிநெகும என்பது உண்மையில் வடக்கு கிழக்கு மாகாணங் களின் அதிகாரங்களை மத்திய அரசின் கைகளுக்கு கொண்டு வருவதன் நோக்கமாகவே மேற்கொள்ளப்பட்டது. அப்போது எதிர்கட்சியாக இருந்த ஐக்கிய தேசியக் கட்சியும், ஜே.வி.பி போன்ற கட்சிகளும் இதனை நாடாளுமன்றில் எதிர்த்தன என்பதும் இங்கு நினைவு கொள்ளத்தக்கது.

ஆனால், தற்போது புதிய அரசாங்கம் முன்வைத்துள்ள 'கிராம இராச்சியம்' என்ற திட்டத்தை அவ்வாறு எடுத்த எடுப்பில் குற்றம்சாட்ட முடியாது எனினும், இவ்வாறான திட்டங்களைப் பற்றி யோசிக்கும் போது ஏனைய மாகாணங் களை மட்டும் கருத்தில் வைத்து திட்டமிடக்கூடாது. தமிழர்களின் வடக்கு கிழக்கு மாகாணங்களை கவனத்திற் கொள்ள வேண்டும். அவ்வாறில்லாவிடின் தமிழ் மக்கள் புதிய அரசாங்கத்தின் மீதும் நம்பிக்கை இழக்கும் நிலை ஏற்படும். வடமாகாண முதலமைச்சரின் கருத்துக்களில் இந்த நம்பிக்கையின்மை தற்போது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

முன்னைய அரசாங்கத்தினால் மேற் கொள்ளப்பட்ட தவறான நடவடிக்கைகள் குறித்து புதிய அரசாங்கம் பல விடயங்களை வெளிப்படுத்தி வருகின்றது. இவ்வாறான பிரச்சினைகள் குறித்தும் அரசாங்கம் கவனத்தில் எடுக்க வேண்டும். இனங்களுக்கிடை-டயிலான நல்லிணக்கத்திற்கு அத்திவாரமாக, முதலில் சந்தேகங்கள் களையப் பட்டு நம்பிக்கைகள் கட்டியெழு ப்பப்பட வேண்டும்.புதிய அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு தீர்வு ஒன்றை காணும் நோக்கில், ஏதிர்வரும் 2016ம் ஆண்டு புதிய அரசியலமைப்பை ஏற்படுத்தவுள்ளது எனத் தெரிவிக்கப் படுகின்றது.

எதிர்வரும் 2016 ஆம் ஆண்டு தமிழ் மக்களுக்கு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு ஆண்டாக மாறும் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் யோசனையில் மூன்று விடயங்கள் முக்கிய மாக கூறப்பட்டிருக்கின்றது எனவும், அதில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை ஒழிப்பு, புதிய தேர்தல் சட்டம் திருத்தம் மற்றும் இனப்பிரச்சினைத் தீர்வு என்பன அடங்குகின்றன எனவும் அவர் தெரிவித்துள் ளார். தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு என்பது மிகவும் தெட்ட தெளிவாக அதில் கூறப்பட்டுள்ளது என்று எம்.ஏ. சுமந்திரன் உறுதியாக கூறுகின்றார்.

இவ்வாறானதொரு சூழலில் நம்பிக்கை யின்மைகளை ஏற்படுத்தும் திட்டங்களை முன்வைப்பதை புதிய அரசாங்கம் கைவிட வேண்டும். தீர்வுகள் முன் வைக்கப்பட்ட பின்னர் வடக்கு கிழக்கு மாகாண நிர்வாகங் களுடன் கலந்துரையாடி இவ்வாறான திட்டங்களை முன்னெடுப்பதில் பிரச்சினைகள் ஏற்படாது.

விளம்பரம்
VLAMBARAM™

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
ஊடகப்பொறுப்பாளர்: விஜயபாலன்
தட்டச்சு: கலா
அலுவலக முகாமையாளர்: நிலானி
பதிப்பு: Canyon Press Inc.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: Vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com/www.tamilvanakkam.com

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். பதிப்புரிமை: 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

# Calculus Gr12

In 20 hrs.



Dear Students;

Submitting the university applications are not far away........

If your Average in Advanced Function below 80 %

Don't get delayed till the last moments, Boost your Advanced Function Average by

**1.The quickest mega Review in 15hr cover entire AF, starts Jan ,16)**

Plus

Get over **90's** in Calculus

**2.The most effective Calculus training in 20hr (Starts Jan,16)**

The entire Gr12 Calculus will be covered as AP level.

Complete it before you start at school.

**Info: 416-666-5515**

**MATH WORLD**

MOST ADVANCED TALENTED HELP

# வெள்ளம் அளித்த...

04ஆம் பக்கத்தொடர்ச்சி

உள்ளன. இதற்காக பெருமைப்படுவதா அல்லது மிகப்பெரிய அபாயம் சூழ்ந்துள்ளதாக அச்சப்படுவதா எனத் தெரியாமல் தவிக்கிறார்கள், இந்த மாவட்ட மக்கள். 1992ஆம் வருட அனுபவத்தை அவர்கள் மறந்திருக்கமாட்டார்கள்.




கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்கள் 1992ஆம் ஆண்டு கடும் வெள்ளப் பாதிப்புகளை சந்தித்தன. பாபநாசம், சேர்வலாறு, மணிமுத்தாறு ஆகிய மூன்று அணைகளும் உடையும் அபாயத்தைத் தவிர்க்க நள்ளிரவில் அணை திறக்கப்பட்டது. தாமிரபரணி ஆற்றில் 2.04 லட்சம் கனஅடி தண்ணீர் கடும் சீற்றத்துடன் பாய்ந்தது. திருநெல்வேலி மாவட்டத்தில் அம்பாசமுத்திரம், விக்கிரமசிங்கபுரம், பாபநாசம் தொடங்கி, தூத்துக்குடி மாவட்டத்தில் தாமிரபரணி கடலில் கலக்கும் இடம் வரைக்கும் கடும் பாதிப்புகளை ஏற்படுத்தியது அந்த வெள்ளம். கன்னியாகுமரி மாவட்டத்திலும் குழித்துறை தாமிரபரணி மற்றும் நாகர்கோவில் பழையாற்றில் பல உடல்கள் அடித்துச் செல்லப்பட்டன. சுசீந்திரம் தாணுமாலய சுவாமி கோயிலில் வெள்ளம் புகுந்ததையடுத்து, குமரி கண்டம் போல் கன்னியாகுமரி மாவட்டத்தையும் கடல்கொள்ளும் என ஏடுகளில் எழுதி வைக்கப்பட்டுள்ளதாக வதந்தி பரவியது. 1992 வெள்ளத்தில் கிட்டதட்ட 100 பேர்கள் பலியானார்கள். அக்கால மதிப்புப்படி 500 கோடிக்கும் மேல் இழப்புகள் ஏற்பட்டது.

1992க்குப் பிறகும் பலமுறை வெள்ளம் வந்து சென்றுவிட்டது. 2005 பெருமழையில் பரவலாக தமிழகம் முழுக்கப் பாதிக்கப்பட்டது. 2013 தானே புயலில் கடலூர் சின்னாபின்னமானது. 2014ஆம் ஆண்டு தென்பண்ணை, வைகை ஆறுகளில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் தேனி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, தருமபுரி, திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர், திருப்பூர், ஈரோடு மாவட்டங்கள் கடும் பாதிப்புக்குள்ளாகின. கிட்டத்தட்ட 400 பேர் பலியானார்கள். 2014ஐ மட்டுமல்ல 2013, 2012, 2011, 2000 என பின்னால் செல்லச் செல்ல ஒவ்வொரு வருடமும் இதுபோல் தமிழகம் கடுமையான பாதிப்புகளைச் சந்தித்துதான் வருகிறார்கள்.

புதிதாகக் கட்டிய பாபநாசம் மேலணை காரணமாக 1992க்குப் பிறகு தாமிரபரணியில் பெருவெள்ளம் வரவில்லை. ஆனால், 1992க்குப் பிறகு நிகழ்ந்த ஆக்கிரமிப்புகளாலும் முறையாக தூர்வாரப்படாததாலும் தாமிரபரணியின் அகலமும் ஆழமும் குறைந்துள்ளது. இன்றைய நிலையில் தாமிரபரணி 20 ஆயிரம் கனஅடி தண்ணீரைத் தாங்கும் நிலையில்தான் உள்ளது. இதனால், பெருமழை காரணமாக பாபநாசம், மணிமுத்தாறு, சேர்வலாறு அணைகளில் இருந்து தண்ணீர் திறக்கப்படும் ஒவ்வொரு முறையும் தாமிரபரணியில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. இது கரையோர பகுதி ஊர்களையும் வயல்வெளிகளையும் மூழ்கடிப்பதும் தொடர்ந்து நடக்கிறது. தற்போது சென்னையில் பெய்துள்ளதைப் போன்ற ஒரு பேய்மழை பெய்தால், அடையாறு போலவே, தன் கரையோரவாசிகளை கைவிடுவது தவிர தாமிரபரணிக்கும் வேறு வழியில்லை.

அணை, ஏரி, குளங்கள் போன்ற நீர்நிலைகளில் மழைக் காலங்களில் அதிக நீர்வரத்து காரணமாக மிகுதியான உபரிநீர் வெளியேற்றப்படும்போது, ஆறுகளின் கரை உடைந்து அல்லது கரைக்கும் மேல் தண்ணீர் தேங்கி, தனது வழக்கமான பாதையைவிட்டு ஆறு வெளியே வரும். பெருக்கெடுத்து வெளியேறும் வெள்ளம், அளவுக்கேற்றப்படி கரையோரமுள்ள தனி வீடு முதல் முழு ஊர் வரை மூழ்கடிக்கும். இது புரிந்துகொள்ளக் கூடியதுதான். இதனால், ஆறுகளில் இருந்து தொலைவில் குடியிருப்பதன் மூலம் வெள்ளத்தால் ஏற்படும் சேதங்களை தவிர்த்து விடலாம் என்று திட்டமிட்டு வாழும் முன் ஜாக்கிரதை முத்தண்ணாக்கள் இருக்கிறார்கள். ஆனால், சென்னை வெள்ளத்தில் அவர்களும் மாட்டிக்கொண்டார்கள் என்பதுதான் பெரும் சோகம். ஈக்காடுதாங்கலில் ஓடும் அடையாறு, கோடம்பாக்கத்தில் ரஜினியின் ராகவேந்திரா கல்யாண மண்டபம் இருக்கும் சாலையில் பெருக்கெடுக்கும் என்று யார்தான் கற்பனை செய்திருப்பார்கள்?

'இது பேய் மழை. என்னதான் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்திருந்தாலும் இழப்புகளை தவிர்த்திருக்க முடியாது' என்கிறார்கள் ஆளும் அதிமுக கட்சியினரும் அதிமுக விசுவாசிகளும். ஆனால், சரியான திட்டமிடலும் நீண்ட கால நோக்கில் அமைக்கப்படும் திட்டங்களும் இருந்தால் சாத்தியம்தான் என்பதற்கு பல உதாரணங்கள் உள்ளன. உலகின் மற்ற நாடுகளில் அல்ல சென்னையிலே இந்த உதாரணங்கள் இருக்கின்றன. சிறந்த உதாரணம், இந்த வருடம் பெரு வெள்ளத்தில் வடசென்னைப் பகுதிகளும் பாண்டிச்சேரி பிரஞ்சு குடியிருப்பும் பாதிக்கப்படாதது. இவை சுதந்திரத்துக்கு முன்பு உருவாக்கப்பட்ட நகரங்கள் என்பதால், சுதந்திரத்துக்கு பிந்தைய அரசியல்வாதிகளின் ஊழலில் இருந்து தப்பியவை.

இதெல்லாம் அரசியல்வாதிகள், அதிகாரிகளின் ஊழல்தான் தமிழ்நாட்டின் பெரும் பிரச்சினை எனும் எண்ணத்தை தமிழக இளைஞர்கள் மத்தியில் உருவாக்கியிருக்கிறது. அரசியல்வாதிகளின் அரைகுறையான திட்டங்கள், அதுவும் நிறைவேற்றப்படாத நிலை, ஆக்கிரமிப்புகள் எல்லாம் சேர்ந்து இன்று தமிழகத்தை வெள்ள அபாய கோட்டில் நிறுத்தியிருக்கிறது என நினைக்கிறார்கள் அவர்கள். எனவே, அரசியல்வாதிகளின் நிர்வாகத் திறமையின்மை, மாறிவரும் உலகின் மாற்றங்களைப் புரிந்துகொள்ள முடியாத மடத்தனம், எல்லாவற்றையும்விட மோசமான ஊழல் ஆகியவற்றை கேள்வி கேட்கும் இளைஞர்கள், இனிமேலும் இவர்களைத்தான் சார்ந்திருக்க வேண்டுமா என்று நினைக்கிறார்கள்.

இதில் ஒரு பகுதியினர்தான் சாகயம் ஐஏஎஸ் அரசியலுக்கு வரவேண்டும் என விருப்பம் தெரிவித்துள்ளனர். சாகயம் வருவாரா மாட்டாரா தெரியாது. ஆனால், இளைஞர்கள் மத்தியில் உருவாகியுள்ள இந்த எழுச்சியை ஒருங்கிணைத்து வழிகாட்ட, சகாயம் தவிர, தமிழகத்தில் வேறு யாரும் இன்று இல்லை என்பதுதான் கவலைக்குரிய யதார்த்தம்!

# காலநிலை...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

அமெரிக்க டொலரை வருடம்தோறும் 2025ஆம் ஆண்டுவரை வளர்முக நாடுகளுக்கு கொடுக்க வேண்டும்.




இவ்வாறு உலகில் பசுமை வாயுக்கள் வெளியேற்றத்தை 2100ஆம் ஆண்டிற்குள் சமநிலையில் கொண்டு வந்து உலக சுற்றாடலின் சராசரி வெப்பநிலையில் 1880ஆம் ஆண்டில் இருந்த வெப்ப நிலையைவிட $2^{\circ}c$ இற்கு குறைவான அதிகரிப்பை மட்டுமே ஏற்படுத்தக்கூடிய முயற்சிகளை நாம் செய்யாவிட்டால் உலக சுற்றாடலின் சராசரி வெப்பநிலை $4^{\circ}c$ இற்கு கூடுதலாக அதிகரிக்கும் என விஞ்ஞானிகள் எச்சரிக்கை விடுத்துள்ளார்கள். இந்த பசுமை வாயுக்கள் எனக் கூறப்படும் வாயுக்களில் மனிதர்களின் செயற்பாட்டால் உருவாகும் பலவிதமான வாயுக்கள் இருந்தாலும் அதில் முதல் மூன்று இடத்தில் இருப்பவை காபனீர் ஒட்சைட் ($CO_2$), மெதேன் ($CH_4$) மற்றும் நைத்திரஸ் ஒட்சைட் ($N_2O$) ஆகும்.

உலகில் சராசரி கடல்நீர் மட்டம் தற்போது 1880ஆம் ஆண்டில் இருந்ததைவிட 20 செ.மீ (8 அங்குலம்) உயர்ந்துள்ளது. இது உலகில் உள்ள மக்கள் பசுமை வாயுக்கள் வெளியேற்றத்தை எவ்வாறு கட்டுப்படுத்துவார்கள் என்பதைப் பொறுத்து 2100ஆம் ஆண்டளவில் மேலும் 30 செ.மீ. (ஒரு அடி) தொடக்கம் 120 செ.மீ. (4 அடி) வரை உயர வாய்ப்புள்ளதாக விஞ்ஞானிகள் கூறியுள்ளனர். நாசாவின் தகவல்களின்படி கிறீன்லாண்டின் ஐஸ் பாளங்கள் மட்டும் உருகினாலேயே அது உலகின் சராசரி கடல்நீர் மட்டத்தை 600 செ.மீ. (20 அடி)ஆல் உயர்த்தும்.





3 Bedrooms, 3 W Room
pen Concept Floor Plan, Main Floor Laundry With Garage Access



4 Bedrooms, 3 W Room
Main Floor Laundry W/ Garage Access, Open Living Room/Dining Room



3+0 Bedrooms, 2 W Room
3 Car Garage, No Businesses Or Out Buildings



3 Bedrooms, 1 W Room
Custom Deck Overlooking Backyard With Custom Landscaping



3 Bedrooms, 3 W Room
Oak Staircase,S/S Applns, Gas Stove,Jet Tub In Ensuite



4 Bedrooms, 4 W Room
Beautiful Detached Home W/ Finished Bsmt



4 Bedrooms, 4 W Room
Walk In Closet With Soaker Tub + Shower



4 Bedrooms, 4 W Room
Professionally Finished Basement. Newer Garage Door



3+2 Bedrooms, 4 W Room
New Paint,Open Concept Living & Diningroom



3 Bedrooms, 3 W Room
Hardwood Flooring,Main Floor Den,Laundry With Garage Access




4+3 Bedrooms, 5 W Room
Professionally Finished Basement Apartment



4+1 Bedrooms, 3 W Room
4 Spacious Bedrooms With Large Master Ensuite




3 Bedrooms, 3 W Room
Wrought Iron Fencing Around Pool, Extensive Decking,Hot Tub



4+3 Bedrooms, 5 W Room
Escape To The Way The Cottage Used To Be



5 Bedrooms, 8 W Room
Oak & Wrought Iron Railings, Theater Room Projector & Movie Chairs



KZG 647-200-5833

Sell your home
faster
and more
money

RE/MAX Platinum Club Award

**ELAGUPPILLAI SRINATHAN (MIKE) B.SC**
Sales Representative
**Direct 416 - 276-1225**
Email: esrinathan@trebnet.com

Ph1-7800 Woodbine Ave
Markham, ON L3R 2N7
Tel: 905-470-9800
Fax: 905-470-7770

# Your Home Sold In 30 Days or We buy it

**When you list your home with Mike,you receive these Guarantees.**

Your home advertised 24 hours a day until it is sold, Your home advertised in full color prints ads every week until it is sold, Our team of specialists for the same price as hiring a single agent

# மூலிகை சிகிச்சை மூலம் சர்க்கரை நோயைக் கட்டுப்படுத்தலாம்!

மூலிகைகளின் பெருமைகளை மக்களுக்கு எளிய நடையில் பழகும் தமிழில் எழுதி அவர் தம் மனதில் பதிய வைத்தால் தான் அதனைத் தொடர்ந்து வாசிப்பவர்கள் நன்கு உணர்வார்கள்.

எப்பாடு பட்டாவது சித்தர்கள் தந்த மருத்துவத்தை நிலைநாட்ட வேண்டும் என்று மனதில் உறுதி செய்து கொண்டேன். சிதாகாசமான பெருவெளி உண்மையை உள்ளடக்கிய உணர்ச்சி, மூலிகைகளுடன் பழகிய எனது பட்டறிவு, நம் முன்னோர்கள் அற்புதமாய் நமக்குப் படைத்திட்ட, யுகம் யுகமாய் வாழ்ந்து வரும் நல்லதொரு மருத்துவத்தை மக்கள் மேற்கொண்டு பின்பற்ற மறுக்கின்றனரே என்கிற உண்மை... உணர்ச்சியும், உண்மையும், மூலிகை மேல் நான் கொண்டிருந்த தீராத பக்தியும் + அறிவும் மோதி ஒரு உருவம் எய்தியது. அந்த உருவம்தான் இந்த முயற்சி.

பாரம்பரிய தமிழர் மருத்துவ முறையை மீட்டெடுக்கும் முயற்சியாக, பக்க விளைவுகளில்லா நம் சித்தர் பெருமக்கள் அருளிய மூலிகை மருத்துவத்தின் மகத்துவத்தை, உலக மாந்தர் நலனிற்காக அகிலமெங்கும் பரப்புவதே நம் இலட்சியம். உடலில் தோன்றும் நோய் நொடிகளின் காரணங்களை ஆராய்ந்து, கிடைத்தற்கரிய நம் சித்தர் பெரு மக்கள் அருளிய மூலிகைகளை இனம் கண்டு, மருந்துகள் செய்து, உடல் நோய்களை விரைவில் முழுவதுமாக உடலை விட்டு அகல வைக்க முடியும்.

மூலிகைகளில் நம்பிக்கை வைப்போம்! பக்க விளைவுகள் இல்லா மருத்துவம் காப்போம்!

• சித்தமருத்துவம் யாரிடமும் இல்லை. அது மக்களிடம் உள்ளது. விழிப்படைந்த மனிதர்களிடம் உள்ளது. அது மீண்டும் உலக மனிதர்களுக்கு பயன்படும் காலம் வந்து விட்டது என்பதே மறுக்க முடியாத உண்மை.

• சர்க்கரை வியாதியை குணமாக்கலாம் (பாகம் 1)

• சர்க்கரை வியாதி என்றவுடன் அனைவருக்கும் பொதுவாக பயம் தோன்றி விடுகிறது. இது ஏதோ குணப்படுத்த முடியாத வியாதி என்று. ஆனால் இவ்வளவு பயம் கொள்ளுமளவிற்கு சர்க்கரை வியாதி ஒரு கொடும் வியாதியா? என்றால் இல்லை என்று நான் உறுதிபடச் சொல்வேன். அது மட்டுமல்ல பல சர்க்கரை வியாதியஸ்தர்களை நாம் குணப்படுத்தியும் இருக்கிறோம். சிறு வயதினருக்கு வரும் சர்க்கரை வியாதியையும் (JUVENILE SUGAR COMPLAINT) குணப்படுத்தலாம். எமது அனுபவத்திலேயே இது நான் பார்த்தது.

• சர்க்கரை வியாதி என்றால் ஆங்கில மருத்துவம் என்ன கூறுகிறது. இரத்தத்தில் சர்க்கரையின் அளவு 90 -140 (4.0 mmol/L to 7.0 mmol/L கனடாவில்) வரை (நம் நாட்டு அதாவது, இலங்கை, இந்திய) உணவுப் பழக்க வழக்கங்களுக்கு எப்போதும் இருந்தால் சர்க்கரை நோய் இல்லை என்று கூறுகிறது. ஆனால் இதே அளவு இரத்தத்தில் சரியாக இருந்தும், சர்க்கரை சிறுநீரில் வெளியேறினால் அதை சர்க்கரை வியாதி என்று எடுத்துக் கொள்வதில்லை.



• சித்த மருத்துவமும் அக்கு பஞ்சரும் சர்க்கரை நோயைப் பற்றி என்ன கூறுகிறது? அதை எப்படி குணப்படுத்தலாம். ஆங்கில மருந்துகளை உட் கொண்டு வந்தாலும் சர்க்கரை நோயின் தாக்கத்திலிருந்து நோயாளர் தப்பிப்பது இல்லையே? ஆங்கில மருந்துகளின் துணையோடு சர்க்கரையின் அளவு கட்டுப்பாட்டில் இருந்தாலும், உள்ளுறுப்புக்கள் பாதிக்கப்படுவதோடு, இரத்த அழுத்தம், இரத்தத்தில் கொழுப்பின் அளவு கூடுவது, விளைவாக இருதயம் அதிக வேலைப் பழுவின் காரணமாக, இதயத் தாக்குதலுக்கு உள்ளாவது, போன்ற பிரச்சினைகள் ஏன் ஏற்படுகின்றன? முதலில் ஓரிரண்டு மாத்திரைகளில் ஆரம்பிக்கும், ஆங்கில மருந்துகள், அடுத்தடுத்து பெருகி ஒரு பெரிய பெட்டி மாத்திரைகள் வைத்து சாப்பிடும் அளவிற்கு போவது ஏன்?

• முதலில் சர்க்கரை நோயைப் புரிந்து கொண்டால் இந்த நோயை குணமாக்குவதும் எளிது. முதலில் சர்க்கரை நோய் என்பது மேகங்கள் இருபத்தியொன்றினுள் ஒன்றான மதுமேகம் என்று சித்த வைத்தியத்தில் அழைக்கப்படுகிறது. மேகங்கள் வானத்தில் ஓர் இடத்தில் நில்லாமல் எப்படி நிலையில்லாது அலைகிறதோ அதேபோல சர்க்கரை வியாதியும் உடலில் பல இடங்களில் பலவிதமான பிரச்சினையான குறி குணங்களை வெளிப்படுத்தும்.

• சிறு நீரில் சர்க்கரை வெளியேறுவதால், சிறு நீர்ப் புற வழிகளில் கிருமித் தொற்று, ஆண்குறி, பெண்குறிகளில் அரிப்பு, மற்றும் சிவந்து போதல், எரிச்சல் போன்றவை உண்டாகும். கால்களில் நமைச்சல், ஊசி வைத்து குத்துவது போல சுரீர், சுரீர் என்ற வலிகள், கால்களில் உணர்வு குன்றுவது, பெருவிரல்களில் ஆறாத புண், கால் முழுவதும் ஆறாத ரணம் (காங்கரீன் என்று ஆங்கில வைத்தியத்தில் அழைப்பார்கள் ) சிறு நீரக செயலிழப்பு, மண்ணீரல் கல்லீரல் கேடடைதல், இரத்தம் சர்க்கரை போன்ற பொருட்களால் சாக்கடையாக ஆவதால் இரத்தம் கெட்டிப்பட்டு இதயம் அந்தக் கெட்டியான சாக்கடை இரத்தத்தை உடலுக்கு அனுப்ப மிகுந்த சிரமத்துக்கு உள்ளாகுவதால் இரத்த அழுத்தம் அதிகரிப்பது.

• இதனால் இரத்தக் குழாய்கள் மூளையில் வெடிப்பதால் பக்க வாதம் வருதல், அதீத வேலையினால் இதயத் தாக்கு (HEART ATTACK) நேரிடுவது, கண்களில் இரத்தக் கசிவு, கண்களில் அழுத்தம் அதிகரித்தல், குளுக்கோமா, காதுகளின் கேட்கும் திறன் பாதிக்கப்படுதல், அதீத சர்க்கரை இரத்தத்தில் இருப்பதால் உடல் எப்போதும் சூடாகுதல், அந்தச் சூட்டைத் தணிக்க உடல் சேர்த்து வைக்கும் சளியால் சைனஸ், பாரா சைனஸ் பள்ளங்களில் சளி நிறைதல், விளைவாக முன்பக்க பின்பக்க தலைவலி கழுத்து வலி, செர்விகல் ஸ்பாண்டிலோசிஸ் என்னும் கழுத்து எலும்புத் தேய்வு, அதன் விளைவாக தலைச் சுற்றல், அதிக தாகம், அதிக பசி, அதிக சிறு நீர் கழித்தல், உடலெங்கும் சொல்ல முடியாத அளவு வலி, உடலில் எங்கு காயம் பட்டாலும் ஆறாத நிலை இவை போல இன்னும் பல நேரிடும்.

• நம் உடலில் உள்ள இரத்தச் சிவப் பணுக்களில் உள்ள ஹீமோ குளோபின், நுரையீரல்களுக்குச் சென்று ஆக்ஸிஜனை எடுத்துக் கொண்டு ஆக்ஸி – ஹீமோகுளோபின் ஆக மாறி மீண்டும் நம் தசையில், உடலில் உள்ள செல்களுக்கு ஆக்ஸிஜனை கொடுத்துவிட்டு மீண்டும் ஹீமோகுளோபின் ஆக மாற வேண்டும். ஆனால் சர்க்கரையின் அளவு அதிகரிப்பால் இந்த ஹீமோ குளோபினைச் சுற்றி சர்க்கரை ஒட்டி பிடித்துக் கொள்வதால் நுரையீரல்களுக்குச் சென்று ஆக்ஸிஜனை எடுத்துக் கொண்டு ஆக்ஸி – ஹீமோ குளோபின் ஆக மாறுவதைத் இந்தச் சர்க்கரை தடுத்து விடுகிறது.

• எனவே இரத்தம் நுரையீரல்களுக்கு போனாலும், பிறகு அங்கிருந்து உடலெங்கும் பரப்பப்பட்டாலும் பிராண வாயுவான ஆக்ஸிஜனை நுரையீரலில் இருந்து எடுக்கும், பின் உடல் அணுக் களுக்கு கொடுக்கும் பணியைச் செய்யாமல் ஒப்புக்கு சப்பாணியாக ஓடிக் கொண்டேயிருக்கும். விளைவு உடலெங்கும் உள்ள செல் அணுக்களுக்கு சரியாக ஆக்ஸிஜன் கிடைக்காமல் செல்கள் சாகும். இதனால் தான் சர்க்கரை வியாதிக்காரர்கள் உடல் மெலிந்து போவது நிகழ்கிறது. (There are a number of different human haemoglobin (Hb) variants the most prevalent being HbA1, HbS and HbC. HbA1 is the most common variant making up approximately 97% of the total hemoglobin in normal adult red blood cells. HbS is a haemoglobin variant associated with sickle cell anemia which occurs predominantly in African Americans. HbC is another haemoglobin variant found in people of African ancestry including African Americans and West Indians.)

• பொதுவாக சர்க்கரை வியாதி முற்றி மோசமாக இருப்பவர்களுக்கு இந்த (HbA1) சர்க்கரை ஒட்டிக் கொண்டுள்ள ஹீமோ குளோபின் அளவு 14% அளவில் இருக்கும். சித்த வைத்தியத்தில் இந்த வியாதியஸ்தர்களைக் குணமாக்கும் போது 5 லிட்டர் இரத்தத்தில் 900 மில்லிகிராம் சர்க்கரை இருக்கும் ஹீமோ குளோபினில் ஒட்டிக் கொண்டுள்ள சர்க்கரையை சித்த மருந்துகள் உரிக்கும் போது அவை இரத்தத்தில் இருப்பதாகக் காட்டும். சித்த மருந்துகள் சாப்பிட்டேன் சர்க்கரை அளவு கூடி விட்டது என்று எண்ணி பயப்படுவார்கள். இரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவை வைத்து சர்க்கரை நோயைக் கணிப்பதே தவறான முறையாகும்.

• இது ஏன் என்று அடுத்த கட்டுரைகளில் பார்க்கலாம். அந்த விடயங்களுக்குப் போகு முன்னர் இந்த தொடரைப் படித்து அதிலுள்ள சில விடயங்களைக் கடைப் பிடித்தாலேயே சர்க்கரை நோயைக் கட்டுப்படுத்தி விடலாம்.

(தொடர்ந்து வரும்)

**Premi. S**
Pragati Siddha Herbal Clinic
647.278.3100



# 2016இல்...

இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் விலை அதிகரிக்கலாம். மக்கள் செலவுகளை கட்டுப்படுத்த வேண்டி ஏற்படலாம். பொருளாதார வளர்ச்சி எதிர்பார்த்த நிலையில் இருக்காது. ஆனால், புதிதாக (October 19, 2015) இல் ஆட்சி அமைத்த லிபரல் அரசு, பொருளாரதார வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக கூடியளவு பணத்தை செலவழிக்க இருப்பதாக, தேர்தல் காலங்களில் பறைசாற்றி வந்தது. தேர்தல் கால கூற்றுகளை சவாலாக எடுத்து சமாளிக்க இருப்பதாகவே புதிய பிரதமர் திரு. ஜஸ்டின் ரூடோ உறுதிப்பட கூறியுள்ளார்.

அதிகளவு பணத்தினை தெரு, வீதிகள், பாலங்கள் அமைப்பதற்கும், மேலதிகமான Subway Line களை அமைத்து அதிக சேவையை நடைமுறைப்படுத்த இருப்பதாகவும் லிபரல் அரசு கூறுகின்றது. இதனை ஒத்து கருத்துக்களையே மாகாண அரசும், நகர அரசும் கூறுகின்றது. பல ஆண்டுகளிற்கு பிறகு கனேடிய மூன்று அரசுகளும் சேர்ந்து இயங்கக் கூடிய வசதியும் வாய்ப்பும் ஏற்பட்டுள்ளது. இந்நிலைமை செயலுருவம் பெற்றால் ரொறொன்ரோவும், அதனைச்சுற்றியுள்ள பகுதிகளும் சகல வசதிகளுடன் சிறப்புறும் என்பதில் இருகேள்விகள் இருக்காது.

புதிய ஆண்டில் பொறுமையுடன் மாற்றங்களை ஏற்போம். இந்நிலைமை ஏற்பட்டால் ஆதன வியாபாரமும் புதிய நிலைமையை ஏற்படுத்தும்.

**LAW OFFICE**
**STEFANO FORTINI**
B.A., LL.B., Barrister & Solicitor
*3 Catherine Avenue,*
*Aurora, Ontario*
*L4G 1K4*
*Tel: 416.999.4376*
*Fax: 905.727.7017*
*Email: sfortini@rogers.com*

# 2016 இல் ஆதன வியாபாரம்

## நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

**தொடர் - 455**




புத்தாண்டில் சகலரும் சகல வளங்களுடன் வளமாக வாழ வாழ்த்துகிறேன்.

கடந்த பல ஆண்டுகளாக ஆதனவியாபாரம், குறிப்பாக ரொறொன்ரோவையும், அதனை சுற்றிய பகுதியிலும் விலையின் அதிகரிப்பிலும் கைமாறுகின்ற வீடு, மனைகளின் எண்ணிக்கையிலும் மிகவும் ஆரோக்கிய மாகக் காணப்படுகின்றது. இது பலரிற்கு சந்தோசமானதாகவும் சிலரிற்கு குறிப்பாக முதல் தடை-வயாக ஆதனம் கொள்வனவு செய்ய இருப்பவர்களிற்கு கவலையான விடயமாகவும் காணப்படுகின்றது.

மிகக் குறைந்த வட்டிவீதம், வெளிநாட்டவர்களின் அதிக முதலீடு, புதிய குடிவரவாளர்களின் வருகை ஆதன வியாபாரத்திற்கு ஊட்டுசக்தியாகவே காணப்படுகின்றது.

### 2016 ஆம் ஆண்டில் எவ்வாறான மாற்றத்தை எதிர்பார்க்கலாம்.

புதிதாக நிதி மந்திரியாக பதவி ஏற்றுக்கொண்ட பில் மோனோ (Bill Morneau) ஆதன வியாபாரத்தின், தொடர்ச்சியான அதிகரிப்பிற்கு கடிவாளம் போட வேண்டும் என்பதற்காக, ஆதன கொள்வனவில் ஆரம்ப முதலீட்டில் ஒரு மாற்றத்தை கொண்டு வந்துள்ளார். கனடாவில் ஆதனம் (வீடு, மனை) வாங்குவதற்கு குறைந்தது 5% முதலீடு தேவை. மிகுதியை நிதி நிறுவனங்களிலிருந்து அடமானக்கடனாகப் பெறலாம். February 15, 2016 இலிருந்து புதிதாக அமலிற்கு வர இருக்கும் ஆரம்ப முதலீட்டின் நிலைமையின்படி, $500,000 இற்கு குறைவான ஆதனத்திற்கு 5% முதலீடு போதுமானது. ஆனால் $500,000 இற்கு மேலான, ஆனால் 1 மில்லியனிற்கு குறைந்த பெறுமதியுள்ள வீடுகளிற்கு 10% முதலீடு செய்ய வேண்டும்.

அதாவது $500,000 இற்கு மேற்பட்ட வீடு, மனைகளின் முதலீடு அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த மாற்றம் ஆதன வியாபாரத்தில் மாற்றத்தை ஏற்படுத்துமா என்பது காலம் தான் பதில் சொல்லும்.

கனேடிய டொலரின் பெறுமதி இறங்கி கொண்டே வருகின்றது. கனேடிய பொருட்கள் ஏற்றுமதி செய்பவர் களிற்கு அனுகூலமாக காணப்படுகின்றது. அத்துடன் வெளிநாடுகளிலிருந்து பணம் கொண்டு வந்து இங்கு முதலீடு செய்பவர்களிற்கும் கனடிய டொலரின் இறக்கம் அவர்களிற்கு அனுகூலமாகவே காணப்படுகின்றது. 2006இல் ஏற்பட்ட அமெரிக்க பொருளாதாரம் குறிப்பாகவும் முக்கியமாகவும் காணப்பட்டது. இதனைத் தொடர்ந்து அமெரிக்க வங்கி வட்டி வீதம் இறங்குமுகமாகவே வந்தது.

கடந்த ஏழு வருடங்களிற்கு மேலாக எதுவித மாற்றமும் ஏற்படாமல் பூச்சியம் என்ற நிலையிலே காணப்பட்டது. 2006 இற்கு பிற்பாடு, முதல் தடவையாக அமெரிக்க மத்தியவங்கி வட்டி வீதத்தை டிசம்பர் 16, 2015 இல் கால் வீதம் (1/4%) அதிகரிப்பை ஏற்படுத்தியுள்ளது. ஏற்கனவே இறங்குமுகமாகவே காணப்பட்ட கனேடிய டொலரின் பெறுமதிக்கு மேலும் தாக்கம் ஏற்பட்டுள்ளது. ஏறக்குறைய 0.72% US$, டிசம்பர் 17, 2015 கனேடிய டொலரின் பெறுமதிக்கு சமனாக வந்துள்ளது. கனேடிய டொலரின் இறங்கு முகம், கனேடியர்களின் வெளிநாட்டு பிரயாணம், குறிப்பாக அமெரிக்க பிரயாணத்திற்கு தடைபோட்டுள்ளது.

ஏற்கனவே நலிவு நிலையிலிருக்கும் கனேடிய பொருளாதாரத்திற்கு அமெரிக்க வட்டிவீத அதிகரிப்பு மிகவும் சிக்கலான நிலைமையை உருவாக்கியுள்ளது. அமெரிக்க வட்டி வீத அதிகரிப்பு கனேடிய வட்டிவீதத்தை அதிகரிக்க வேண்டிய நிலையை ஏற்படுத்தியுள்ளது. ஆனால் கனேடிய பொருளாதாரம் அதற்கேற்ற சூழ்நிலையில் இல்லை. எனவே கனேடிய டொலரின் பெறுமதி குறையவே செய்யும். வெளிநாட்டவர்களின் வருகை அதிகரிக்கலாம். ஆனால் உள்நாட்டவர்களின் வெளிநாட்டுப் பயணம் இறுக்கம் அடைந்துள்ளது.

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

**HomeLife/GTA Realty Inc.** Brokerage*

"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"

*Raja Mahendran*, P.Eng.
Broker / Owner
* INDEPENDENTLY OWNED AND OPERATED



5215 Finch Ave, E, #203, Toronto, ON :416.321.6969

**BAKERY FOR SALE**

**Well Established Bakery in East Scarborough**

- 10 Highrise Condos. / Apartment
- 4 Schools (Public & Catholic)
- TTC, Community Centre, Professional Offices, library Church.....
- Bakery Equipments Cooler & Other Accessories (Fixtures are included)
- Reasonable Rent - For Quick sale

**ZONED LAND FOR SALE**

**SCARBOROUGH**

- 2 Storys
- Total 10, 000 Sqft.
- Recently build for professional building
- Main floor Retail / Restaurant
- Over 25 outside parking

**PROFESSIONAL OFFICE SPACE AVAILABLE**

**MCCOWAN & FINCH**

Upto 1800sq.ft 2 Exclusive Parking, 2 Lockers. Available Only For Professional Office.
Location : GTA Square (2nd Floor)
Separate Washroom Available.

**FREE STANDING BUILDING FOR SALE**

**MEADOWVALE & LAWRENCE AREA**

- Over 35,000 sqft.
- Ample parking - all around the building
- Drive through (1)
- Dock Parking (4) - Easy to divide

# அத்தனைக்கும் ஆசைப்படு!



ஒரு குறிப்பிட்ட வயது வந்தவுடன் உங்களுக்குச் சம்பாதிக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் வந்து விடுகிறது. எந்தத் தொழிலைத் தேர்ந்தெடுத்தாலும், மற்றொன் று அதைவிடச் சிறப்பாகத் தோன்றுகிறது. அதற்கு மாறமுடியுமா என்று மனம் அலைபாய்கிறது. ஆசை ஒன்றிலிருந்து மற்றதுக்கு மாறிக்கொண்டே இருப்பதால், அதன் இலக்கு மசமப்பாகி விடுகிறது.

இசையில்தான் என் ஆர்வம் வயிற்றுப் பாட்டுக்கு ஏதாவது வேலைக்குப் போயாக வேண்டியிருக்கிறதே! என்று என்னிடம் ஓர் இளைஞன் கேட்டான்.

அவன் எந்த மாதிரி வேலைக்குப் போக வேண்டும்? இசைக் கருவிகளை விற்பனை செய்யும் கடையில் தரையைக் கூட்டுபவ னாகக் கூட வேலைக்குச் சேரத் தயாராகி இருக்க வேண்டும். இசைக் கருவிகளைத் சுத்தம் செய்தாலும் நூறு சதவிகிதி ஈடுபாட்டுடன் செய்யத் தயாராயிருக்க வேண்டும். இப்படி முழுமையாகத் தன்னை அர்பணித்துக் கொண்டு இந்த வேலைகளில் ஈடுபட்டால், அவன் எப்படி மலர வேண்டுமோ, தானாக அப்படி மலர்ந்து விடுவான்.

எந்தத்து துறையைத் தேர்ந்தெடுப்பது என்று தீர்மானிப்பதற்கான புத்திசாலித்தனம் உங்களிடம் இல்லையா?

ஒன்று செய்யுங்கள். இப்போது எந்தச் செயலில் இருந்தாலும் அதில் முழுமையாக உங்களை ஈடுபடுத்திக் கொள்ளுங்கள். முழுமையாக என்றால் இதயத்தையும் உயிரையும் அதற்காக ஒப்படைக்கத் தயா ராயிருக்கும் முழுமை, செய்வதை நூறு சதவிகித ஈடுபாட்டுடன் செய்தால், உங்கள் உள்ளுணர்வு உங்களைச் சரியான பாதைக்குத் தானாக அழைத்துச் செல்லும்.

சந்தோஷமாக வேலை செய்வதாக உணர்ந்தால் மட்டுமே உங்களால் முழுமையாக செயலாற்ற முடியும். கட்டாயத்துக்காக வேலை செய்வதாக நினைத்து விருப்பம் இல்லாமல் செய்தீர்கள் என்றால், ரத்தக் கொதிப்பும், அல்சரும் மற்ற மனநோய்களும் கூப்பிடாமலே வந்து உள்ளே உட்கார்ந்து செல்லும்.

சங்கரன்பிள்ளை ஒருமுறை ரயிலில் பயணம் செய்தார். வசதியான இருக்கை கிடைத்து உட்கார்ந்தார். அதன் பின்னும் தன் தலை மீதிருந்த பயண மூட்டையை அவர் இறக்கிக் கீழே வைக்கவில்லை. டிக்கெட் பரிசோதகர் வந்தார். உணவு விற்பவர் வந்தார். மூட்டையை வைத்துக் கொண்டு சங்கரன்பிள்ளையால் எந்த இயல்பான வேலையையும் செய்ய முடியவில்லை.

சக பயணிகளில் ஒருவர் கேட்டார்...'ஐயா, பெரிய மூட்டையாக இருப்பதால், கீழே இறக்கி வைக்க உதவி தேவைப்படுகிறதா?'
'அதெல்லாம் இல்லை!'

'ஓ, மூட்டையில் விலை உயர்ந்த பொருள் ஏதாவது வைத்திருப்பீர்கள். திருடர்களைப் பற்றிய பயம் இருந்தால், மூட்டையைக் கீழே வைத்து அதன் மீது நீங்கள் உட்காரலாமே?'

'இல்லையில்லை, எல்லாம் பழைய துணிகள் தான்!'

'அப்புறம் அதை எதற்காகத் தலை மீது சுமக்கிறீர்கள்?'

'என் பாரத்தை அநாவசியமாக இந்த ரயில் மீது சுமத்தக்கூடாது என்று பார்க்கிறேன்' என்றார் சங்கரன்பிள்ளை.

சங்கரன்பிள்ளையைப் போல சுமைகளை இறக்கி வைக்கத் தெரியாதவர்களால் எதை ஒழுங்காகச் செய்யமுடியும்? குடும்பத்தையே தோள் மீது சுமப்பதாக நினைத்து நினைத்து துக்கத்துடன் வேலை செய்பவர்களுக்கு எந்த ஆசை நிறைவேறும்?


தயவு செய்து உங்கள் மன பாரங்களை இறக்கி வையுங்கள். செய்வதைக் சந்தோஷமாகச் செய்யுங்கள்.

நீங்கள் செல்ல வேண்டிய ரயில் நான்கு மணி நேரம் தாமதமாகப் புறப்படும் என்று சொல்லி விட்டார்கள். உலகமே முடிவுக்கு வந்து விட்டது போல் அத்தனை பெரியவர்களும் முகத்தைத் தூக்கி வைத்துக. கொள்வீர்கள். காத்திருக.கும் நான்கு மணி நேரத்தையும் முள் மேல் உட்கார்ந்து, ரயில்வேயை விடாமல் சபித்துக் கொண்டிருப்பீர்கள்.

ஆனால், பயணத்துக்காகக் காத்திருக்கும் குழந்தைகளைக் கவனியுங்கள். கைக்குக் கிடைத்த சிறு பொருள்களை வைத்து, அவர்கள் இருக்கும் இடத்தில் ஜாலியாக விளையாடியபடி எந்தத் துக்கமும் இல்லாமல் இருப்பார்கள்.

தேவையில்லாமல் அவர்கள் தங்களை வருத்திக் கொள்வதில்லை. கிடைத்த தருணங்களைச் சந்தோஷமாக அனுபவிக் கிறார்கள். அதிகச் சிரமம் இல்லாமல் தங்கள் வாழ்க்கையைப் பூரணமாக்கிக் கொள்கிறார்கள்.

ஆனால் நீங்களா? வாழ்க்கையை சந்தோஷமாக்கிக் கொள்ள உங்களையோ



## சத்குரு வாசுதேவ்

வருத்திக் கொள்கிறீர்கள். ஆனாலும் சந்தோஷத்தை அனுபவிக்கத் தெரியாமல் தோற்றுவிடுகிறீர்களே?

மனதைக் துக்கமும் படபடப்பும் அழுத்தாமல் பொறுப்புடன் என்னை செய்ய வேண்டுமோ அதைச் செய்யுங்கள்.

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru**: www.innerengineering.org

இந்த ரயில் இல்லை என்றால், பஸ் பிடிக்கலாம். டாக்ஸி பிடிக்காமல் வேறு வாகனங்கள் கிடைக்குமா என்று பார்க்க லாம். எதுவும் கிடைக்க வாய்ப்பில்லை என்றால் காத்திருக்க கிடைத்த நேரத்தை ஆனந்தமாக இருந்து செலவு செய்யலாம்.

துக்கப்படுவதால் மண்பாரம் குறையப் போவதில்லை. சந்தோஷமாக மனிதர்கள் தான் எந்த வேலையையும் சிரமமில்லாமல் விளையாட்டாகச் செய்யமுடியும்.

## குருவிடம் ஒரு குறுக்கு விசாரணை!

**'மதமாற்றம் பற்றி உங்கள் கருத்து?'**

'மனிதன் தனக்குள் இருக்கும் இறைத்தன்மையை உணர்வதற்கான வாய்ப்பளிக்க, அவன் உள்நோக்கி அடியெடுத்து வைப்பதற்காகவே மதங்கள் உருவாக்கப்பட்டன. தெருவில் கூவி விற்பதற்காக அல்ல.

எண்ணிக்கையைக் கூட்டிக் காட்ட வேண்டும் என்பதற்காக எதையும் செய்யத் துணியும் மூர்க்கத்தனத்திற்குப் பெயர் மதம் அல்ல.

'நான் நம்பும் கடவுளை நீயும் நம்பு... இல்லையென்றால், கொன்று விடுவேன்' என்று கத்தி முனையில் திணிப்பது மதமல்ல. அதேபோல, பசியும் ஏழ்மையுமாக இருப்பவர்களுக்கு உணவும் கல்வியும் கொடுப்பது உன்னதமான செயல்தான். ஆனால் சாப்பாட்டைக் காட்டித் தன் பக்கம் வரச் சொல்வது எப்பேர்ப்பட்ட ஆபாசம்?

பசித்தவனுக்கு உணவுதான் கடவுள். அதை நம்பித்தான் அவன் மதம் மாறுவானே ஒழிய, அவனுக்குப் புதிய கடவுள் மேல் விசுவாசம் வந்துவிடப் போவதில்லை. தங்கள் கடவுள் மேல் உண்மையான நம்பிக்கை இருப்பவர்களுக்கு, பல்லாயிரக்கணக்கான வருடங்கள் வளர்ந்த பாரம்பரியம் மிக்க ஒரு கலாச்சாரத்தைத் தகர்த்துக் தன் பக்கம் கூட்டம் சேர்க்க வேண்டிய அவசியம் இல்லை.

எந்த ஒரு மதத்துடனும் தன்னை அடையாளப்படுத்திக் கொள்வதை விட, ஒரு கலாச்சாரத்தோடு தன்னை அடையாளப்படுத்திக் கொள்வதே மனிதனுக்கு மேன்மையானது!'



# தமிழ் மக்கள் பேரவை எதற்காக..?

*'தமிழ் மக்கள் பேரவை'* என்ற அமைப்பின் உருவாக்கம் அரசியலில் சமகாலத்தில் பரபரப்பாக பேசப்படுகின்ற விடயமாகி விட்டது. அதுவும், வடமாகாண முதலமைச்சர் தலைமையில் இந்த அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளமை அரசி யல் மட்டத்தில் பல்வேறு ஊகங்களையும், விமர்சனங்களையும் கிளப்பி விட்டுள்ளது

கடந்த 19-12-2015 அன்று வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் தமிழ் மக்கள் பேரவை என்ற பெயரில் அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இதன் அங்குரார்ப்பண நிகழ்வு யாழ். பொது நூலகத்தில் அன்றைய தினம் மாலை ஆரம்பமாகி இரவு 9 மணி வரையில் இடம்பெற்றது. குறிப்பிட்ட தமிழ் அரசியல் வாதிகள் மற்றும் சிவில் அமைப்புக்களின் பிதிநிதிகள் என சிலர் இதில் கலந்து கொண்டனர். குறிப்பாக, ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், புளொட் அமைப்பின் வடக்கு மாகாணசபை உறுப்பினர் சிவநேசன் மற்றும் மருத்துவர்கள், மதகுருமார், உள்ளிட்டோர் இதில் கலந்து கொண்டனர். தமிழ் மக்கள் பேரவையின் தலைவராக வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். இதன் கூட்டுத்தலைவராக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் இருதய சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி பி.லக்ஷ்மன் தெரிவு செய்யப்பட்டார். அத்துடன், அரசியல் விடயங்களைக் கையாளவும், கலாசார சீரழிவுகளை கட்டுப்படுத்தவும் என இரு உபகுழுக்கள் அமைக்கப்பட்டன. நடைபெற்ற இந்த அங்குரார்ப்பணக் கூட்டத்திற்கு ஊடகவியலாளர்கள் எவரும் அனுமதிக்கப்படவில்லை. கூட்டம் நிறைவடைந்து, கலந்துகொண்ட பிரதிநிதிகள் வெளியே வந்தபோது அங்கு காத்திருந்த ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் பதிலளிக்கவில்லை. அவர் வாகனத்தில் ஏறும்போது, சுரேஸ் பிரேமச்சந்திரனையும். கஜேந்திர குமார் பொன்னம்பலத்தையும் காட்டி "*அவர்களிடம் கேளுங்கள்*" என்று கூறிவிட்டு சென்று விட்டார்.



சுரேஸ் பிரேமச்சந்திரனும், கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் ஊடகவியலாளர்களுக்கு சில விளக்கங்களை முன் வைத்தனர். தமிழ் மக்கள் பேரவை அரசியல் கட்சியாக உருவாகும் நோக்கத்தில் அமைக்கப்படவில்லை எனவும், இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் தமிழ் மக்களின் கருத்துக்களை உள்வாங்கி அது தொடர்பில் ஆராய்வதும், ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் பொறுப்புக் கூறலை கண்காணித்தல் போன்ற விடயங்களை கையாள்வதும், அத்துடன், தமிழ் மக்களின் கலாசார பண்பாட்டு விழுமியங்களைப் பாதுகாத்தல், கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட சமூக மேம்பாட்டில் கரிசனை கொள்ளுதல், பொருளாதாரத்தை - வளப்பயன்பாடுகளை உச்சமாக்குதல் உள்ளிட்ட பல்வேறு மக்கள் நலப்பணிகளை நோக்காகக் கொண்டு இவ்வமைப்பு உருவாக்கப்பட்டுள்ள தென்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி மற்றும், சில தமிழ்கட்சிகளின் செயற்பாடுகள் இலங்கை அரசாங்கத்திற்கு துணை போவதாகவும், இனப்பிரச்சினைக்கான பேச்சுக்கள் கூட இடம்பெறவில்லை என்றும், எதிர்காலத்தில் இந்த அமைப்பு தமிழ் மக்களின் நலன் சார்ந்து செயற்படவுள்ளதாகவும் கூட கருத்துக்கள் வெளியிடப்பட்டன. இந்த அமைப்பு தமிழ் தேசியக்கூட்டமைப்பிற்கு எதிரானது அல்ல என திரும்பத் திரும்ப கூறப்பட்டு வந்தாலும், இதுவரை காலமும் தமிழ் தேசியக்கூட்டமைப்பின் தலைமை தமிழ் மக்களின் பிரச்சினைகளை சரியாக கையாளாத காரணத்தால் இவ்வாறானதொரு அமைப்பின் தேவை ஏற்பட்டுள்ளது என்ற கருத்து இதனூடாக முன் வைக்கப்படுகின்றது. அண்மையில் சுரேஸ் பிரேமச் சந்திரன் தெரிவித்துள்ள மற்றுமொரு கருத்தும் இங்கு கவனத்தில் கொள்ளத் தக்கது. தமிழ் மக்கள் பேரவை என்ற அமைப்பு உருவாவதற்கு, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தனே காரணம் என அவர் கூறியுள்ளார்.

"நாடாளுமன்றம் ஒரு தேசிய அரசியல் சாசனத்தை உருவாக்கும் சபையாக எதிர்வரும் ஜனவரி மாதம் தொடக்கம் மாற்றப்படவுள்ள சூழ்நிலையில், இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தை உருவாக்க வேண்டிய கடமை தமிழ் தலைமைகளிடம் உள்ளது. இத் தீர்வுத் திட்டத்தை தமிழ் மக்கள் மத்தியில் வைத்து சரியானதா அல்லது பிழையானதா என்று ஆராய வேண்டும். அதனை விடுத்து, கூட்டமைப்பின் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் தெரியாமல் ஒன்று அல்லது இரண்டு பேர் தாங்கள் விரும்பியவாறு அரசாங்கத்துடன் பேசுவது யாராலும் ஏற்றுக் கொள்ள முடியாது. தமிழ் மக்களின் தலைவிதி ஒரிருவரின் கைகளில் இல்லை.



இதனை சம்பந்தன் சரியாக கையாண்டிருந்தால் தமிழ் மக்கள் பேரவை உருவாக வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது" இவ்வாறு சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்திருக்கின்றார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு அல்லது, அதன் தலைவர் சம்பந்தன் அவர்கள் இந்த விடயங்களை சரியாக கையாளாத காரணத்தினாலேயே இவ்வாறான அமைப்பு ஒன்று தோற்றுவிக்கப்பட்டுள்ளது என்பதாகத்தான் அவரது கருத்து வெளிப்படுகின்றது.

**- விகிர்தன் -**

தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்குள் நிலவுகின்ற முரண்பாடுகளை இதிலிருந்து நாம் புரிந்து கொள்ள முடியும். உண்மையில், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் வடமாகாண முதலமைச்சர் மற்றும், உறுப்பினர்களும் ஒன்றிணைந்து தமிழ் மக்களின் முக்கியமான விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்து முடிவுகளை எடுக்க வேண்டும். அவ்வாறான செயற்பாடுகள் கூட்டமைப்பில் இடம் பெறுவதில்லை. இதன் காரணமாகவே இன்று இவ்வாறு ஒரு அமைப்பை ஏற்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்டுள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பிரநிதிகள் அனைவரும் ஒன்றிணைந்து தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்காக குரல் கொடுக்க வேண்டும், பிரச்சினைகான தீர்வினைப் பெற்றுத்தர வேண்டும் என்பதே அவர்களை தெரிவு செய்த தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு. பிரச்சினைகள் குறித்து ஆராய, ஆய்வுகளை மேற்கொண்டு ஆலோசனைகளை வழங்க ஒரு அமைப்பு அத்தியாவசியமானது. இதற்காக தமிழ் மக்கள் மத்தியிலுள்ள புத்திஜீவிகள், நிபுணர்கள் உள்வாங்கப்பட்டு ஒரு சிந்தனை மையத்தை ஏற்படுத்துவது என்பது சிறந்த தொரு செயற்பாடே. ஆனால், தற்போது தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமையுடன் முரண்பாடுகளைக் கொண்டவர்களாலேயே இந்த அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இதுவே, தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு மாற்றாக இது உருவாக்கப்பட்டுள்ளதா என்கின்ற கேள்வியையும், விமர்சனங்களையும் இன்று ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலைமைகளால் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்குள் குழப்பங்கள், முரண்பாடுகள் மேலும் நீடிப்பதை தமிழ் மக்கள் விரும்பவில்லை. தமிழ் தேசியக் கூட்டமைப்பை பிளவுபடச் செய்வதற்கு நீண்ட காலமாகவே சில சக்திகளால் பல்வேறு முனைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. முரண்பாடுகள் காணப்பட்டாலும் கட்சி பிளவடையும் விதமான நடவடிக்கைகளில் தமிழ்தேசியக் கூட்டமைப்பிற்குகள் அங்கம் வகிக்கும் கட்சிகள் எதுவமே இதுவரை ஈடுபடவில்லை. தமிழ் தேசியக் கூட்டமைப்பு பிளவடையுமானால், பேரினவாத சக்திகளுக்கே அது வாய்ப்பானதாக அமையும். அதனால் இந்த கூட்டமைப்பு சீர்குலைவது நல்லதல்ல.

தமிழ் மக்களின் பிரச்சினைகளை ஆராய்ந்து சரியான தீர்வுத் திட்டங்களை முன்வைக்க அரசியல்வாதிகளுக்கு அப்பால், சமுக செயற் பாட்டாளர்கள், புத்திஜீவிகள், நிபுணர்களின் தேவை உள்ளது. எனவே, தற்போது உருவாக்கப்பட்டுள்ள தமிழ் மக்கள் பேரவை இதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொள்ளும் அமைப்பாக செயற்படுவதே நல்லது.

இந்த அமைப்பு தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்குள் முரண்பாடுகளை ஏற்படுத்தாமல், அக் கூட்டமைப்பை வழிநடத்தும் பணிகளை மேற்கொள்ள வேண்டும். அதற்கான சிவில் பிரதிநிதிகள் சிலர் இந்த அமைப்பிற்குள் உள்வாங்கப்பட்டுள்ளனர். மேலும் பல நிபுணத்துவம் வாய்ந்தவர்களும் இதற்குள் உள் வாங்கப்பட்டு தமிழ் மக்களுக்கான ஒரு சிந்தனை மையமாகவும், (Think tank) தமிழ் தேசியக் கூட்டமைப்பை சரியான செல்நெறிக்குள் இட்டுச் செல்லும் அமைப்பாகவும் இது திகழ்வதே பொருத்தமானதும் சிறந்ததுமாகும்.


APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6



# லூசியின் வயது 3.2 மில்லியன் வருடங்கள் தமிழ்த்தாயின் வயது 2,047 வருடங்களா?




லூசியினுடைய எலும்புக்கூட்டை கண்டு பிடித்த 41ஆவது ஆண்டை 2015 நொவம்பர் 24இல் Google நிறுவனம் வழமைபோல் ஒரு புதிய Doodle ஐ வடிவமைத்து கொண்டாடியதை கணினி பாவிக்கும் எல்லாரும் அறிந்திருப்பீர்கள்.


Tom Gray மற்றும் Donald Johanson ஆகிய மானிடவியல் (Paleoanthropologist) ஆராய்ச்சியாளர்கள் எதியோப்பியா வில் Hardar என்ற இடத்தில் புதைபொருள் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த நேரம் 1974 நொவம்பர் 24இல் கை எலும்பு ஒன்றை கண்டார்கள். அதைத் தொடர்ந்து மண்டை ஓடும் பின்னர் வேறு சில மனித எலும்புகளையும் கண்டார்கள். படிப்படியாக ஒரு முன்னாள் மனிதனின் (Hominid) 40 வீதமான எலும்புகளின் பாகங்களை கண்டு எடுத்தார்கள். இதில் என்ன புதினம் என்கிறீர்களா? அதாவது இந்த எலும்பு ஆதி மூதாதை யரிடம் இருந்து குரங்கினமும் மனித இனமும் இருவேறு இனங்களாக பிரியத் தொடங்கிய காலத்து மனிதனுடைய எலும்புக்கூடாகும். மனித இனம் முதன் முதலில் நிமிர்ந்து நடக்கத்தொடங்கிய காலத்து மனித எலும்புக் கூடு இதுவாகும்.

அப்போது இந்த எலும்புக்கூட்டின் வயது என்னவாக இருக்கும் என கேட்கத் தோன்றுகிறதா? அதுதான் நான் ஏற்கனவே தலையங்கத்தில் கூறிவிட்டேனே. இந்த எலும்புக்கூட்டை கொண்ட பெண் இன்று உயிரோடு இருந்தால் அவளின் வயது 3,200,000 வருடங்கள் ஆகும்.

அன்று Tom இற்கும் Donald இற்கும் இருந்த மகிழ்ச்சியில் இரவு முழுவதும் அவர்கள் போட்ட குடியும் கும்மாளத்தின் போது அக்காலத்தில் பிரபல்யமாக இருந்த Beatles இன் பாடலான 'Lucy in the sky with diamonds' ஐ திரும்பத்திரும்ப போட்டுக் கேட்டார்கள். அதனால் அடுத்த நாள் தாம் கண்டுபிடித்த பெண்ணின் எலும்புக்கூட்டிற்கு 'Lucy' என பெயர் வைத்தார்கள். அந்த எலும்புக்கூடு எவ்வாறு பெண்ணின் உடையது என்று தெரியும் மற்றும் அதன் வயதை எவ்வாறு நிர்ணயித்தார்கள் என்பது பற்றி எல்லாம் உங்களிற்கு அறிய ஆவல் இருந்தால் Googleஇல் தேடுங்கள்.

தற்போது இந்தக் கதையை இங்கு ஏன் சொல்ல வந்தேன் என்ற விடயத்திற்கு வருவோம். இந்த 3அடி 7அங்குலமும் 64 இறாத்தல் நிறையும் உள்ள Lucy யை நீங்கள் எதியோப்பியாவின் தேசிய அருங் காட்சியகத்தில் பார்க்கலாம். அதாவது மனித இனம் பூமியில் 3.2 மில்லியன் வருடங்களுக்கு முன்னரே தோன்றி விட்டது என்பதற்கான விஞ்ஞான பூர்வமான உறுதிப் படுத்தலை நீங்கள் இப்போது எந்தவித ஐயத்திற்கும் இடமில்லாமல் தொட்டு உணரலாம் அல்லது படித்து அறியலாம்.

ஆனால் கல்தோன்றி மண்தோன்றா காலத்திற்கு மூத்த குடி தமிழர் என பெருமையுடன் கூறும் நாம் தமிழ் மொழிக்கு வயது ஆக 2047 வருடங்கள் என்பது எவ்வளவு அறிவீனம். அதைவிட மிகவும் மூடத்தனமான வாதம் வள்ளுவர் பிறந்த திகதியை கற்பனையாக ஜனவரி 15 கி.மு. 31 என எடுத்துக்கொண்டு அதில் இருந்து தமிழ் ஆண்டுகளை எண்ணக் கோருவதுதான்.
உலகப்பொதுமறையாம் திருக்குறளை இயற்றிய திருவள்ளுவர் பிறந்தது எப்போது என பல சரித்திரவியலாளர்களும் இலக்கியத்துறையைச் சேர்ந்தவர்களும் ஆராய்ச்சிகள் மேற்கொண்டுள்ளார்கள். ஆனால் இதுவரை எவராலும் திருவள்ளுவர் எந்த ஆண்டு பிறந்தவர் என சரித்திரபூர்வமான எந்த ஆதாரத்துடனும் நிரூபிக்க முடியவில்லை.



முனைவர் பா. இறையரசன் சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ் முதுகலைப் பட்டம் பெற்றவர். பின்னர் பல தமிழ் ஆராச்சிகள் செய்து முதுமெய்யியல் மற்றும் முனைவர் பட்டங்கள் பெற்றவர். இவர் தனது ஆராய்ச்சி மூலம் திருக்குறள் நூலின் சிறப்பு மற்றும் காலம் பற்றி எழுதுகையில் பின்வருமாறு கூறுகின்றார். கிறிஸ்துவிற்கு முன்னர் (கி.மு) 245 ஆம் ஆண்டளவில் தமிழ்நாட்டின் ஒரு பகுதியை ஆண்ட நார்முடிச் சேரல் என்னும் மன்னனை பாடிய புலவர் மாமூலனார் திருவள்ளுவரைப் பற்றி பாடி இருப்பதாலும் கி.மு 205 ஆம் ஆண்டில் இலங்கையை ஆண்ட எலேல சிங்கன் என்றும் அரசன் திருவள்ளுவரின் நண்பனாக இருந்ததாலும் திருவள்ளுவர் கி.மு மூன்றாம் நூற்றாண்டை சேர்ந்தவராக இருக்க வேண்டும் என்கிறார். அவர் தனது ஆய்வு களின் முடிவாக திருவள்ளுவர் பிறந்தது கிறிஸ்துவிற்கு முன்னர் 231 ஆம் ஆண்டு எனக் கொள்வது தக்கது என்கிறார்.


இலங்கையை சேர்ந்த பேராசிரியர் விநாசித்தம்பி செல்வநாயகம் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் தமிழ் பேராசிரியராக இருந்தவர். இவர் தனது இளமாணிபட்டத்தை இலண்டன் பல்கலைக் கழகத்திடமிருந்தும் முதுமாணிப்பட்டத்தை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திட மிருந்தும் பெற்றவர். இவர் தமிழில் ஏராளமான ஆய்வுக்கட்டுரைகளை எழுதி யுள்ளார். பேராசிரியர் செல்வநாயகம் தனது ஆராய்ச்சிகளின் மூலம் திருவள்ளுவர் கி.மு மூன்றாம் நூற்றாண்டை சேர்ந்தவர் அல்ல. அவர் கி.பி மூன்றாம் நூற்றாண்டை சேர்ந்தவர் என்கிறார். பேராசிரியர் செல்வநாயகம் அதற்கு பல ஆதாரங்களை தனது ஆய்வுக்கட்டுரையில் விளக்கி யுள்ளார். அவற்றில் ஒன்று சங்ககாலத்தில் அதாவது கி.பி மூன்றாம் நூற்றாண்டுவரை இருந்த தமிழர் பண்பாட்டில் தமிழர்கள் மீன், இறைச்சி, கள் ஆகியவற்றை விரும்பி உண்டு இன்பக்களியாட்டங்களில் ஈடுபட்டு இருந்ததாக பண்டைய நூல்கள் கூறுகின்றன. ஆனால் சங்கம் மருவிய காலத்தில் அதாவது கி.பி மூன்றாம் நூற்றாண்டில் சமணமதம் தமிழ்நாட்டில் நன்கு பரவியிருந்தது. சமண மதக் கொள்கைகளான புலால் உண்ணாமை மற்றும் கள் அருந்தாமை போன்ற வற்றையே திருக்குறள் வலி யுறுத்துவதால் திருக்குறள் கி.பி மூன்றாம் நூற்றாண்டை சேர்ந்தது என்கிறார் பேராசிரியர். இவற்றை விட மேலும் பல ஆதாரங்களை காட்டும் பேராசிரியர் செல்வநாயகம், திருவள்ளுவர் கி.பி மூன்றாம் நூற்றாண்டை சேர்ந்தவர் எனக் கொள்வது தக்கது என்கிறார்.

மேலே குறிப்பிட்ட இரண்டு ஆராய்ச்சி யாளர்களை விட மேலும் பல தமிழ் ஆராய்ச்சியாளர்கள் திருவள்ளுவரைப் பற்றி ஆய்வு செய்து அவரது காலமாக கி.மு மூன்றாம் நூற்றாண்டில் இருந்து கி.பி மூன்றாம் நூற்றாண்டு வரையுள்ள இடைப்பகுதியில் வெவ்வேறு ஆண்டுகளை ஆதாரம் காட்டி கூறியுள்ளார்கள். இதிலிருந்து எம்மால் தெரிந்து கொள்ளக்கூடிய உண்மை என்னவென்றால் திருவள்ளுவர் எப்போது பிறந்தவர் என சரித்திர பூர்வமாகவோ அல்லது விஞ்ஞான பூர்வமாகவோ இதுவரை கண்டறியப்பட வில்லை. அவர் பிறந்தது கி.மு மூன்றாம் நூற்றாண்டில் இருந்து கி.பி மூன்றாம் நூற்றாண்டுவரை உள்ள 600 வருடங்களில் எதுவாகவும் இருக்கலாம்.

உண்மை இவ்வாறு இருக்க தமிழ் அறிஞர்கள் சிலர் 1921 ஆம் ஆண்டு முற்று முழுதாக அரசியல் காரணங்களுக்காகவும் சைவசமயத்திற்கு எதிர்ப்பு கொள்கையை காட்டவும் தமிழ்நாட்டில் ஒன்று கூடி திருவள்ளுவர் கிறிஸ்துவிற்கு முன்னர் 31 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15ஆம் திகதி பிறந்தவர் என எந்த ஒரு சரித்திர ஆதாரமும் இல்லாமல் பிரகடனப்படுத்தி னார்கள். திருவள்ளுவர் பிறந்த ஆண்டையே சரியாக இன்னும் ஆய்வுகள் மூலம் கண்டுபிடிக்க முடியாமல் இருக்கும் போது இவர்கள் திருவள்ளுவர் ஜனவரி 15 கி.மு 31 இல் பிறந்தவர் என ஒரு கற்பனை திகதியை திருவள்ளுவரின் பிறந்ததினமாக அறிவித்தார்கள்.


இதைவிட நகைப்புக்குரிய விடயமாக தமிழர்கள் தங்கள்

சிவ ஞானநாயகன்
vlambaram@sympatico.ca



தொடர்ச்சி 15ஆம் பக்கம்

CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!
• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE - TEL : 416.289.7514 / OWNER SAM - CELL: 416.732.9383
OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7



# லூசியின்...


13ஆம் பக்கத்தொடர்ச்சி

வருடத்தை திரு வள்ளுவர் பிறந்ததாக கூறப்பட்ட ஒரு கற்பனை நாளில் இருந்தே ஆரம்பிக்க வேண்டும் எனவும் இவர்கள் முடிவு எடுத்தார்கள். இந்த தமிழ் அறிஞர்குழுவில் பல தமிழ் அறிஞர்கள் இருந்தார்கள். ஆனால் ஒரு சரித்திரவியலாளரோ அல்லது ஒரு விஞ்ஞான ஆய்வாளரோ அல்லது ஒரு அகழ்வாராய்ச்சியாளரோ இருக்கவில்லை. இவர்களது முற்றுமுழுதான நோக்கம் சைவசமயத்திற்கு எதிர்ப்பு காட்டுவதாகவே இருந்தது.

இவ்வாறு இவர்கள் 1921 இல் எடுத்த தீர்மானம் தமிழ் மக்களிடையே செல்வாக்கு பெறவில்லை. 2008 ஆம் ஆண்டில் தமிழக அரசின் முதல்வர் தனது சொந்த அரசியல் காரணங்களுக்காக தமிழ் அறிஞர்கள் 1921 இல் எடுத்த தீர்மானத்தை தமிழ்நாட்டு அரசின் சட்டமூலமாக பிரகடனப்படுத்தினார். அதாவது தமிழ்நாட்டு அரசின் சட்டப்படி (சரித்திர அல்லது விஞ்ஞான ஆதாரப்படியல்ல) திருவள்ளுவர் பிறந்தது ஜனவரி 15 கி.மு 31. தமிழர்கள் எல்லோரும் கட்டாயமாக இக்கற்பனை திகதியில் இருந்துதான் தமது வருடங்களை எண்ண வேண்டும். இந்த சட்டத்தை 2011இல் ஆட்சிக்கு வந்த ஜெயலலிதாவின் அரசு தமிழ் புத்தாண்டை விரும்பிய திகதியில் கொண்டாடலாம் என மாற்றியது.

இப்போது எமக்கு இருக்கும் தமிழ் இலக்கண நூல்களில் காலத்தால் மூத்ததான 'தொல்காப்பியம்' பற்றிய தமிழ் அறிஞர்களது ஆராய்ச்சியை பார்ப்போம். திருக்குறள் பற்றிய ஆய்வுகள் போல் தொல்காப்பியம் பற்றிய ஆய்வுகள் செய்தவர்களும் பல்வேறுபட்ட காலத்தை தொல்காப்பியத்தின் காலம் எனக் கூறினாலும் எல்லோரும் ஒன்றுபடுவது தொல்காப்பியம் திருக்குறளைவிட பல ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பதில் தான்.

வித்துவான் க. வெள்ளை வாரணன்



அவர்கள் ஆராய்ச்சி செய்து தொல்காப்பியம் கி.மு 5320 ஆம் ஆண்டு எழுதப்பட்டது என பல ஆதாரங்களை காட்டி நிறுவியுள்ளார். எனவே தமிழன் தொன்மையை தமிழ் நாட்டு அரசோ அல்லது இலங்கைத் தமிழ் அறிஞர்களோ அறியவிரும்பினால் அவர்கள் தொல்காப்பியத்தின் காலத்தை சரித்திரபூர்வமாகவோ அல்லது விஞ்ஞான பூர்வமாகவோ ஆராய்ந்து அறிய வேண்டும். அதன் பின்னர் தொல்காப்பியத்தின் காலத்தில் இருந்து தமிழ் ஆண்டுகளை எண்ணலாம்.

தொல்காப்பியத்தின் காலத்தில் இருந்து தமிழ் ஆண்டுகளை எண்ணினால் தற்போது தமிழ் புத்தாண்டிற்கு கிட்டத்தட்ட 7335 ஆவது ஆண்டாக இருக்கும். இதுகூட தமிழின் தொன்மையை குறிக்காவிட்டாலும் 2047ஆம் ஆண்டு என்று ஒரு கற்பனை திகதியில் இருந்து எண்ணுவதை விட தொன்மையானதாக இருக்கும். எல்லாவற்றிற்கும் மேலாக இவ்வாறு தொல்காப்பியத்தின் காலத்தில் இருந்து கணித்தால் இது தமிழில் தற்போதுள்ள மிகத் தொன்மையான நூலான தொல்காப்பியத்தின் தோற்றத்தில் இருந்து கணிக்கப்பட்ட ஆண்டு என ஒரு சரித்திர நிகழ்வையாதல் சுட்டிக் காட்டிக் கொண்டு இருக்கும்.

தற்போது உள்ள விஞ்ஞான வசதிகளை கொண்டு DNA பரிசோதனைகள் மூலம் ஒருவரது சந்ததியைப் பற்றி அறிய முடிகிறது. எனவே கிட்டத்தட்ட 2000 ஆம் ஆண்டுகளுக்கு முன்னர் பிறந்த வள்ளுவரின் பிறந்த திகதியை ஆய்வுகள் மூலம் கண்டுபிடிப்பது ஒரு கடினமான காரியம் அல்ல. நீங்கள் கொடுக்கும் உமிழ் நீர் மூலம் 20 ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் உங்கள் முதாதையர் எப்போது எங்கே தோன்றினார்கள் என அறிய முடியுமானால் (நவம்பர் 01, 2010 விளம்பரம் இதழில் அ. முத்துலிங்கத்தின் கட்டுரை) வள்ளுவர் பிறந்ததினத்தையோ தொல்காப்பியர் பிறந்த தினத்தையோ அறிவது மிகவும் இலகுவான விடயம்.

தமிழ்நாடு அரசு வள்ளுவரது உண்மையான பிறந்ததினத்தை ஆராய்ந்து அறிய வேண்டும், அத்துடன் தொல்காப்பியம் தோன்றிய காலத்தையும் ஆராயவேண்டும். அதன்பின்னர் சரித்திரம் மற்றும் விஞ்ஞான ஆதாரங்களுடன் தமிழின் தொன்மையை குறிக்கும் ஆண்டில் இருந்து தமிழ் புத்தாண்டை கணிக்கலாம்.

இதை இன்று நாம் செய்யாவிட்டாலும் நாளை வரும் எமது இளம் சமுதாயம் நிச்சயமாக தமிழின் தொன்மை வள்ளுவரின் உண்மையான பிறந்த திகதி, தொல்காப்பியம் எழுதிய ஆண்டு போன்றவற்றை அப்போது இருக்கும் மிகவும் நவீன விஞ்ஞான வசதிகள் மூலம் இலகுவாக கண்டறிந்து சரித்திர மற்றும் விஞ்ஞான பூர்வமான ஆதாரங்களுடன் நிறுவப் போகிறார்கள். அதற்குள் எமது மூதாதையர் எமக்கு அளித்த பல விஞ்ஞான பூர்வமாக கணிக்கப்பட்ட நிகழ்வுகளை (தைப்பொங்கல், சித்திரைப்புத்தாண்டு) அரசியல் காரணங்களுக்காக கற்பனை நிகழ்வுகளாக மாற்ற வேண்டாம். இவ்வாறு செய்வதால் விஞ்ஞான அறிவு மிக்க எமது வருங்கால இளைஞர் சமுதாயம் எம்மையும் எமது செய்கைகளையும் எள்ளி நகையாடும்.


Looking for a Better JOB?

Get trained in CAREER that will lead you to a JOB




Holiday Season
SPECIAL OFFER
Refer a friend and receive
$200, $300 or a
Samsung Galaxy PAD*

நீங்கள் 2005ம் ஆண்டுக்குப்பின் வேலை இழந்தவர் ஆயின் அல்லது Maternity பெற்று மீண்டும் வேலைக்கு செல்ல முடியாதவராயின் அல்லது முழுநேர வேலையற்றவராயின் நீங்கள் அரச நிதியுதவி பெற்று உங்கள் தொழில் சார்ந்த கல்வியை பெறமுடியும்.
விபரங்களிற்கு அழையுங்கள்: 416-224-5020

* Some conditions may apply; offer ends Jan 15th, 2016.



BUSINESS / LAW CAREERS
Accounting ♦Payroll Admin / Business Administration ♦Banking and Financial Services ♦Hospitality Management ♦Paralegal / Law Clerk ♦Property Administrator ♦Hospitality Management ♦Tourism Management ♦Police Foundations/ Immigrant Consultant ♦Law and Security Officer Supply Chain & Logistics

IT CAREERS
Network Administration ♦Graphic/Web Designer ♦Software Quality Assurance and Testing Diploma ♦ Network Security Specialist ♦Web & Mobile Developer ...

HEALTHCARE & Related
Medical Office Administration ♦ECG ♦ Phlebotomy ♦Aesthetician/ Make-Up Artist ♦Hair Stylist ♦Community Service Worker ♦Personal Support Worker ♦Massage Therapist ♦Pharmacy Technician ♦Early Childhood Assistant ♦Medical Laboratory Technician ♦Food Service Worker ♦Intra Oral Dental Assistant ♦Addiction Worker ...

TRADES
Cabinetmaking ♦Construction & Maintenance Electrician Pre-Apprenticeship ♦Electrical Technology ♦Home Renovation Technician ♦Industrial and Commercial Maintenance ♦Civil / Mechanical / Engineering ♦Welding / Solar Energy Technician ...



Photo taken in 2013 at Queens Park, when Thesa Theiventhiran's client Vasu, presented his success story in finding a professional job for himself and his wife in Canada.

Second Career
Medical Office Administration
(Dated : Feb. 2015)

EENC
(Dated : July 2015)

Second Career மற்றும் அரச நிதியுதவி பற்றிய விபரங்களிற்கு அழையுங்கள்:

EENC.ca Employment and Education Network Canada Inc.
www.eenc.ca thesa@eenc.ca

தமிழில் விபரங்களிற்கு : 416-224-5020 Ext: 205
Office: (416) 224-5020

# பாடசாலை நூலகங்கள் - 8

## நிறைவுரை

இதுவரை,
(1) பாடசாலை நூலகங்களின் அவசியம்,
(2) நூலகங்களை அமைத்தலும் நிருவகித்தலும்,
(3) நூல்களைப் பகுத்தலும் பதிதலும்,
(4) அவை தொடர்பாக பிரபல நூலக விற்பன்னர் டூயி அவர்களால் முன்வைக்கப்பெற்ற தசமப் பகுப்பு முறை,
(5) நூலகங்களுக்கு வேண்டிய நூல்களைத் தெரிவுசெய்தல்,
(6) நூலகப் பாட நேரத்தைப் பயன்படுத்தும் முறைகள்,
(7) நூலகப் பொறுப்பாளரின் கடமைகள்
ஆகிய விடயங்கள் விளக்கப்பட்டன.



இவற்றால் பாடசாலைக் கலைத்திட்டத்தில் நூலகம் முக்கியமான இடத்தை வகிக்கின்றது என்பதனை பாடசாலை அதிபரும் ஆசிரியரும் நூலகப் பொறுப்பாளரும் நன்கு உணர்ந்து கொள்வர் என்பதில் ஐயமில்லை. பாடசாலை நூலகத்தின் முக்கியத்துவத்தை மேலை நாடுகள் உணர்ந்துள்ள அளவுக்குப் பல கீழைநாடுகள் உணர்ந்து கொள்ளவில்லை. அவற்றுள் எமது நாடும் ஒன்று. ஒருசில கல்விமான்கள் இதனை உணர்ந்துகொண்ட போதிலும் வசதியீனங்களாற் செயற்படுத்த முடியாத நிலையே காணப்படுகின்றது.

எமது நாட்டில் பல பாடசாலைகளில் நூலகங்கள் இல்லை என்பதே உண்மை. இருக்கின்ற பாடசாலைகளிலும் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒருசில பாடசாலைகளில் மட்டுமே நூலகங்கள் உரியமுறையில் நிருவகிக்கப்படுகின்றன.

பல பாடசாலைகளில் நூலகப் பொறுப்பாளர்கள் இல்லை. அதனால் நூலகத்தை மாணவர் செவ்வனே பயன்படுத்த முடிவதில்லை. எனினும் ஆசிரிய நூலகர்கள் உள்ள பாடசாலைக-ளில் நூலகங்களை மாணவர்கள் ஓரளவுக்குப் பயன்படுத்திவருகிறார்கள் என்பதனை அறியமுடிகின்றது.

நூல்களை அலுமாரிகளிற் பூட்டிவைத்து வடிவு பார்க்கும் மனப்பான்மை மாறவேண்டும். நூல்கள் வாசிப்பதற்குரியன. அவற்றை மாணவர் பயன்படுத்தும் வகையில் ஆவன செய்யவேண்டியது அதிபர், ஆசிரியர், மற்றும் நூலகப் பொறுப்பாளர் ஆகியோரது கடனாகும்.

வசதிப் பணத்திலிருந்து நூலகத்துக்கு நூல்கள் வாங்குவதற்குக் கல்வி அமைச்சி லிருந்து அல்லது மாநிலக் கல்வி இயக்குந ரிடமிருந்து அனுமதி பெறமுடியும். இந்தப் பணத்தைக்கொண்டே ஆண்டுதோறும் தகுந்த நூல்களை வாங்கி ஒரு நூலகத்தை உருவாக்கி வளர்ப்பதற்கான வாய்ப்பு எல்லா மகாவித்தியாலயங்களிலும் மத்திய மகாவித்தியாலங்களிலும் இருந்து வருகின்றது. இந்த வாய்ப்பைப் பல வித்தியாலயங்கள் பயன்படுத்தாமல் இருப்பது வருந்தத் தக்கது.

இலங்கையில் ஏனைய பகுதிகளிலும் பார்க்க யாழ்ப்பாணத்தில் வாசிப்புப் பழக்கம் சிறப்பான அளவுக்கு வளர்ந்திருக்கின்றது என்பது பிரிட்டிஷ் கவுன்சில் நூலகர் இரசெல் பௌடன் என்பவரின் கருத்து. எனினும் யாழ்ப்பாண மாவட்டத்திலே பாடசாலை நூலகங்கள் எதிர்பார்க்கப்படும் அளவுக்கு இயங்கிவருவதில்லை என்பதுவும் கவனிக்கப்படவேண்டிய தொன்றாகும்.

கல்வி அமைச்சு நூல்களை வாங்குவதற் கும் ஆசிரியர்கள் நூலகப் பொறுப்பாள ராகக் கடமையாற்றுவதற்கும் வசதிகளைச் செய்துவருகின்றது. அலுமாரிகள்கூட வழங்கப்படுகின்றன. நூலகம் ஒன்றைச் சிறிய அளவிலேனும் தொடங்குவதற்கு இவ்வசதிகள் போதுமானவை. இவற்றைப் பயன்படுத்தி மாணவருக்கு நூலகச் சேவைபுரிதல் பாடசாலை நிருவாகத்தின் இன்றியமையாத கடமையாகும்.

பிற்குறிப்பு

1. இக்கட்டுரை ஆசிரியர் ஓரளவு பாடசாலை நூலகப் பயிற்சி பெற்றவர். மாத்தளை புனித தோமையார் கல்லூரியிலும் வயாவி-ளான் மத்திய மகாவித்தியாலயத்திலும் நூலகப் பொறுப்பாளராகப் பணிபுரிந்தவர். யாழ்ப்பாணத்தில் 1967ஆம் ஆண்டு யூலாய் மாதம் 20ஆம் 21ஆம் திகதிகளில் வடமாநி-லக் கல்வி அதிபதியால் ஒழுங்கு செய்யப்பட்டு பிரிட்டிஷ் கவுன்சில் நூலகர் திரு. இரசெல் பௌடன் (Russell Bowden) அவர்களால் இந்துக் கல்லூரியில் நடத்தப் பெற்ற பாடசாலை நூலகப் பயிற்சி வகுப்புகளிற் பங்குபற்றியவர்.

2. இக்கட்டுரைகள் 1977ஆம் ஆண்டில் எழுதப்பெற்று ஈழநாடு வாரமலரில் தொடராக வெளிவந்தவை. ஈழநாடு தாபனத்துக்கு எனது நன்றி உரியதாகும்.

3. இவற்றின் ஒரு பகுதியைக் கொழும்பு அரசினர் ஆவணப் பிரிவிலிருந்து 2004இல் தேடி அனுப்பிய எனது மாணவரும் முன்னாள் இலங்கை வங்கி முகாமையாளரு மாகிய திரு. ஏ. அருணாசலம்பிள்ளை அவர்களுக்கும் மிகுதியை 2015 ஆகஸ்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்து பேரா. வித்தியானந்தன் நூலகத்தின் ஆவணப் பகுதியிலிருந்து எடுக்க அனுமதியளித்த நூலகர் அருளானந்தம் ஸ்ரீகாந்தலட்சுமி அவர்களுக்கும் தேடல் முயற்சிக்கு உதவி யளித்த ஆவணப் பகுதி ஊழியர் ச. கிருஷ்ணமதி மற்றும் க. ஞானேந்திரன் அவர்களுக்கும் மிகுந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

4. இப்பொழுது கனடாவில் இக்கட்டுரை களைத் தொடராக வெளியிட்டுவந்த விளம்பரம் இதழுக்கும் நன்றி பாராட்டுகின்றேன்.



**கவிஞர் வி. கந்தவனம்**

**MOHAN**
**HOMEOPATHIC CLINIC & MASSAGE CLINIC**

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



**Dr. J. Mohan**
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

**HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING**

*Cough, Flu, Depression, Anxiety, Asthma, Tonsillitis, Gout, Arthritis, P.M.S, Leucorrhea, Migraines, Hair Loss, Diabetes, Cystitis, Cancer, Prostatitis, Obesity, Hemorrhoids, Stumatitis, Colitis*

*Also other Acute & Chronic Problems*
HOMEOPATHIC PRACTITIONER

**TEL: 416-298-7537/416-291-3022**

*5200 Finch Ave, East Suite 210*
*At Middle Field, Scarborough, M1S 4Z4*

**நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்**
**இலவச ஆலோசனை வழங்கப்படும்**



சிறியோர் தொடக்கம் முதியோர்வரை இதுவரை தீராத வியாதியினால் பீடிக்கப்பட்டு குணமடையாமல் இருப்பவர்களுக்கு இயற்கை மூலிகைகளிலான தீங்கு விளைவிக்காத சூரணங்கள், குளிகைகள், லேகியங்கள், உயிர்ச்சத்துக்கள், பானங்கள் போன்றவற்றினாலும் எண்ணையினாலும் குணமடைய தகுந்த ஆலோசனை! இலவசமாக வழங்கப்படும். இது தவிர விளம்பரம் பத்திரிகை அலுவலகத்தில் “எம்மை நாம் பாதுகாப்பது எப்படி” என்ற புத்தகம் விற்பனைக்கு உள்ளது.

இலவச ஆலோசனைகளுக்கு: 647.456.9796

**வைத்திய கலாநிதி கே.ரி. கோபால்**

D.A.M.S - R.A.M.P. (SriLanka) M.H.D.C (Madras) C.D.S. _ C.N.H.P. (Canada) Herbalist - Sidha - Ayurvedic - Homeopathic & Biochemic Family Physician LG.Ayurvedic Medical Services (SriLanka)

# வைத்தியமுறையில் நாளாந்த தாவர உணவுகள்

## எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

நாம் நாளாந்தம் அன்ன ஆகாரங்களைப் பாவித்து வருகின்றோம். தாவர உணவின் இலைகள் தண்டுகளின் தன்மைகளைப் பார்ப்போம். இவற்றைச் சமைத்தோ, பச்சையாக சாப்பிடுவதுண்டு. இப்படிப் பசுமை பொருந்திய தாவரங்களில் உள்ள இரச குணவீரியங்களினால் நன்நிலை பெறுகின்றோம். தாவரங்களில் உள்ள உப்புக்கள், உயிர்ச்சத்துக்கள் உடல் நலத்திற்கு இன்றியமையாதவையாகும்.

நாம் பாவிக்கும் உணவுகளில் சத்துப் பொருள் வேண்டியளவு கிடைக்காது விட்டாலும் இலைவகைகள், கீரை வகைகளை தரம் கண்டு பாவித்து வந்தால் யாவும் நிவிர்த்தியாகும். எனவே நாம் நாளாந்தம் உணவுடன் கீரைவகைகளைப் பாவித்து வருதல் நன்றாகும்.

நார்பொருள் செறிந்து காணப்படும் கீரையானது பால்கட்டி, இறைச்சி போன்ற பொருட்களுடன் சேர்த்து நாம் எடுக்கும் போது செமிபாடு நிலையில் சில அமிலப் பொருட்கள் உண்டாகும். இவற்றை நல்ல நிலைக்கு கொண்டு வருவதற்கு உறுதுணையாக அமைகின்றது.

உணவு ஓரளவு சிறந்ததாக இருக்க வேண்டும். இல்லாவிடில் வெறும் வயிறாக இருப்பது போன்ற வெறுமைப்பசி (Hollow Hunger) தோன்றும். இந்நிலை ஏற்படா



திருக்க கீரை வர்க்க உணவு ஆகாரத்துடன் சேர வேண்டும். உணவு செமிபாடு பெற தாவரப் பொருள் இருக்க வேண்டும். இவ்வகையான நார்ப்பொருள் பொருந்திய கீரை வர்க்கம் மலச்சிக்கலை போக்கவல்லது.

காய்கறி, கீரைவகையில் ஏறக்குறைய 80-95 வீதம்வரை நீர் நிறைந்தவையாக இருப்பதினால் உணவைச் செரிப்பிக்க உதவுகின்றது. இதனால் கீரைகளும் காய்கறியைப் போல் காப்புணவுகள் (Protective Food) எனப்படுகின்றன. கீரைகளைத் தேர்ந்து எடுக்கும்போது அவற்றின் மணம், தோற்றம், சுவை, சமைக்கும் போது உண்டாகும் வாசனை என்பவற்றைப் புரிந்து கொள்ள வேண்டும். மீண்டும் இவற்றை இலகுவாக பெற்றுக்கொள்ள முடியுமா? என்பதையும் அறிந்து கொள்வது நன்று.

குடும்பங்களுக்கு உற்ற இடத்தில் உதவுதல் காய்கறி கீரைவகையேயாகும். பலவகையான தாவரவர்க்க குடும்பங்களின் இலைகள் மனிதர்களுக்கு உணவா கின்றன. இதனால் நமது சப்த தாதுக்களா-லான உடம்பு வேண்டிய, உகந்த சத்துப் பொருட்களைப் பெற்றுக் கொள்ளுகின்றன.

கீரை வர்க்கத்தை இரண்டுவிதமாகப் பாகம் செய்து சாப்பிடலாம்.

1. அவியல் - நீராவியில் அவித்தல்
2. சட்டியில் இட்டு பாகம் செய்தல் - கீரையை துப்பரவு செய்து சட்டியில் இட்டு ஓரளவு நீர் விட்டு அடிப்பிடியாமல் வேக வைத்து எடுத்தல்.


இம்முறைப்படி செய்தால் கீரையில் உள்ள உப்பும், வாசனையும் சேதப்படாமல் பாதுகாக்கப்படும்.

காய்கறி யாவும் வெப்பவடிவில் கலோரி என்று அழைக்கப்படும். இக்கலோரி உடம்பில் சக்தியை தரவல்லது.

உடம்பை வளர்க்கும் ஊட்டச்சத்து கீரை வகையில் உண்டு.

1. குமிழம் புரோட்டீன் - (Vacuoak)
2. சைட்டோ பிளாஸ்ரிக் - (Cyto plastic) புரோட்டீன்
3. குளோறோ பிளாஸ்ரிக்


வைத்திய கலாநிதி
**கே.ரி. கோபால்**
D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
Tel.: 647.456.9796

தொடர்ச்சி 19ஆம் பக்கம்


# NO MEDICAL INSURANCE

No Questions Asked! No Medical Exams! 100% Guaranteed Approval!

Recently got cancer, heart attack, any heart conditions, stroke, high blood pressure, diabetes, or any medical conditions.

- 18 முதல் 85 வயதானவர்கள் எவரும் எந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்களாயினும், எந்தக் குறைபாடு உள்ளவர்களாயினும், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தாலும் இந்தக் காப்புறுதியைப் பெறலாம்.
- விசா இல்லாதவர்கள், சுப்பர் விசாவில் உள்ளவர்களும் பெறலாம்.
- விபத்துக்களில் இறந்தால், நான்கு மடங்கு காப்புறுதித் தொகை கிடைக்கும்.



உங்கள் தற்போதைய காப்புறுதி பற்றிய சகல சந்தேகங்களுக்கும் உடன் அழையுங்கள்.
Does your current life insurance policy need a tune up please call me.

**Nimal Subramaniam**
**Cell: 416.816.7994**
**Email: neel900@hotmail.com**

Assumption Life · IA Industrial Alliance · La Capitale Financial Group


•Life Insurance • Critical Illness Insurance • Disability Insurance • Mortgage Insurance • RRSP • RESP
•Non-Medical Insurance •Travel Insurance •Super Visa Medical Coverage •Drug and Dental Plan •TFSA

# அல்சர் வராமல் இருக்க


## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்

## ULCER

அல்சரை தமிழில் வயிற்றுப் புண் என்று சித்த மருத்துவம் கூறுகிறது. வயிற்றுப்புண் என்பது ஒரு வியாதி அல்ல. நமக்கு நாமே எதிரி என்று சொல்லும்படி நாமே உருவாக்கிக் கொள்ளும் ஒரு கொடுமை தான் அல்சர் ஆகின்றது.



1. மலச்சிக்கல் காரணமாக மலமானது குடலில் தங்கி புண்ணை ஏற்படுத்துவது.
2. சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாக உணவை உண்ண வேண்டிய நேரத்தில் உண்ணாது நேரம் தவறி உண்பது. நெடு நேரம் பட்டினி இருந்து விட்டு அளவுக்கு அதிகமாக உண்பது.
3. எதற்கெடுத்தாலும் உணர்ச்சி வசப்படுவது (Tention), இந்த பழக்கத்தை மாற்ற வேண்டும்.
4. காலை, மாலை உடலிருந்து கழிவுப் பொருட்களை வெளியேற்றும் வழக்கம்.
5. ஒரு நாளில் அதிகபட்சம் இரண்டு முறை மட்டும் கோப்பி, தேநீர் அருந்த வேண்டும்.
6. மதுபானம் மற்றும் புகை பழக்கம் கண்டிப்பாகத் தவிர்க்க வேண்டும்.
7. அதிக எதிர்பார்ப்புகளுக்காக உடலையும் மனதையும் துன்புறுத்தி எதையும் செய்யக் கூடாது.
8. உணவை அளவோடு ருசித்து ரசித்து மென்று உண்பது சிறந்தது.




### அல்சரின் அறிகுறிகள்

புளித்த ஏப்பம், நெஞ்சு எரிச்சல், மலச்சிக்கல் காரணமாக பசியின்மை, உணவு உண்ணும்போது வயிற்றுவலியும், உண்டதும் வாந்தி எடுக்கும்போது வலி குறைவதும், கருப்பு நிறவாந்தி, இரத்த வாந்தி, மலத்தில் உதிரப்போக்கு. வாந்தி வருகிறதெனில் நோய் முற்றிவிட்டது எனக் கொள்ளுதல் வேண்டும். மருத்துவர் ஆலோசனைப்படி சிகிச்சை பெறுவது அவசியம்.

உணவு உண்ணும் முறை மூலம் அல்சரை கட்டுப்படுத்தலாம்.

1. தினமும் குறிப்பிட்ட நேரத்திற்கு சாப்பிட வேண்டும்.
2. பசி உணர்வு ஏற்பட்டதும் வயிற்றில் அமிலம் சுரக்கத் தொடங்கியதும் கண்டிப்பாக சாப்பிட வேண்டும். அதைவிடுத்து நேரம் கடந்து சாப்பிட்டால் சுரக்கும் அமிலம் குடலில் புண்ணை ஏற்படுத்தி விடும்.
3. அதிக சூடு, மிகவும் குளிர்ந்த உணவுகளை அவசர அவசரமாக உண்ணக்கூடாது.
4. உணவு எவ்வளவு சுவையாக இருப்பினும் அரை வயிறு சாப்பிட்டு, கால் வயிறு தண்ணீர் குடிக்க வேண்டும். கால்வயிறு காலியாக இருக்க வேண்டும்.
5. உடலின் கழிவு காலை 6-7 மணிக் குள்ளும், மாலை 7-8 மணிக்குள்ளும் தவறாது வெளியேற்றப்பட வேண்டும்.
6. துவர்ப்பு, கசப்பு சுவை உணவில் வாரம் இருமுறையாவது சேருமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். இந்த சுவை உணவுகளுக்கு குடல் புண்கள் வராமல் தடுக்கும் குணம் இருக்கிறது. வாழைப்பூ,



பாகற்காய், கறிவேப்பிலை, விளாம்பழம், மாதுளம்பழம், வேப்பிலை என்பனவாகும்.
7. காரமுள்ள, எண்ணெயில் பொரித்த, வறுவல் போன்ற உணவுகள் வயிற்றைக் கெடுக்கும். அதற்குப்பதிலாக அரை அவியல், கூட்டு வகைகள் போன்றவற்றை உணவாக உட்கொள்ள வேண்டும்.
8. உணவை நன்கு மென்று கூழாக்கி உண்ணுதல் வேண்டும். நின்றுகொண்டும் அவசரமாகவும் உண்ணலாகாது.
9. முடிந்தவரை எந்த நோயானாலும் அடிக்கடி மருந்து மாத்திரைகளை உட் கொள்ளாமல் தவிர்க்க வேண்டும்.
10. சத்தம், இரைச்சல் அதிகமுள்ள இடங்களில் இருந்து விலகியிருக்க வேண்டும். அமைதியான சூழ்நிலை அல்சர் வருவதை தவிர்க்க உதவும். மன அமைதிக்கு தியானம் (Meditation) பழக-லாம்.
11. காலையிலும், மாலையிலும் சிறிது நேரமாவது நடைப்பயிற்சி செய்ய வேண்டும். இதனால் வயிற்றின் உறுப்புகள் வலுவடையும்.
12. தினமும் உணவில் கீரைவகைகள் அல்லது பச்சைக் காய்கறிகள் சேர்த்து வர வேண்டும்.
12. அல்சருக்கு அன்னாசிப்பழம் அருமருந் தாகும்.

### அல்சரை விரட்டும் யோகா

குறிப்பிட்ட சில யோகாசனப் பயிற்சி, நாடி சுத்தி மற்றும் மூச்சுப் பயிற்சி செய்துவருவதன் மூலம் அல்சர் வராமல் தடுப்பதுடன் வந்த அல்சரைக் குணப்படுத்தவும் உதவுகிறது. ஒரு மனிதன் ஆரோக்கியமானவன் என்பதை அறிந்து கொள்ள அவனுக்கு மலச்சிக்கல் இல்லாது ஜீரண சக்தியும் சிறப்பாக இருக்க வேண்டும். அத்துடன் மன அழுத்தமும் இல்லாது இருக்க வேண்டும்.

### அல்சருக்கான யோகாசன சிகிச்சை

1. விபரீதகரணி 2. மச்சாசனம்
3. அர்த்த சலபாசனம் 4. புஜங்காசனம்
5. நாடிசுத்தி பிராணாயாமம்
6. சித்தாரி 7. கபாலபாதி கரிகை

இவற்றை ஒரு யோகாசன ஆசிரியர் மூலம் தெரிந்து கொண்டு பழக வேண்டும். அல்சர் நோயை அலட்சியப்படுத்தினால் அதிக அமில சுரப்பு ஏற்பட்டு அல்சர் முற்றி புற்று நோயாக மாறி மரணமும் ஏற்பட வாய்ப்புள்ளது.






416.289.2033 after 7:00pm
416.617.5721


# Peter Mansbridge

1968ஆம் ஆண்டிலிருந்து CBC (Canadian broadcast Corporation)இல் செய்தி வாசிப்பாளராகவும், வேறுபலவிதமான நிகழ்ச்சித் தொகுப்பாளராகவும் தொழில் புரிந்துவரும் இவர் இங்கிலாந்தில் பிறந்தவர். இவரின் தந்தை Royal Air Forceஇல் தொழில் புரிந்ததால், வெவ்வேறு நாடுகளுக்கு தொடர்ந்து செல்ல வேண்டியிருந்ததாகக் கூறும் இவர் தொழில் சார்பாகவும் வெவ்வேறு நாடுகளிற்கும், நகரங்களிற்கும் செல்வதாக கூறுகின்றார். கனேடிய நகரங்களை தவிர ஹொங்கொங், றோம் போன்ற நகரங்களும் (Hong kong), (Rome) தனது மனதிற்கு கிட்ட உள்ளதாகவும் தெரிவித்தார்.


CBC Anchor ஆக வந்ததே ஒரு சுவாரஸ்யமான சம்பவம் எனக் கூறும் இவரின் கூற்று, பலரிற்கு ஒரு உந்துதலாக இருக்கலாம். 'Transair' என்ற நிறுவனத்தில் Ticket Agent ஆக தொழில் புரியும் போது, ஒரு Announcement செய்த பொழுது அவரின் பிழையற்ற, நறுக்கான குரலை செவிமடுத்த அன்றைய CBC Manager அவரை CBC இற்கு கொண்டு வந்ததாக பெருமையுடன் தெரிவிக்கின்றார்.

இதுவரை 12 Gemini Awards (For Excellence in Broadcast Journalism), 9 Honorary Degrees Appointed, officer of the order of canada என்பன இவரின் கௌரவங்களாகும்.



உலகின் பல தலைவர்களையும், விளையாட்டு வீரர்களையும், ஆன்மீகவாதி களையும், Entertainers ஐ பேட்டிகள் கண்டபோதும், முன்னாள் இங்கிலாந்து பிரதமர் மார்க்கிரட் தட்சரின் பேட்டி முக்கியமான பேட்டிகளில் ஒன்றானதாகவும் தெரிவிக்கின்றார். ஒன்றாறியோவில் உள்ள Stratford நகரில் மனைவி Cynthia Dale உடனும் மகள் William உடனும் வாழ்ந்து வருகின்றார். தொழிலில் இருந்து ஓய்வு பெற்றபின் வெளிநாட்டு பிரயாணங்களில் காலம் செலவளிக்க இருப்பதாக தெரிவிக்கின்றார்.


ARISTO PEST CONTROL
Set Your Mind At Rest, We Will Get Rid Of The Pest
24HRS / 7 DAYS EMERGENCY SERVICES & ANIMAL REMOVAL
• Cockroach • Bedbug • Animal Control • Mice
• Bird Control • WASPS • Hornets Removal • Rat



Government Licensed Exterminator
(We Speak English, Gujarati & Hindi)
Same Day Service - Residential, Commercial, Industrial
We Also Provide No Obligation Inspection For Commercial & Residential Clients
Written Guarantee & Discounted Rates - Call Now 647.339.3926
info@aristopestcontrol.ca / www.aristopestcontrol.ca

**TBC Toronto Business College**

கணக்கியல் கல்வியில் ஓர் முதன்மை நிறுவனம்



Wishing you a very happy new year!

TBC

DIPLOMA PROGRAMS

ACCOUNTING & PAYROLL ADMIN.
35 Weeks

BUSINESS ADMINISTRATION
26 Weeks

COMPUTERIZED ACCOUNTING
26 Weeks

FOOD SERVICE WORKER (FSW)
12 Weeks (Co-op available)

MEDICAL OFFICE ADMIN.(MOA)
32 Weeks

PERSONAL SUPPORT WORKER(PSW)
26 Weeks (NACC Diploma)

SECOND CAREER

யார் தகுதி உடையவர்கள் ?

- ★ EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள்
- ★ 2005ம் ஆண்டுக்குப்பின் EI பெற்றவர்கள்
- ★ 5 வருடங்களுக்குள் Maternity / Parental Benefits பெற்றவர்கள் Diploma பாடநெறி ஒன்றைக் கற்கலாம்

Tuition Fees, Books, Living Expenses
Day care & Transportation up to $28000
visit www.secondcareerontario.com

PART TIME COURSES

Windows, Word, Excel, Power Point, Access, QuickBooks, Sage50 Accounting & Accpac 2012

Workshops
Food Handler Certification
First Aid & CPR

- 100% Instructor Led Training
- Small Class Sizes
- Student Friendly Environment
- Ample Free Parking
- Professional & Experienced Staff
- TTC Accessible
- Career Planning & Counselling

416-291-5155 / 416-451-6680

4465 Sheppard Ave. East #208
( Sheppard & Brimley ) Scarborough
www.tbcollege.com info@tbcollege.com
(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005)


# பரம் பொருளின் அருள் சுமந்து வாராய் புத்தாண்டே




- மாரீசன் -

பாரினிலே அகதிகளாய் வதிவிடத்திற் கலைகின்றோம்
நாதியற்று அமைதியற்று இறையருக்கு இறைஞ்சுகின்றோம்
ஆதரித்து அரவணைத்துக் கரைசேர்ப்பாய் புத்தாண்டே

உரிமைக்குப் போராடி உறவுகளை இழந்து ஈழ
மண்மீட்கப் போராடி அழிந்தடிமை ஆகியின்று
உயிருக்குப் போராடும் தமிழர்களைக் காப்பதற்கு
உறுதியுடன் நற்பணிமேற் கொண்டெழுவாய் புத்தாண்டே

உலகத்து வல்லரசார் ஒன்றாகத் திரண்டெழுந்து
உண்மையைப் புதைத்துவிட்டுப் பொய்யுரைத்த அதிபதிக்கு
பலமளித்துத் தர்மத்தைச் சாகடித்து இனமளித்தார்
பரம்பொருளின் அருள்சுமந்து மீட்கவாராய் புத்தாண்டே
தந்தைதாயை யிழ்ந்ததினால் தத்தளிக்கும் பிஞ்சுகளை
பந்தபாசத் தோடு வாழ்ந்து அழிந்துபோன உறவுகளால்
வெந்துமாய்ந்து உளம் தளர்ந்து உயிரிழியும் அபலைகளை
வந்தெடுக்கி இறையெனவே ஆற்றுவாயே புத்தாண்டே

நள்ளிரவில், கதவுடைத்து உள்நுழையும் கொலைஞர்களால்
கொள்ளை, கொலை, கற்பழிப்புக்குற்றங்கள் பெருக்கெடுக்க
துள்ளியெழுந்தலறுகின்ற பெண்கள் நிலை கண்டிரங்கி
அள்ளியணைத் தவர்களுக்குக் காப்பளிப்பாய் புத்தாண்டே

ஆளுகின்ற அதிபதியின் அக்கிரமச் செயல்களினால்
தாழுகின்ற மரக்கலமாய்த் தத்தளிக்கும் தமிழினத்தை
வீழுகின்ற நிலையினின்று இரட்சிக்கும் வல்லமையால்
மாளுமவர் கரம்பிடித்து வாழ்வளிப்பாய் புத்தாண்டே

தைபிறந்தால் வழிபிறக்கும் தமிழர்பலம் நனிசிறக்கும்
வையகத்தில் எங்கட்குமோர் நல்ல திஷ்டம் துளிர்க்குமெண்ணும்
ஐயமற்ற நம்பிக்கையெம் முள்ளத்தில் எழுவதனால்
கைகுவித்து உனையழைத்தோம் களிக்கவைப்பாய் புத்தாண்டே!

# வைத்தியமுறையில்...

17ஆம் பக்கத்தொடர்ச்சி

(Cholorow plastic) புரோட்டீரன்

இவை இரத்தத்திலும், மூளையிலும் ஏற்படும் வியாதிகளுக்கும் சுவாசகாசம், குஷ்டம், வாதம், பித்தம், கபம் ஆகிய வற்றுக்குப் பயன் தரலாம். கட்டிவகைகளை நன்கு மெதுமையாக்கி பழுக்கச் செய்யும். இலைகளை மென்மையாக்கி உரிய இடத்தில் பற்று போடுதல் வேண்டும். சிறுநீரில் (Urine) காணப்படும் கற்களை கரைப்பதற்கும் உதவும். மற்றும் இரைப்பை, குடல் போன்றவற்றில் ஏற்படும் அழற்சியை தணிக்கும்.

தொண்டை, மூட்டுவலி, இடுப்புவலி போன்றவற்றை அகற்றவல்லது. இருமல், சளிப்பிடிப்பு, தும்மல், நாவரட்சி யாவற்றையும் நீக்கவல்லது. கண்வலி, சிரங்குப்படை யாவற்றையும் தீர்க்கவல்லது. இலைகள், கொடிகள் புல்வெளி, வயல் வரம்புகளில் கிளைகளாக வளர்ந்திருக்கும். இவை யாவும் பயன்தரவல்லன.



எனவே நல்ல மருத்துவத்தன்மை வாய்ந்த கீரை போன்ற தாவர உணவுவகைகளை அடுத்து வரும் விளம்பர பத்திரிகையில் அறியத் தருகின்றேன்.

# அந்நியர்களும் அபூர்வ விமானங்களும்

## சுவாரசியமான அறிவியற் தகவல்களைக் கொண்ட தொடர்


# UFO's & Aliens




எப்படி, நத்தார், புதுவருட, விடுமுறை தினக் கொண்டாட்டங்கள் எல்லாம். இன்னொரு புது வருடத்துள் நுழைந்திருக்கும் நாங்கள் நல்ல புதுமைகளைக் காண்போம் என்ற நம்பிக்கையுடன் புது வருடத்துள் செல்லுவோம்.

ஏலியன்கள் பற்றிய விடயங்கள் எனது சிந்தனையில் ஏராளம் உள்ளன. ஆதிகாலம் முதலே ஏலியன்களின் செல்வாக்கானது பல்வேறு வடிவங்களில் காணப்பட்டதற்கான ஆதாரங்கள் எல்லா இடங்களிலும் சிதறிக் கிடக்கின்றன. அவற்றையெல்லாம் துருவித் துருவி ஆய்ந்து கொண்டு போனால் எங்களுக்கு வியப்பாக இருக்கும். அல்லாமலும் ஒரு முற்றுப் பெறும் நிலையினை அடையவும் முடியாது. விளம்பரத்தில் தொடர்ச்சியாகவே வருகின்ற ஒரு பகுதியாகிவிடும்.
பல நாட்டு விவகாரங்களுடனும் ஏலியன்களின் விடயங்களை இப்போது பின்னிப் பிணைத்துப் பார்க்கிறார்கள். வெறுமனே, வானிலே பறக்கும் அபூர்வ விமானத்தைக் கண்டேன், குச்சியான, நீண்ட கைகளையும் முட்டைக் கண்களையும் உடைய வேற்றுக் கிரக மனிதனைக் கண்டேன் என்பவை போன்ற பதிவுகள் மட்டுமல்லாது அமெரிக்கா, இரசியா, இன்னமும் ஐரோப்பிய நாடுகளில் எல்லாம் இப்போது பழைய சுவடுகளை, பழைய சுவடிகளைத் தேடித் தேடி ஆராய்ந்து வருகின்றார்கள். தமது செல்வாக்குகளைப் பயன்படுத்தியும் இரகசியக் களவுகளின் ஊடாகவும் மற்ற நாடுகளிலும் கூட இவர்கள் பண்டைய ஏலியன்களை தேடிவருகின்றார்கள். கிரேக்கர்களின் இதிகாசங்கள், எகிப்திய எழுத்துக்கள், படங்கள், பாபிலோனியரின் உக்கிப்போன புத்தகங்கள், சுமேரியர்களின் ஆச்சரியமான விண்ணியல் அறிவுப் பொக்கிசங்கள் என்று எல்லாமே அலசப்படுகின்றன, ஏலியன் சமாச்சரங்களுக்கா. பலவகையான ஊடகங்களின் ஊடாகவும் அவை பற்றிய விபரங்கள் வெளிவந்து கொண்டு இருக்கின்றன. வெறுமனே ஆச்சரியங்களை மட்டும் அவை சுமந்து கொண்டு வரவில்லை. பல அரிய விஞ்ஞானக் கருத்துகளை, விஞ்ஞானத் தகவல்களை எல்லாம் அவை வெளிக் கொண்டு வருகின்றன.

எமது நகர்வுகளின் இடையே அமெரிக்க அதிபர்கள் சிலர் ஏலியன்களின் செல்வாக்குப் பெற்றவர்களாக இருந்திருக்கிறார்கள் என்ற ஐயத்தைச் சுட்டிக் காட்டியிருந்தேன். எங்களது தமிழ் அறிஞர் ஒருவரையும் ஏலியன்களின் ஆய்வாளர்கள், ஏலியனின் குழந்தையாகவே கருதுகின்றார்கள். அவர் வேறு யாருமல்ல, கணித மேதை ராமானுஜர்தான். அற்புதமான கணிதச் சமன்பாடுகளை உலகினருக்குத் தந்த ராமானுஜர் தனக்கு அந்த வல்லமையைத் தந்தவர் காளி என்றே கூறுவாராம். சிறு வயதிலேயே அவ்வளவு அருமையான கணிதச் சமன்பாடுகளை அறிவியல் நிலையில் உயர்ந்திருக்கக் கூடிய ஏலியன்களின் செல்வாக்கில்லாது




ஒருவராலும் தரமுடியாது என்கிறார்கள் கணித வல்லுனர்களும் ஏலியன் ஆய்வாளர்களும். இவரது பல சமன்பாடுகளைத் தீர்க்க முடியாது இன்றைய கணித உலகம் திண்டாடுகின்றது. அச்சமன்பாடுகளின் தீர்வுகளை ராமானுஜர் எழுதி வைக்கவில்லை. தீர்வுகளை எழுதித் தனது நேரத்தினைச் செலவழிக்காது, அடுத்த அடுத்த சமன்பாடுகளுக்கான முயற்சியில் அவர் இறங்கி விடுவாராம். அவற்றை மனிதர்களிடமே விட்டுவிட்டார். இவை பற்றி முன்னரும் நான் குறிப்பிட்டு இருந்ததை நீங்கள் அறிவீர்கள். அதுபற்றிய ஆய்வுகளை விட்டு மேலும் நகர்வோம்.

உலகின் மூத்த மொழியாகிய எங்களது தமிழில், ஏலியன்களின் செல்வாக்கு அதிக அளவிற் செறிந்திருப்பது எங்களிற் பலருக்குத் தெரிவதில்லை. ஏனெனில் அதற்கான பார்வை எம்மிடமில்லை. முதலில் தமிழை உலகிற்குக் கொண்டு வந்த குறுமுனி அகத்தியரைப் பாருங்கள். அவரின் உருவ அமைப்பை வர்ணிக்கையில் அவருக்கு மனிதர்களின் உருவ அமைப்பு இருந்த போதிலும், மனிதர்களை முற்று முழுதாக அது ஒத்திருக்கவில்லை. அவர் கூட ஏலியனாக இருக்கலாம். அதைவிட அவர் கொண்டு வந்து கொடுத்த தமிழ்மொழியின் சிறப்புகளைக் கண்டால் மொழியியல் வல்லுனர்கள் ஆச்சரியப்பட்டுப் போவார்கள். உலகின் எந்தவொரு மொழிக்கும் இல்லாத சிறப்பு அம்சங்களை எங்களது தமிழ்மொழி கொண்டுள்ளது.

எழுத்துக்களின் ஒலியமைப்பு வகைகள், வல்லின, மெல்லின, இடையின வகுப்புகள், ஆச்சரியமான நெடுங்கணக்கு அமைப்பில் அவை ஒழுங்கு படுத்தியிருக்கும் விதம், அவற்றை எல்லாம் எப்படி கூறுவது. தமிழின் அந்த அழகிய, அதி முன்னேற்றமான மொழியமைப்பினைக் கண்டு இரசித்தவர்களில் நானும் ஒருவன். தமிழியல் நிலைக்கு அப்பால் நின்று விஞ்ஞானப் பார்வையில் தமிழ்மொழியை இரசித்தவர்கள் (நான் உட்பட) எவருமில்லை என்பதே எனது கருத்து. ஏனெனில் மொழி வல்லுனர்களிடம் பொதுவாகவே பரவலான அறிவியற் பார்வைகள் இருப்பதில்லை. அதிலும் எம்மவர்களிடம் சிறிதளவு கூட இருப்பதில்லை. ஒருவேளை இருந்தாலும் அவை கூட மட்டுப்படுத்தப் பட்டவையாகவே இருக்கின்றன.

என்னடா இவன் புது வருட நாளிலே ஏலியன்களையும் அவர்களது அபூர்வ விமானங்களையும் பற்றிக் கூறாது, தமிழ்மொழியைப் பற்றிக் கூறுகின்றானே எனப் பார்க்கின்றீர்களா? இப்பொழுதும் எனது மொழியின் சிறப்புகளை, அவற்றை அறியாத ஒரு சில என்னவர்களுக்கு எடுத்துக் காட்டி ஒருவித விழிப்புணர்வினைக் கொடுக்க முயற்சிக்கிறேன். கனடாவில் தமிழை புறக்கணிக்க முயலும் இளம் தலைமுறையிரைக் காணக் கூடியதாக உள்ளது. அருமையான மொழி ஒன்றினை எமது சிறார்கள் இழந்து விடக் கூடாது என்ற அங்கலாய்ப்பிற்தான் அவை, வருகின்றன. ஆனாலும் அவற்றுள் புதைந்துள்ள ஏலியன் சமாச்சாரங்களைப் பாருங்கள். அல்லாமலும் இன்னொரு விடயமும் உள்ளது.

கிட்டத்தட்ட ஒன்றரை வருடமாக விளம்பரத்தின் ஊடாக வெளிவந்த சுவாரசியமான இத்தொடரினை இவ்விதழுடன் தற்காலிகமாக முடித்துக் கொள்ளவும் இருக்கின்றேன். பலரின் பார்வையில் பல புதிய விடயங்களைக் கொண்டு வந்ததை நான் அறிவேன். ஆனாலும் இன்னொரு சுவாரசியமான தொடருடன் அடுத்த தடவை உங்களைச் சந்திக் இருப்பதனால், முற்றுப் பெறவே முடியாத இந்த அதிசயமான பகுதியை இத்துடன் முடித்து, இயற்கையின் இரகசியங்கள் என்ற தலைப்பில் இன்னொரு சுவாரசியமான விஞ்ஞானப் பகுதியில் உங்களை சந்திக்கப் போகின்றேன். அனைவரும் அறிந்திருக்க வேண்டிய விஞ்ஞான இரகசியங்களை வழமை போலவே எளிய தமிழில் விளம்பரத்தின் ஊடாக தருவதற்கு வாய்ப்பளித்த ஆண்டவனுக்கு நன்றியைக் கூறி, 16 வருடங்களுக்கும் மேலாக உங்களையும் என்னையும் இணைத்து வைத்த விளம்பரம் நிறுவனத்தாருக்கு நன்றி கூறுகின்றேன். விளம்பரம் - நீங்கள் - நான் என்ற இந்த முக்கோண இணைப்பு பலமானதாக இருக்கட்டும் என இறைவனை வேண்டிக் கொள்வோம்.

வேறு என்ன, அடுத்த தடவையிற் சந்திப்போம், சரிதானே!

உங்களது கருத்துக்களை விளம்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண்மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

- கனி -
416.261.1348
leptons@hotmail.ca





# திரை விமர்சனம் - பசங்க 2

இரண்டு குழந்தைகள்தான் பசங்க 2. தொழில், வேலை, முன்னேற்றம் என பரபரக்கும் இன்றைய நடுத்தரவர்க்க நடுத்தர வயதினர் குழந்தை வளர்ப்பில் செய்யும் தவறுகளைச் சுட்டிக்காட்டும். படம் மக்களின் பகட்டான வாழ்வு மீதான ஆசை, பெற்றோர்களின் அதீத எதிர்பார்ப்பு, ஆசிரியர்கள் பொறுப்பற்றதனம், பள்ளி களின் லாப வெறி போன்றவை குழந்தைகள் உலகை எப்படிச் சிதைக்கின்றன என்பதை மனதில் தைப்பது போல் சொல்கிறது. சின்னதாகத் தவறினாலும் பிரசாரமாக மாறி விடக்குகூடிய கதையைப் பிரமாதப்படுத்தி சுவராஷ்யமான படமாக்கியிருக்கிறார்கள்.

முனீஸ் காந்த் - வித்யா, கார்த்திக் குமார் - பிந்துமாதவி ஆகிய இரு தம்பதிகள். முனீஸ் காந்த், வங்கி மேலதிகாரியாக இருக்கிறார். கார்த்திக்குமார், என்ஜினீயர். இரு குடும்பமும் சென்னையின் வெவ்வேறு பகுதிகளில் வசிக்கிறார்கள். இவர்களுக்கு ஒரே சமயத்தில் குழந்தை பிறக்கிறது. அதற்கு முன்னும் பின்னுமான சம்பவங்களின் கோர்வைதான் படம்.

வயிற்றில் குழந்தைக்கு ஆறுமாதம் ஆகும்போதே பள்ளிக்கூடத்தில் சேர்க்க விண்ணப்பம் வாங்குகிறார்கள் நிறைமாத மான நிலையில் உங்கள் குழந்தை என்ன வாக வரவேண்டும் என்கிற மருத்துவரின் கேள்விக்கு டாக்டர் என்று பதில் சொல்கிறார்கள். அத்தோடு நிற்காமல் டாக்டராக என்ன செய்ய வேண்டும் எனச் சோதிடரிடம் கேட்கிறார்கள். இந்தத் தேதியில் இத்தனை மணிக்கு அறுவை சிகிச்சை செய்து குழந்தையைப் பிறக்க வைத்தால் டாக்டராகலாம் என அவர் சொல்ல, அதைச் செய்கிறார்கள். எல்லாம் சரியாகப் போய்க்கொண்டிருக்கிறது என நம்பும் பெற்றோர்களுக்கு அதன்பிறகுதான் குழந்தைகள் வடிவில் பிரச்சினை தொடங்குகிறது.



**- சிவதாணு -**

முனீஸ்காந்த் - வித்யா மகன், கார்த்திக் குமார் - பிந்துமாதவி மகள் இருவருமே படு சுட்டியாக இருக்கிறார்கள். ஒரு நிமிடம்கூட இவர்களைப் பிடித்து நிற்க வைக்க முடியாது. இதனால் இருவரும் குடியிருக்கும் வீடும் படிக்கும் பள்ளிக்கூடமும் மாறிக் கொண்டே இருக்கிறார்கள். இரண்டாம் வகுப்பு முடிவதற்குள் நான்கு பள்ளிகள் மாறி விடுகிறார்கள். இப்படி மாறிமாறி வரும்போது இரு குழந்தைகளும் தாம்பரம் அருகில் இருக்கும் ஒரு பள்ளியில் ஒன்றாகச் சேர்கிறார்கள். இதனால், இவர்கள் குடும்பமும் ஒரே குடியிருப்புக்கு வருகிறது. இதுவரை தனித்தனியாகச் சுட்டித்தனம் செய்துகொண்டிருந்த குழந்தை கள் ஒன்றாகச் சேர்ந்து நண்பர்களாகி கலக்கத் தொடங்குகிறார்கள்.

அதே குடியிருப்பில் குழந்தைகள் மனநல மருத்துவர் தமிழ்நாடன், அவரது மனைவி மற்றும் இரு குழந்தைகளும் வசிக்கிறார்கள். குழந்தைகள் சேட்டையைத் தொந்தரவாகக் கருதும் குடியிருப்புவாசிகள் இரு குடும்பங்களையும் காலி செய்யச் சொல்லி வற்புறுத்துகிறார்கள். இதனால், இரு குடும்பமும் குழந்தைகளை ஹாஸ்டலுக்கு அனுப்புகிறார்கள். இந்த விடயம் பற்றி அறியும் மருத்துவரான தமிழ்நாடன், குழந்தைகளுடன் தான் பேசிப் பார்ப்பதாகக் கூறுகிறார். ஆனால், அவரது வாதம் எடுபடுவதில்லை.

ஹாஸ்டலிலும் ஏகப்பட்ட குட்டி கலாட்டாக்கள் செய்யும் குழந்தைகள், அங்கிருந்து தப்பி, தங்களது வீடுகளுக்கே திரும்ப வருகிறார்கள். இப்போது மருத்துவர் தமிழ்நாடனுடன் நெருங்கிப் பழக

**தொடர்ச்சி 25ஆம் பக்கம்**



"Dream Is Yours Obligation Is Ours"

# HOMELIFE /GTA AWARD GALA 2015



TOP PRODUCER - SIVA SIVAGNANAM



2nd TOP PRODUCER - DEEPAK DANI



3rd TOP PRODUCER
RAMANAN SANTHIRASEGARAMOORTHY















HomeLife/GTA Realty Inc Broherage இன் வருடாந்த ஒன்று கூடலும் விருது வழங்கல் விழாவும் டிசம்பர் மாதம் 5ம் திகதி மாலை Chandini Banquet Hall இல் நடைபெற்றது.

# JRS AUTO TECH

**OPEN 24 HOURS**
**7 DAYS A WEEK**

## MECHANICAL & ELECTRICAL REPAIRS FOR ALL MAKES & MODELS

- Free Inspection & Diagnostics
- Complete Car & Truck Care
- Licensed Mechanics
- Insurance Work Done
- All Fluid Top Ups & A/C Repairs
- Fuel Injection Service & Muffler/ Turbos
- Courtesy Drop Off & Pick Up Available
- Purchase Any Oil Change And Receive A Free Voucher For Basic Car Wash



**SENIOR'S SPECIAL**
Free Shuttle Available for Seniors

### TIRE SPECIALS
NEW TIRES FROM **$75**
USED TIRES FROM **$35**

### FREE OIL CHANGE WITH RUST PROOFING
**$99** Car
**$120** SUV

### BRAKE JOB
STARTING FROM **$159**

### WATER PUMP TIMING BELT & LABOR
STARTING FROM
**$450** Most Cars
**$550** Most Vans

### Castrol
REGULAR OIL CHANGE **$29.95**
CASTROL OIL CHANGE **$39.95**
SYNTHETIC OIL CHANGE **$49.95**
SUV'S SYNTHETIC SPECIAL WITH FLUID TOP-UP PACKAGE FOR **$149.95**

### TRANSMISSION FLUSH
*Starting From...*
Imports $74.95
Radiator Flush $79.95
Domestic $149.95

### ENGINE CHECK WITH FREE DIAGNOSTICS
CHECK
LEXUS
FREE DTC Code Run and Inspection

## 2655 Lawrence Ave. East, Unit 5
(Midland & Lawrence, rear of the building)

## CALL SUBAS DIRECT → 416-206-9489

## Tel: 416-628-4399

Email: jrsautotech@hotmail.ca

Like, Share & Follow us at www.facebook.com/jrsautotech

*Prices subject to change. Valid with flyer. Cannot be combined with any other offers.


All Automotive Services
For The Cheapest Rates
with Best Service Possible.....
Oil Change : From $24.95
Transmission FLUID FLUSH : From $59.95
Radiator FLUID FLUSH : From $29.95
(recommended every 40,00kms or 2 years)
FULL TUNE UP : From $169.95
BRAKES & ROTORS : From $180
Open
6 Days a week
Monday - Sat
9am -6pm
SAI SELECT
AUTO SERVICE
SAI SELECT AUTO SERVICE
All kind of Mechanic works AND Towing any time
106 Select Ave, Unit-02, Toronto .ONT.M1V 4A7
416-839-4949
saiselect@hotmail.com

# வாழ்க்கைப் பயணங்கள் - 8

தொடர்கதை....

'முழு மனதோடைதான் சுதாகர் வந்து பதிவுக் கலியாணம் செய்து மோதிரமும் மாத்திப் போனவன். அமலாவை விரைவில் கனடாவுக்குக் கூப்பிடவும் எல்லா அலுவலையும் ஓடி ஓடிப் பார்த்தவன். கனடாக்காரனும் கெதியில் விசாவைக் கொடுத்திருந்தால் இப்படியெல்லாம் நடந்தி ருக்காது. ஒரு வருடமாயும் அமலாவுக்குப் போகக் கிடைக்கவில்லை. அதுக்கிடையில் புது உறவு ஒன்றில் மாட்டுப்பட்டுட்டான். இப்படி மாறுவான் என்று நாங்கள் கொஞ்சமும் நினைக்கவில்லை. பாவம் அமலா. அந்தப் பிள்ளை மருமகளாக வருகுது என்று எவ்வளவு சந்தோஷப் பட்டனாங்கள். எங்கடை ஆசையெல்லாத் தையும் இப்படிப் பாழாக்கிப்போட்டான். அமலா வுக்கு கனடா விசா வந்ததும் இங்கை கலியாணம் செய்திட்டு அங்கை றிசப்சன் வைப்பம் என்றெல்லாம் இருந்தனாங்கள். எல்லாம் இப்படியாய்ப் போட்டுது' என்று அழுதழுது சொன்னா, என்றார் ராணி.

'இந்தக் கதையெல்லாம் நாங்கள் கேட்ட கதைதானே. இப்ப என்ன வீடு தேடி வந்து பழைய ரக்கோட் போடுறா. அவ ஏதோ விசயத்தோடைதான் வந்திருப்பா. பிறகு என்ன சொன்னா' என்றாள் அமலா. 'என்ன இருந்தாலும் வீடு தேடி வந்து அழுதழுது பேசும் பொழுது அவ சொல்வதையும் கேட்கத் தானே பிள்ளை' 'பெடியன் செய்த பிழைக்கு அதுகள் என்ன செய்வது பிள்ளை' என்று அமலாவைச் சமாளிக்கப் பார்த்தார் ராணி.

'நீ சொல்றது சரி அமலா. விசயத் தோடைதான் வந்தவ. அந்தக் கதை இந்தக் கதை எல்லாம் சொல்லி கடைசியிலை டிவோர்ஸ் பேப்பரிலை உன்னோடை கையெழுத்து வேணுமாம். இனி எதுவும் நடக்கப் போறதில்லைத் தானே. இரண்டு பேரும் தங்கள் தங்கள் வழியைப் பார்க்கலாந்தானே என்றா. இது விசயமாய் எங்களோடை கதைக்கத்தான் வந்திருக் கிறா. உன்னோடை கதைத்துப் போட்டுப் பதில் சொல்லட்டாம்' என்றார் ராணி.

'அதுதானே பார்த்தனான். சோழியன் குடும்பி சும்மா ஆடாது. அப்ப விசயத்தோடுதான் வந்திருக்கிறா. அவை ஒழுங்கான ஆட்கள் என்றால் அந்த நேரம் வந்து என்னோடு கதைத்திருக்க வேணும். நான் உங்கிருந்து வெளிக்கிடமுதல் எம்மிடம் சொல்லி யிருந்தால் நான் செய்த வேலையைச் செய்து கொண்டு அங்கு உங்களோடை இருந்திருப்பன். நான் அவையை என்னைக் கனடாவுக்கு கூப்பிடுங்கோ என்று கேட்டனாங்களே? பதில் என்ன பதில். கையெழுத்துப் போட இயலாதாம் என்று சொல்லி விடுங்கோ' என்று கோபத்துடன் சொன்னாள் அமலா.

'நானும் அப்பாவும் பிறகு ஆறுதலாய் எங்களுக்குள்ளை கதைத்தனாங்கள். எங்களுக்கும் டிவோர்ஸ் பேப்பரில் கையெழுத்தைப் போட்டுத் தூக்கி எறிந்து போட்டிருப்பதுதான் நல்லம் போல தெரியுது. நீயும் வடிவாய் யோசித்து முடிவைச் சொல்லன் பிள்ளை' என்றார் ராணி.

'எல்லாம் முடிந்த கதை அம்மா. கையெழுத்துப் போட்டு மூஞ்சியிலை தூக்கி எறியிறதிலை எனக்கு ஆட்சே பனை இல்லை. நானும் கொஞ்சம் விசாரித்துப் போட்டு சொல்றன். கொஞ்ச நாளைக்கு தலையைப் போட்டு பிய்க்கட்டும். அவை எனக்கு இப்படிச் செய்தவை. ஏன் கொஞ்சம் காத்திருக் கட்டும்.' என்று அமலா சொல்ல ராணியும் 'நீ சொல்றது சரி பிள்ளை. ஏன் நாங்கள் கேட்டவுடனை செய்யணும். நாங்கள் தானே பாதிக்கப் பட்டனாங்கள். யாரும் லோயர் மாரிட்டை அட்வைஸ் எடுத்துத்தான் செய்ய வேணும் என்று அப்பாவும் சொன்னவர் என்றார்'

அமலாவின் அப்பாவும் போனை ராணி யிடம் இருந்து வாங்கி 'நடந்ததை அம்மா சொன்னவா பிள்ளை நீ ஒன்றுக்கும் யோசியாதை நாங்கள் ஒழுங்காய் அட்வைஸ் எடுத்துத்தான் செய்யவேணும். எல்லாத்தையும் கடவுளிட்டை விடம்மா. எல்லாம் நல்லதுக்கென்று எடுப்பம்' என்றார்.

'பாருங்களேன் அப்பா. இவ்வளவு நாளும் பேசாமல் இருந்து விட்டு தங்கடை தேவை வந்ததும் உங்களோடை பேச ஓடி விழுந்து தாய்க்காரி வந்திட்டா பார்த்தீங்களா? நான் உங்கை இருந்திருந்தால் அவ விட்டை நாலு கேள்வி கேட்டிருப்பன். என்னை ஒரு மோடு என்று நினைச்சாவோ' என்று அப்பாவுடனும் பொரிந்து தள்ளினாள் அமலா.

'நீ சொல்லுவது சரிதான் பிள்ளை. அவை பிழையாய் நடக்கினம் என்றதுக்காய் நாங்கள் ஏன் அவையோடை அடிபட வேண்டும். அவரவர் பிழைக்குத் தண்டனை கொடுக்க மேலே ஒருவர் எல்லாத்தை யும் பார்த்துக் கொண்டு இருக்கிறார். நீ மனத்தைரியத்தோடு இருக்க வேணும் பிள்ளை. கடவுள் என்றோ ஒருநாள் உனக்கு ஒரு நாள் நல்ல வழியைத் தருவார் பிள்ளை' என்று நடா குரல் தழும்பச் சொன்னார்.

'சரி அப்பா, அம்மா சொன்னதும் நானும் கொஞ்சம் கோபப்பட்டு விட்டன். நீங்கள் கவலைப்படாதீங்கள். அம்மா வுடனும் படபடப்பாய் பேசிப்போட்டன். அவாவை சமாதானப்படுத்துங்கோ. சரி நான் பிறகு கதைக்கிறன்' என்று அமலா சொல்ல 'சரி நான் அம்மாட்டைக் கொடுக்கிறன். நீ சொல்லிப் போட்டு வை' என்று அப்பா கூறிவிட்டு போனை அம்மாவிடம் கொடுத்தார்.

'அம்மா ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம். நான் நல்லாய்த்தான் இருக்கிறன்.' என்று சொல்லிவிட்டுத் தொலைபேசியை வைத்தாள் அமலா.

தொலைபேசியை வைத்த அமலா 'வந்த சோதனை போதாது என்று தொடர்ந்து பிரச்சினைகள் என்னைத் துரத்துகின்றனவே. கடவுளே! நானும் என்பாடும் என்று இருந்தாலும் மனதைக் குழப்பும்படியாக பிரச்சினைகள் வருகின்றதே' என்று புலம்பியவாறு சிறிது நேரம் எந்த அசைவுமின்றி சோபாவில் இருந்தாள். கண்களை இறுகி மூடியவாறு சோபாவில் சாய்ந்திருந்த அவளது அழகிய கண்கள் பொலு பொலுவென கண்ணீரை மீண்டும் பொழிந்தன. அவளால் மறக்கப்பட வேண்டிய, ஆனால் மறக்க முடியாத நினைவலை கள் மீண்டும் அவளை மின்னல் போல் தாக்கின. மனமுடைந்த நிலையில் தனிமையின் பாதிப்பும் ஒன்று சேர்ந்து வருத்த எதுவும் செய்ய மனமின்றி இருந்த அமலாவின் மனத் திரையில் நினைவுக் காட்சிகள் படமாய்த் தெரிந்தன...

(யாவும் கற்பனை) (தொடரும்...)



- அகணி -
akanisuresh@gmail.com

# பசங்க...

21ஆம் பக்கத்தொடர்ச்சி

ஆரம்பிக்கிறார்கள். தமிழ்நாடன், அந்தக் குழந்தைகள் ஹைப்பர் ஆக்டிவிட்டி உள்ள குழந்தைகள் எனக் கண்டுபிடிக்கிறார்.



பொதுவாக ஒருவரின் ஐக்யூ லெவல் 110தான் இருக்கும். இதுவே, ஹைப்பர் ஆக்டிவிட்டி உள்ள குழந்தைகளுக்கு ஐக்யூ லெவல் 130-க்குமேல் இருக்கும். இவர்களால் ஒன்றரை நிமிடத்துக்கு மேல் ஓர் இடத்தில் உட்கார முடியாது. துறு துறுவென்று எதையாவது செய்துகொண்டே இருப்பார்கள். இந்த அருமையான குழந்தை களின் பிரச்சனைகளை எப்படி அணுக வேண்டும் என்பதை மற்றவர்களுக்குப் புரியவைக்கிறார், தமிழ்நாடன்.

வாண்டுக் குழந்தைகளாக வரும் வைஷ்ணவியும் நிஜேஷும்தான் கதாநாய-கர்கள். அற்புதமாக நடித்திருக்கிறார்கள். துடுக்குத்தனமான பேச்சு, பேய் வேட நடிப்பு, ஹாஸ்டலில் பெற்றோரைப் பிரிந்து காட்டும் தவிப்பு, கிளைமாக்ஸ் மேடையில் குருவி கதை சொல்லும்விதம் என வைஷ்ணவி கூடுதல் பதக்கங்களை அள்ளுகிறார். 'இப்படியொருத்தன் இருந்தால் வீடு உருப்பட்டாப்புலதான்' என்பார்களே அந்தச் சேட்டைக்கார பையனாகவே இருக்கிறான் நிஜேஷ்.

இத்தகைய உதவிகளை பெறாது நோயாளிகள் அலட்சிப்படுத்தப்பட்டால் படுத்த படுக்கையாகி விடுவார்கள். குளிப்பது, உடை அணிவது, உணவு உண்பது, குளிக்கச் செல்வது என்பவற்றிற்கு மற்றையோரின் உதவி தேவைப்படலாம். சிலருக்கு உளச்சோர்வு (Depression) ஏற்பட்டு விடலாம். சிலருக்கு படுத்த படுக்கையில் படுக்கைப்புண் (Bedsore) ஏற்படலாம். எனவே முடியுமளவுக்கு கைத்தடி, நடைக்கருவி (Walker) என்பவற்றினை பாவித்து உதவவேண்டும்.

பக்க வாதம் வராமல் தடுக்க பல ஆலோசனைகள் உள. முக்கியமாக 30 வயதுக்கு மேற்பட்டவர்கள் தமது ரத்த அழுத்தத்தினை மாதம் ஒருமுறை அளக்க வேண்டும். உயர் ரத்த அளவு அதிகமாக இருந்தால் மருத்துவர் பரிந்துரைக்கும் மாத்திரைகளை எடுக்க வேண்டும். இதனை குறைக்க உணவுக் கட்டுப்பாடு அவசியம். ரத்த அழுத்தம் உள்ளவர்கள் அதிக உப்பு பாவனையை தவிர்க்க வேண்டும். நாளொன றுக்கு 3-5 கிராம் உப்பு போதுமானது. எம்மவர்கள் ஊறுகாய், கருவாடு, வடகம், சிப்ஸ், பொப்கோன், முந்திரிபருப்பு, புளித்தமோர் என்பவற்றினை அதிகம் உண்ணுவர். இதனை தவிர்த்தல் நலம்.

ரத்தக் கொழுப்பு மிகவும் முக்கிய பிரச்சினையாகும். அது ரத்தக் குழாய்களை அடைத்து பிரச்சினைகளை ஏற்படுத்துகிறது.

**TUTORING** KEEN TUTORING CENTRE
By Qualified & Experienced Tutors
➤ CHEMISTRY, PHYSICS, BIOLOGY
➤ FUNCTIONS, ADV. FUNCTIONS
➤ CALCULUS & VECTORS, DATA MGT
➤ SCIENCE, MATH, ENGLISH
உங்கள் கல்விக்கான சிறந்த தெரிவு
✓ High School ACADEMIC/UNIVERSITY
✓ IB &AP PROGRAMME
✓ MCAT Classes
✓ EQAO GR 3 & 6
GR 9- 12 , UNIV. 1st & 2nd Yr; "Affordable Fees"
Call: 647 341 3975 / 647 869 3974 / 416 335 5956
www.keentutoringcentre.com

ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி, பன்றி இறைச்சி, பால், வெண்ணெய், தேங்காய், பாம் ஒயில், பருப்புவகைகள் என்பவையும் நல்லதல்ல. இன்று விரைவு உணவுகள் மூலை முடுக்கெல்லாம் உள. கேக், ஐஸ்கிறீம், சொக்லேற், லட்டு, ஜிலேபி, அல்வா போன்ற இனிப்பு பண்டங்கள், தகரங்களில் அடைத்து வரும் உணவுகளை தவிர்க்கலாம் அல்லது குறைக்கலாம்.

பக்கவாதம் ஏற்பட நீரிழிவும் ஒரு காரணம் என்பதால் அதனை கட்டுப்படுத்த வேண்டும். சாதாரணமானவர்களுடன் ஒப்பிடும்போது நீரிழிவு உள்ளவர்களுக்கு 5 மடங்கு பக்க வாதம் வர வாய்ப்புள்ளது. பெண்களுக்கு இது 12 மடங்காகும். எனவே நீரிழிவு கட்டுப்பாடு மிக முக்கியம். அத்துடன் உடல் எடையையும் அதிகமாகாது பார்க்க வேண்டும். எண்ணெயில் செய்யப்பட்ட பல பண்டங்களை தவிர்க்கலாம். உடற்பயிற்சி யும் நடைப்பயிற்சியும் உடல் எடையை குறைக்க உதவலாம்.

புகைப்பழக்கத்தினை அறவே விட்டு விட வேண்டும். பக்கவாதத்தை இரட்டிப்பாக்கும் காரணி இதுவாகும். புகையிலையில் உள்ள 'நிகொட்டின்' என்பது ரத்தக் குழாய்களை பாதிக்கிறது. கூடவே மது அளவுக்கு மீறினால் கல்லீரலில் கொழுப்பு ஏற்படவும் ரத்த குழாயில் கொழுப்பு படியவும் முடியும். இதனால் மிகவும் சீக்கிரமாகவே இந்நோய் ஏற்பட்டு விடலாம். எல்லாவற்றையும் தவிர்த்து சுலபநடை, வேகநடை, மெல்லோட்டம், நீச்சல் போன்றவற்றை 40 நிமிடங்கள் மேற்கொள்வது நலம். மன அமைதி பெற தியானம், யோகா போன்றவற்றை செய்வதால் ரத்த அழுத்தம் கட்டுப்பாட்டில் இருக்கும்.

கனடா முழுவதிலும் 'Heart and Stroke Foundation' நிலையங்கள் பல உள. இந்நிலையங்கள் பக்கவாதம் உள்ளவர் களுக்கு எந்நேரமும் உதவத் தயாராக உள்ளன. உண்மையில் பலர் இதனுடன் தொடர்பு கொள்வது குறைவு. அவை செய்கின்ற சேவைகளையும் தெரியாமல் உள்ளனர். மூளையில் தகவல் பரிமாற்றம் 268 மைல் வேகத்தில் நடைபெறுகின்றதென வும், இலட்சக்கணக்கான நரம்புகள் உள்ளாக செயல்படுகின்றனதெனவும், கோடிக்கணக்கான நரம்புகலங்கள் இணைந்து செயல்புரிகின்றதெனவும் பல உண்மைகள் உள்ளே இருக்க நாங்களே பக்க வாதத்தை வரவழைக்கும் சந்தர்ப்பத்தை தவிர்க்க வேண்டும்.

# அனிருத்தின் இசைநிகழ்வு

'வீர விநாயகா வெற்றி விநாயகா' என்ற கோஷத்துடன் அனிருத் தனது முதல் வட அமெரிக்கா நிகழ்ச்சியை ரொறொன்ரோவில் மங்கலகரமாக ஆரம்பித்தார். கடந்த டிசம்பர் 12ஆம் திகதி Brampton இல் உள்ள Powerade Center இல் தமிழ்ப்பட இசை அமைப்பாளரும், பாடகருமான அனிருத் ரவிசந்திரர் தனது பெரும் இசை நிகழ்ச்சியை கொண்டாடினார்.

இந்நிகழ்ச்சி சரியாக மாலை ஆறு மணிக்கு கனேடிய தேசிய கீதமும், தமிழ்தாய் வாழ்த்தும் கனேடிய கலைஞர்களான ஜெசிக்காவும், சரிக்காவும் பாடியதுடன் ஆரம்பமானது. இதில் கனேடிய மற்றும் ஐரோப்பிய கலைஞர்கள் பங்கு பற்றினர். இந்நிகழ்ச்சிக்கு பானுஜனும் அபிஷேகாவும் தொகுப்பாளர் களாக இருந்தனர். ரொறொன்ரோ, ஒட்டவாவைச் சேர்ந்த நடனக்குழுக்களும், மொன்றியலை சேர்ந்த பாடகர்களும், ஐரோப்பிய இணையத்தளத்தில் பிரபலமானவர்களும் பங்குபற்றினர். இக்கனேடிய இளைஞரின் திறன்கள் கிட்டதட்ட ஐயாயிரம் பேர்களுக்கு மத்தியில் வெளிப்படுத்தப்பட்டது. அன்று ரஜினிகாந்தின் பிறந்தநாள் என்றபடியால் சிலர் தமது நடனங்களை அவருக்கு சமர்பணம் செய்தனர். இத்துடன் 'Pre Show' முடிவடைந்தது.

மாலை 8.30 மணியளவில் அனிருத் 'வேதாளம்' படத்தில் வந்த 'வீர விநாயகா' என்ற பாட்டுடன் தன்னுடைய நிகழ்ச்சியை ஆரம்பித்தார். அவருடன் அவரது இசைக்கருவி கலைஞர்களும் தமிழ் சினிமா பாடகி சக்திஸ்ரீ கோபாலனும், கனேடிய நடன கலைஞர்களும் நிகழ்ச்சியில் பங்குபற்றினர்.



இவர்களுடன் வீர விநாயகா, போ நீ போ, வேலையில்லா பட்டதாரி, ஓ பெண்ணே, தங்கமே, நானும் ரவுடி தான், Why this கொலைவெறி போன்ற பாடல்களை அனிருத்து பாடினார். சக்திஸ்ரீயும் இணைந்து காதல் கண் கட்டுதே, நீயும் நானும், ஓ ஓ போன்ற அண்மையில் வெளிவந்த பாடல்களை பாடினார். சக்திஸ்ரீயும் தனியே ஜலசா ஜலசா, உன் விழிகளில் போன்ற பாடல்களுடன் ஆங்கில பாடல்களை கலந்து பாடி, மக்களையும் பாட வைத்தார். அனிருத்தும் ஐரோப்பிய கலைஞர் இனோ கெங்காவுடன் டோனு டோனு டோனுவைப் பாடினார். ரொறொன்ரோ ஆங்கிலப்பாடகர் Drake இன் ஓர் ஆங்கில பாடலையும் அனிருத் பாடினார். இவர்கள் எல்லோரும் மக்களுடன் ஆடிப்பாடி மகிழ்ந்தனர்.


இடைவேளையில் ஜெசிக்கா இரு பாடல்களை பாடினார். இறுதியில் அனிருத்தை 'எதிர்நீச்சல்' என்ற பாடலுடன் முடிக்கவிடாமல் இன்னும் இரு பாடல்களைப் பாட பார்வையாளர் வற்புறுத்தியதால் 'ஆலுமா டோலுமா' பாடலுடன்தான் அனிருத்தின் நிகழ்ச்சி முடிவடைந்தது. இதற்கு பின்னர் வெளிநாட்டு கலைஞருடன் "Mc sai after party" யை நிகழ்த்தினார்.

நிகழ்ச்சியை பார்க்க வந்த ஐயாயிரம் மக்களில் பெரும்பாலானவர்கள் இளம் வயதினர். இத்தமிழ் பிள்ளைகள் அதிக விலையுள்ள Floor tickets ஐ வாங்கி, முழுநேரமும் ஆடி இரசித்துக் கொண்டிருந்தனர். இது இளம் தமிழ் சமுதாயம் தமிழ்மொழி, தமிழ் கலாசாரம் மற்றும் தமிழ் நிகழ்ச்சிகளிலும் காட்டும் ஆர்வத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாக அமைகிறது. பார்வையாளர்களைப் போல நிகழ்ச்சியில் பங்கு பற்றிய அனைவரும் மாணவர்களும் இளம் வயதினராகவும் இருந்தனர்.

இந்நிகழ்ச்சியில் வயது கூடியவர்களை (40இற்கு மேற்பட்டவர்) காண்பது மிக அரிதாக இருந்தது. இருந்த சிலரும் தங்கள் பிள்ளைகளை கூட்டி வந்தவர்கள் போலத் தெரிந்தது.

எனக்குத் தெரிந்த சில மாணவிகள் நிகழ்ச்சிக்கு வர ஆசைப்பட்டிருந்தனர். ஆனால் அவர்களது பெற்றோர் 'Old is Gold' என பழைய பாடல்களைப் பற்றிச்சொல்லி நன்றாக நடத்தப்பட்ட இந்நிகழ்விற்கு வராமல் விட்டதும், வர விரும்பிய பதின்மவயதினரை பார்க்க சம்மதம் அளிக்காதமையும் கவலைக்குரிய விடயமாகும்.

கனடாவில் நிகழும் பல ஆங்கில 'Concert' கள் போல இல்லாமல் இந்நிகழ்வு ஒழுங்காவும், சிறப்பாகவும் நடந்து முடிந்தது. கனேடிய தமிழ் இளைய சமுதாயத்தின் நல்ல ஒழுங்கிற்கும் கட்டுபாட்டிற்கும் இது ஓர் உதாரணமாகும்.



ஞா. ஆரணி
அகவை 17

**இளையோர் ஆக்கம்** இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

# சந்தர்ப்ப சூழ்நிலைகளால் என்னைக் கட்டுப்படுத்த முடியாது

சந்தர்ப்ப சூழ்நிலைகளால் என்னை மட்டுப்படுத்திக் கட்டுப்படுத்தவோ 'நான் உண்மையில் யார்' என்பதை வரையறுக்கவோ இயலாது என்பதை அங்கீகரித்ததும் எனது தகுதியை நான் நிச்சயம் அறிந்து கொள்வேன்.



உன்னைப்பற்றிய உண்மையுடன் உனது வாழ்வின் நிலைமையை ஒப்பிட்டுக் குழம்பாதே. சூழ்நிலைகள் செல்வாக்கை யும் அதிகாரத்தையும் தரலாம். ஆனால் அவை மாற்றம் அற்றவை அல்ல. மாறக்கூடிய சூழ்நிலைகள், நிச்சயம் மாறவே செய்யும். சந்தர்ப்பங்கள் உனது வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்தலாம். ஆனால் உனது வாழ்வின் போக்கை நிர்ணயிப்பவை அவை அல்ல. உனக் கூடாக வெளிவரும் உனது செயற்பாடுக-ளை, உன் சூழலில் நடப்பவை எதிர் மறையாகப் பாதிக்க விடாதே. உனக்கு என்னதான் நடந்தாலும் அது உன்னைப் பற்றிய உண்மையை ஏதோ விதத்தில் மாற்றிவிடும் என நம்ப உனது மனதிற்கு இடம்கொடாதே.

உனக்கு நடைபெறுபவை அல்ல, உனக்கு நடப்பவற்றிற்கு என்ன மாதிரியான பதில் நடவடிக்கைகளை நீ எடுக்கிறாய் என்பது தான் உண்மை. சூழலில் நடைபெறு பவற்றை எவ்வாறு சமாளித்து அவற்றிற் கூடாக பயணிக்கிறாய் என்பதுதான் நீ. உன்னை எதிர்கொள்ளும் எந்தச் சந்தர்ப் பத்தாலும் சூழ்நிலையாலும் உன்னைக் கட்டுப்படுத்தவோ நிறுத்தவோ முடியாது. நீ நம்பும் எல்லையற்ற, குறைவற்ற, நிறுத்தவே முடியாத சக்தியின் ஆற்றல் தான் நீ. அதற்கப்பால் நீ இடம் கொடுத்தா லொழிய பயப்படுவதற்கு வேறொன்று மேயில்லை.

**சந்தர்ப்ப சூழ்நிலைகள் அல்லது சம்பவங்கள், நிகழ்வுகள் உனது சுயத்தை மாற்றியமைத்து உனது ஆளுமையை நிர்ணயிக்கலாம். உனது என இன்றுவரை நம்பியவை மாறலாம். ஆனால் உனது சுயம் மாறாது.**

ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் 239

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 905-270-1214 416.907.6897



லலிதா புரூடி


Ajax | Markham | Scarborough
நடன வகுப்புகள் ஆரம்பம்
Bharathanatyam
Bollywood
Gaana
irudaya
DANCE COMPANY
ஆசிரியர்கள்:- "நாட்டியகலாமணிகள்"
நிவேதா மூத்ததம்பி
கீர்த்தனா அருளானந்தராஜா

- அரங்கேற்றம் முடித்த மாணவிகள் (ஆசிரியர்: - வாசு சின்னராசா)
- அண்ணாமலைப் பல்கலைகழகப் பட்டதாரிகள் (Canada Campus)
- நடன அமைப்பாளர்கள் (8 வருட அனுபவம்)
- மேடை நிகழ்வுகளில் பல வருடங்களாக சிறந்த அனுபவம்



மேலதிக தொடர்பகளுக்கு:
(647)967-1994 (416)319-0164

# புன்னகை இதயங்களில் மலர 2016 ஆம் ஆண்டு புதுவருட நல்வாழ்த்துக்கள்




பழையன கழித்துப் புதியன புகுத்தும்
புகழ்மிக்க புத்தாண்டே வருக
புத்தாடை புனைந்து
புன்னகை இதயங்களில் மலர
மத்தாப்பு வெடித்து
மாண்புடன் சிறுவரும் பெரியோரும்
இரண்டாயிரத்துப் பதினைந்தை
மனதார உளமார வரவேற்றிடவே வருக.

வெள்ளம் மழையால் வேதனையுறும் நெஞ்சங்களுக்கு
விடிவு கிடைத்திட....
அகதிகளாக....அநாதைகளாக...
அல்லலுறும் எம் மக்கள்
சொந்த ஊரின் சுகம் பெற்று வாழ
அலர்கதிர் ஒளியாய்ப் புத்தாண்டே வருக
ஆனந்த வாழ்வை அள்ளி நீயும் தருக

மலர்ந்திருக்கும் புத்தாண்டு உங்கள் வாழ்வில் அதிஷ்டத்தின் திறவு கோலாக....வெற்றியின் வித்தாக... அமைவதோடு உங்கள் எண்ணங்களெல்லாம் இனிதே நிறைவேறிட எங்களுக்கு மேலான சக்தியாக விளங்கும் இறைவன் பூரண நல்லாசி வழங்குவாராக...

என்றும் இனிய இன்முக வாழ்த்துக்களோடு:- குறிஞ்சிக்கவி செ.ரவிசாந், (இளங்கவிஞன், இளம் ஊடகவியலாளர்) வீரமனை, குப்பிளான்.

---



P Math tutorial 314

Answers to tutorial 313

1) $(a+1/a)^2= a^2+2+1/a^2=3$
So $a^2+1/a^2=1$
$a^3 {}_{+}1/a^3=(a+1/a)(a^2-1+1/a^2)$
$=(a+1/a)(1-1)=0$

2)Probability $=(4P_1.2P_1.4!)$ /6!

Which is equal to 192/720

3)[8,1,15]=s[1,2,3]+t[2,-1,3]

[8,1,15]=[s+2t,2s-t,3s+3t] since these vectors are equal,their components are equal

S+2t=8,2s-t=1,3s+3t=15 ,solving these equations s=2 and t= 3 it satisfies [8,1,15]=2[1,2,3]+

3[2,-1.3] .therefore vector c is a linear combination of vector a and b ,so the vectors a,b,c are coplanar

4)If(-1,1,1),(1,-1-1)and(1,1,-1) can be used as basis in 3 space then

a(-1,1,1)+b(1,-1,1)+c(1,1,-1)=0 vector,where a,b,c are not all zero but when we equate we find a=b=c=0 hence can be used as a basis in3 space

5)A=1/2bh,100=1/2b(10),b=20
Diff.A=1/2bh with respect to time t ,Da/dt=1/2(hdb/dt+bdh/dt)
2=1/2[(10db/dt+(20)(1)}
db/dt =-1.6

Questions Tut 314

1)Aused car dealer sells a 5 yearold car for $4200.What was the original value if depreciation is15%a year

2)Solve for x:$\log_4(x+2)+\log_4(x-3)$ $=\log_4 9$

3)Explain why the sum of the coefficients in the expansion

$(1-x)(1+x)^n$ is 0

4)What is the largest power of ten that divides 20! ?

5)Using algebraicmanipulation, prove P(n,r)=nxP(n-1,r-1)

By MrS.F.Xavier(Teacher)tel6473409490

# நோய்தீர மருந்தொன்று

அட்டாங்க யோகத்தை ஆசையுடன் செய்வோர்க்கு
விட்டோடும் நோய்கள் விரைவிற்றான் – திட்டமிட்டே
நல்ல குருநாடி நற்பயிற்சி பெற்றுவந்தால்
பொல்லாத நோய்களெலாம் போம்.

பயிற்சி பலவிதம் பார்த்துப் பழகி
உயிரையே காக்கும் உடலைப் – பயிர்போல்
வளர்த்து வருநோய்கள் தானகல யோகம்
தளர்வின்றிச் செய்தலே சால்பு.

காலை எழுந்தே கடமைகள் முடித்தே
சீலை விரித்தே சிறந்த இடத்தில்
பத்தமா சனத்தில் பக்குவ மாயிருந்து
சித்தம் கலையாதே சீராய் ஒன்றை
வித்தாய் வைத்தே விரைவிற் றொடங்க
ஆரம்ப காலம் அவதானம் வேண்டும்



குருவை நினைத்துக் கும்பிட வேண்டும்
குருவின் கூற்றைக் கூர்ந்து கவனித்தே
வருவினை போக்கி னவாய்ப்பாய்ச செய்க
சிறுவர் மூத்தோர்க்காம் சிறுசிறு பயிற்சி
போட்டிக் கான பேரா சனங்கள்
ஆசிரியர்க் கான ஆழப் பயிற்சி
பலபல விதமாம் பயிற்சிக ளுண்டே
உடலின் உறுதி உள்ளம் அமைதி
சிந்தனைச் சிதறல் சீராய் வரவும்
ஆசனத் திருந்தே அமைதி காக்கும்
யோகக் கலையை ஏற்பாய்ச் செய்தால்
சீராய் வாழும் சிறப்பு
ஊரார் உன்னை உற்றுப் பார்ப்பார்.

**- முருகேசு மயில்வாகனம், கனடா -**

**விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு *www.vlambaram.com / www.tamilvanakkam.com***

# புத்தாண்டே வருக




நத்தார் விழாவின்பின் நாயகியாள் புத்தாண்டாள்
தித்திக்க வந்திடுவாள் தீர்வுக்காய் - முத்தாகக்
கொட்டும் முறுவல்கள் கோலோச்ச நங்கையவள்
எட்டியடி வைப்பாளே ஏற்பு.

பழமை சிலகழித்துப் பாவனை ஓங்க
இளமை ஒளிர எழிலாள் - அழகொளிர
மெல்ல நடந்துமே மேதினி ஓங்கிடவே
செல்வமகள் வந்திடுவாள் தேர்.

வன்கொடுமை சென்றுவிட வாழ்விலே முன்னேற
முன்னெடுப்போம் நற்பணிகள் முன்னுணர்ந்தே - இன்னலின்றிப்
புத்தாண்டின் தீர்மானம் புத்தூக்கம் தந்திடுமே
சித்தங் கலங்காத சீர்.

சாதிமத பேத சமுதாயச் சீரழிவேன்
ஆதியந்தம் ஒன்றேதான் ஐயனென - மோதலின்றி
எல்லோரும் ஓரினமாய் ஒன்றிணைந்து வாழ்வதற்குப்
பல்லோரும் சேர்ந்திடுவோம் பார்.

போட்டி பொறாமை பொல்லாங்கு அற்றதோர்
நாட்டினை ஆக்குதற்கு நாமிணைவோம் - தீட்டுதிட்டம்
பாரினுள்ளோர் ஏற்றுப் பயன்பெற நல்லதோர்
வேரிதாய்க் கொள்வரே வேறு

ஆயுதப் போட்டி அகிலந்தான் எங்குமே
ஓய்வில்லா யுத்தம் ஒழியவே - சாய்வின்றிப்
பேசியே தீர்வைத் தலைவர்கள் பெற்றிடுவர்
ஆசி அதனால் சிறப்பு.

எத்தனை கொடுமைகள் எத்தனை வறுமை
ஏதிலிகள் எங்குமே நிறைந்திட
உத்தமியாள் இவ்வாண்டு ஊரைவிட்டுச் சென்றிடவே
ஊனமின்றி வந்திடுவாள் புத்தாண்டாள்
சித்தங் கலங்கியே சீரழியும் மக்களுக்குச்
சீரான வாழ்வைத் தந்திடுவாள்
யுத்தமேகம் தானகலத் தீர்வுகள் சேரத்தான்
வித்தகஞ் செய்திடுவாள் விரைந்து.

மணியோ பன்னிரண்டு மாதா கோவிலெங்கும்
மக்கள் கூட்டஞ் சேர
அணியணியாய்க் குருமாரும் கூடி னார்கள்
ஆராதனை நேர மங்கே
அணிகலன்கள் பூட்டிய ஆரணங்கார் ஒருபக்கம்
ஆண்களும் பிள்ளைகளும் அயற்பக்கம்
தணியாத தாகந்தான் தக்கதந்த பூசைக்காய்ச்
சீரோளிர் புத்தாண்டின் சிறப்பே.

ஆக்கம் - முருகேசு மயில்வாகனன், கனடா



# EDUCATION

## Review Questions16-01

**BIOLOGY IB**
**Describe the functions of liver.**

**ADV. FUNCTIONS 12** prove,

$$\tan(a+b)\tan(a-b) = \frac{\sin^2 a - \sin^2 b}{\cos^2 a - \cos^2 b}$$

## Answer Key : 15-24

**CHEMISTRY AP**

Bond order = ( no. of electrons in molecular orbitals - no. of electrons in antibonding molecular orbitals) ÷ 2.
To determine the stability calculate the bond order for the given species,
(i) $H_2^{+}$, $H_2$ ,and $H_2^{2-}$ are stable
(ii) $He^{2+}$ and $He_2^{+}$ are stable

**CHEMISTRY 12**

*(1)Boiling points:*
2,4-dimethyl pentane < n- heptane <2- hexanone <1- hexanol

*Molecular size* :
2,4-dimethyl pentane < n- heptane
*Greater London dispersion force in n- heptane.*
2- hexanone is having dipole –dipole attraction in addition to London dispersion forces.
1- hexanol is having hydrogen bond due to the presence of hydroxyl group.

(2) (i) $HOAc + H_2O \rightleftharpoons H_3O^{+} + OAc^{-}$

$$ka = \frac{[H^+][OAc^-]}{[HOAc]} \quad ; \quad 1.8 \times 10^{-5} = \frac{[x][x]}{[1-x]}$$

$(1- x) = 1$ ; $C/Ka > 1000$

$pH = -\log [H^+] = -\log x = 2.38$

(ii) (a) $HOAc + NaOH \rightleftharpoons H_2O + NaOAc$

| | HOAc | NaOH | $H_2O$ | NaOAc |
|---|---|---|---|---|
| moles | (1×0.025) | (1×0.001) | - | 0 |
| Rxn | -0.001 | - 0.001 | | +0.001 |

End 0.015 / 0.035 = 0.429mol/L HOAc
0.001/ 0.035 = 0.029 mol/L NaOAc

| | $HOAc$ | $+ H_2O \rightleftharpoons$ | $H_3O^+$ | $+ OAc^-$ |
|---|---|---|---|---|
| I | 0.429 | | 0 | 0.029 |
| C | $-x$ | | $+x$ | $+x$ |
| E | $0.429-x$ | | $+x$ | $0.029+x$ |

resulting a buffer solution.

$$1.8 \times 10^{-5} = \frac{[x][0.029 + x]}{[0.029 + x]}$$

$pH = -\log [H^+] = -\log x = 2.56$

(b) complete neutralization, resulting NaOAc (aq) , (ans pH= 9.22)

$OAc^{-} + H_2O \rightleftharpoons OH^{-} + HOAc$

(c) resulting solution has excess of NaOH and NaOAC; consider only the concentration of NaOH of the resulting solution for pH calculation. pH = 13.22

Answer key
16-01 - next issue
☎ 647 341 3975
KEEN TUTORING CENTRE

**PHYSICS 12**

x and y components of impulses are Jx and Jy

$J_x = P_{f(x)} - P_{i(x)} = m(v_{f(x)} - v_{i(x)})$
$= 0.16\,[(60\cos 25) - (40)] = \underline{15.1\ kg.m/s}$
$J_y = P_{f(y)} - P_{i(y)} = m(v_{f(y)} - v_{i(y)})$
$= 0.16\,[(60\sin 25) - 0] = \underline{4.057\ kg.m/s}$


Magnitude of impulse $J = \sqrt{J_{(x)}^2 + J_{(y)}^2}$
$= 15.63 kg/m/s$

$$F = \frac{J}{\Delta t} = \frac{15.63}{0.0012} = 1.3\times 10^4\ N$$

angle of impulse , tan ß= 4.057/15.1 = 0.2687; ß= 15°

**PHYSICS 11 & 12**

(1)bomber plane...(ans 30 ° to the horizontal)
(2)




$F_k = \mu_k . F_N$ ; $F_N = F_g\cos 30°$ ; $F_s = F_g\sin 30°$

5 kg object moving downwards

5g sin 30 – (0.15) 5gcos30° -T = 5a .........(1)

2 kg object moving upwards along the inclined surface

T- 2g sin 30 – (0.15) 2gcos30° = 2a ........(2)

Solve for T and a

**BIOLOGY 11 &12**
- Answers will be in the next issue

# பேராசிரியர்...

37ஆம் பக்கத்தொடர்ச்சி

பதிவுசெய்யவேண்டும். பேராசான் சிவத்தம்பி அவர்கள் திருமண சம்பந்த வழியில் எனக்கு 'அண்ணன்' உறவுமுறையானவர். இவ்வசதியால் புலமை வழிகளில் அவரிடம் உதவிபெறுவதற்கு எனக்கு வாய்ப்பாக அமைந்துவிட்டது.

கொழும்பு வெள்ளவத்தையில் அமைந் துள்ள பேராசான் சிவத்தம்பியின் தொடர் மாடிவீடு இலங்கையிலுள்ள பல்கலைக் கழகங்களுக்கு எல்லாம் ஒரு தலைமைப் பீடமாக இயங்கியதை நானும் செல்வாவும் கண்ணுற்றோம். அங்கு, பெரும்பாலான வார இறுதி நாட்களில் இலங்கையின் பல பாகங்களிலும் இருந்து பேராசிரியர்கள் பலர் வந்து கூடுவார்கள். தனது பெரிய இருக்கையில் பேராசான் சிவத்தம்பி அமர்ந்திருப்பார். அது ஒரு வகுப்பறைபோல் காட்சியளிக்கும். அங்கே தமக்கான விளக்கங்களைக் கேட்டுத் தெளிவுற்று எதிர்வரும் நாட்களுக் கான தமது விரிவுரைகளை வந்துள்ள பேராசிரியர்கள் தயார்படுத்துவார்கள். பலவித புலமைத் தேடல்கள் அவர்களுக் குள்ளே நடைபெறும். இந்தத் தெளிவுறு கல்வி அரங்கில் ஒரு ஓரமாக அமர்ந்தி ருந்து, செல்வாவும் நானும் கல்வியை அனுபவித்தோம். எமக்கான குறிப்புக்களை யும் எடுத்துக்கொள்வோம். அதுபோன்ற நாட்கள் இனிமேல் என் வாழ்நாளில் கிடைக்கமுடியாத பொற்காலங்கள் எனலாம். அத்தகைய நாட்களில் ஒரு பகல் நேரம் பேராசான் சிவத்தம்பியும் போராசிரியர் செல்வாவும் நானுமாக, நாம் மூவர் மட்டும்தான், பலதையும் கதைத்துக்கொண்டு இருந்தோம். அப்போது "இப்ப இங்க சிலர் வரப்போகினம்" என்று பேராசான் சொன்னார். அவர் சொல்லிய சிறிது நேரத்தில், பேராசிரியர் மௌனகுரு தலைமையில் ஏறத்தாழ பதினைந்துபேர் அளவில் மிருதங்கம் தபேலா ஆர்மோனியப் பெட்டிகளுடன் அங்கு வந்து சேர்ந்தனர்.

பேராசிரியர் மௌனகுரு தலைமையில் வருகை தந்திருந்த மட்டக்களப்புப் பல்கலைக் கழக நாடகக்குழுவினர், கொழும்புப் பல்கலைக்கழகத்தில் 'இராவணேஸ்வரன்' நாடகத்தை அரங்கேற்றி இருக்கின்றனர். பேராசான் சிவத்தம்பிக்கும் சிறப்பு அழைப்பு விடுத்துள்ளனர். ஆனால், அவரின் உடல் நிலை காரணமாக அவரால் சமூகமளிக்க முடியவில்லை. எனவே "எங்களுடைய பேராசானுக்கு நாங்கள் நாடகம் நடித்துக் காண்பிக்கவேண்டும்" என்று அவரின் வீடு தேடியே அவர்கள் வந்துவிட்டார்கள்.

மிருதங்கம் தபேலா ஆர்மோனிய வாத்தியங்களுடன் நாடகம் தொடங்கியது. சுருக்கமாக இனிதுற பேராசான் சிவத்தம்பி வீட்டில் அரிதாரமற்ற நாடக நிகழ்ச்சி ஒன்று அரங்கேறியது. அன்று கண்ணுக்கும் காதுக்கும் இனிய திடீர் விருந்தொன்று எங்களுக்கும் கிடைத்தது.

நாடகம் நிறைவுற்றது. நடிகர்கள், ஒவ்வொருவராக பேராசான் சிவத்தம்பியின் பாதத்தைத்தொட்டு வணங்கினர். அவரும் ஒவ்வொருவரின் தலையைத்தொட்டு, கன்னங்களைத்தடவி ஆசீர்வதித்துக் கொண்டு இருந்தார். சிலரின் கண்களில் 'குருபக்திக் கண்ணீர்' அரும்பியதையும் கண்டோம். மனம் நெகிழ்வான ஒரு சூழல் அங்கு நிலவியது. இறுதியில் எல்லோரும் விடைபெற்றுச் சென்றுவிட்டனர்.

அன்றுதான் பேராசிரியர் செல்வா கனகநாயகமும் சிரிக்காமல் பகிடி விடுவார் என்பதை நானும் தெரிந்து கொண்டேன். அவர் என்னைப்பார்த்து: "நாங்களும் கனடாவிலயிருந்து வந்து ரிக்கற் இல்லாமல் நல்லொரு நாடகம் பார்த்துப்போட்டம்" என்று கூறினார். அப்போது நாங்கள் மூவரும் என்றும் மறக்கமுடியாத இன்றும் கண்ணில் நிற்கின்ற, ஒருவகையான சிரிப்பு வகைகளை உதிர்த்தோம். அந்தப் புத்திஜீவிகளுடனான பழக்கம் என்னைப் பொறுத்த மட்டில் ஒரு அருங்கொடை என்று ஆவணப்படுத்துகிறேன்.


பேராசான் மூதறிஞர் சிவத்தம்பி அவர்களே! பேராசிரியர் செல்வா கனகநாயகம் அவர்களே! உங்களுடைய நினைவுகளை மீட்டும்போதில், என் நெஞ்சம் கனக்கின்றது…

MATH & PHYSICS TUTION

By a well-qualified and an experienced teacher. For all grades from Gr. 4 to 1st year of university.

Special classes in advanced functions, calculus & vectors and data management. Classes available at Scarborough & Stouffville.

Contact: 647 340 9490/ 416 732 2228



விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு www.vlambaram.com
www.tamilvanakkam.com

# பேராசிரியர் செல்வா கனகநாயகம் அவர்கள் பற்றிய நினைவலைகள்

கனடா – ரொறன்ரோ பல்கலைக்கழகத்தில் ஆங்கில விரிவுரையாளராகப் பணியாற்றிக் கொண்டு தமிழுக்கும் தமிழ் இலக்கியத்துக்கும் 'தமிழ் இலக்கியத் தோட்டத்துக்கும்' சோர்வில்லாமல் தொண்டு செய்த பேராசிரியர் செல்வா கனகநாயகம் அவர்களை, திடீர் மாரடைப்பு அழைத்துச் சென்றுவிட்டது.

செல்வா கனகநாயகத்துடன் ஏறத்தாழ பத்து ஆண்டுகள் அளவில்தான் எனக்கு அறிமுகம் உண்டு. அது எப்படியெனில், ரொறன்ரோப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய செல்வா கனகநாயகம் அவர்களும், ஒன்ராறியோ வின்சர் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாற்றும் முனைவர் – கவிஞர் – சேரன் அவர்களும், அவர்களுடன் சேர்ந்து இயங்கும் மாணவத் தொண்டர்களுமாக 'தமிழியல் மகாநாடு' எனும் புலமை நிகழ்வொன்றை ரொறன்ரோப் பல்கலைக்கழகத்தில் வருடா வருடம் நடத்தி வந்தார்கள். அந்த இனிய அறிவுச் சூழலை தவறாமல் அனுபவித்து வந்தவர்களில் நானும் ஒருவன். அக்காலங்களில் உலகின் பல பாகங்களில் இருந்தும், வந்து போன அறிஞர்கள் எழுத்தாளர்கள் என்போருடனும், செல்வா கனகநாயகம்,




பல்கலைக்கழக மாணவர்கள், புத்திஜீவிகள் முதலியோருடனும் பழகும் சிறிய வாய்ப்பும் எனக்குக் கிடைத்தது.

பேராசிரியர் செல்வா கனகநாயகத்தின் ஆங்கிலப்புலமையும் இலக்கியச் செழுமையும் அவரைச் சிறந்த ஒரு மொழி பெயர்ப்பாளராக அடையாளப் படுத்தியது. தமிழ் எழுத்துலகில் மேல்நிலைப்பட்ட படைப்புக்கள் பலவற்றை ஆங்கிலத்தில் மொழி உருவாக்கம் செய்து, அப்படைப்புக்கள் சர்வதேச அளவில் சென்றடைவதற்கு 'செல்வா' ஊடகக் கருவியாக இயங்கி வந்தார் என்பது பெருமையான ஒரு செய்தி.

கடந்தாண்டு ரொறன்ரோப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற பேராசிரியர் செல்வாவின் நினைவுக்கூட்டத்திற்கு நானும் சமூகமளித்திருந்தேன். பல்லினப் பேராசிரியர்களாலும் அறிஞர்களாலும் மாணவர்களாலும் முக்கிய உறவினர்களாலும் அரங்கம் நிறைந்திருந்தது. பலர் இரங்கலுரை ஆற்றினர். சிலர் கவிதை வாசித்தனர். அன்று, கவிஞர் சேரனும் கவிதை ஒன்று வாசித்தார். அப்போது சேரனின் கண்களில் கண்ணீர் நிறைந்து நாசியிலும் நீர் அரும்பிய குறியீடுகள், செல்வாவுடனான சேரனின் நட்பின் ஆழத்தை வெளிக்காட்டின.

செல்வாவுடன் இன்னும் சில சுவையான சந்திப்புக்களும் என் வாழ்நாளில் நடை-பெற்றன. தமிழியலில் முதுமாணி - M.A.- தேர்வுக்காக நான் கற்றுக்கொண்டிருந்த காலங்களில் அவை நிகழ்ந்தன. கனடாவிலிருந்து இலங்கை, இந்தியா செல்லும் எனது பயணங்களின்போது, தமிழ்நாட்டில் சில பேராசிரியர்களிடம் விளக்கங்கள் கேட்டுக் கற்றேன். இலங்கையில் பேராசான் சிவத்தம்பி அவர்களிடமும் தெளிவுகள் பெற்றுக் கற்கும் பெறுபேறும் பெற்றேன். சொல்லிவைத்தாற்போல், அந்நாட்களில் பேராசிரியர் செல்வா கனகநாயகமும் மூதறிஞர் சிவத்தம்பியிடம் கற்பதற்குக் கனடாவிலிருந்து கொழும்புவந்து சேர்ந்திருப்பார். இவ்வாறு இரண்டு சந்தர்ப்பங்களில் பேராசிரியர் சிவத்தம்பியின் தொடர்மாடி வீட்டில் செல்வாவுடன் பக்கமிருந்து கற்பதற்கும் கேட்பதற்கும் ஆய்வதற்குமான அரிய நாட்களை நானும் பெற்றேன். இதில் ஒன்றை முக்கியமாக இங்கு நான்



முத்துராஜா, M.A.

தொடர்ச்சி 36ஆம் பக்கம்

CUSTOM BUILD HOME

Build Your Personalized Custom Build Home

Starting From $139 / sq ft

Quality ! Price !! Peace of Mind !!!



உங்கள் கனவு இல்லத்தை நனவாக்குவதற்கு

அனுபவம் நிறைந்த, நாணயமான ,

தரமான கட்டிட நிபுணர்கள்

Industrial Buildings from $85 / sq ft

TAMB CANADA (647) 877-8262 (TAMB)


324 நகைச்சுவைத் தொடர்

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்



பிறிம்லி மீனாவின் மதன் தனது தமிழ் வகுப்பில் கிறிஸ்மஸ் பற்றி பேசவேண்டியதை உலகருக்கு வாசித்துக் காட்டிக்கொண்டிருந்தான் உலகர் தேவையான இடங்களில் எதுகை மோனை இடைவெளி போன்றவற்றை விளக்கிக் கொண்டிருந்தார்.



திருக்குறளில் சில, பாரதி பாடலில் சில, சினிமாப் பாடலில் சில... இன்று சிறியவர்கள் வாயில் தாராளமாகப் புரளும் வெற்றி விநாயகா வரை கலந்து நல்லதொரு பேச்சு.



மதன் பேச்சுப் போட்டிக்கு போனால் உனக்குத்தான் முதல் பரிசு என சொன்னா ஆட்டிலறி அன்னம்மா.

திருக்குறளும், பாரதி பாடலும் தான் சற்று தடங்கலாக இருந்தது. உலகர் அதனை திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டிருந்தார்.




ஒருமணி நேரமாக மணவறைக்கு வரும் மணப்பெண்போல தலை குனிந்து தனது ஐபொட்டில் ஊர் புதினம் ஆராய்ந்து கொண்டிருந்த ஆட்டிலறி அன்னம்மா தொடங்கினா...
யு நோ தற் சிம்புவின்ரை இந்த பீப்......சோங் (சிம்புவின் பீப் பாடல்..) மோலுக்குள்ளை ஒரு போய் தமிழ் பிள்ளையைப்பாத்து பாடிக்கொண்டு போக அந்தப்பிள்ளை இனி படிச்சா பொலிசைக் கூப்பிடுவன்.. என்று வெருட்ட பையன் சொறி சொல்லியிருக்கிறான்.




முதல் தமிழை ஒழுங்கா படி என எச்சரித்துவிட்டுப் போயிருக்கு. தமிழில் அர்த்தம் தெரியாமல் கதைப்பவர்களும் பாடுபவர்களும் பலர்.
பாடலை எழுதியவருக்கும் பிரச்சினை, இசையமைத்வருக்கும் பிரச்சனை, பாடியவர்களுக்கும் பிரச்சனை...
அதனை அர்த்தம் தெரியாமல் முணுமுணுப்பவர்களுக்கும் பாடுபவர்களுக்கும் இன்ரநெற்றில் பதிவு செய்தவர்களுக்கும் பிரச்சினை

பீப்.. பாடல் வெளியே உலாவுகிறது.
பாடியவர்கள் வெளியே வரமுடியாமல் இருக்கிறது.
பிரபல பாடகர் ஜேசுதாஸ் அந்தமான் காதலி படத்தில் வெளிவந்த பாடலில் திருக்கோவில் என்ற சொல்லை தெருக்கோவில் எனப் பாடியிருக்கிறார். பாடல் வெளிவந்த நாளிலிருந்து..இன்றுவரை அது பிரச்சினையாகத்தான் பேசப்படுகிறது.




இறைவன் திருவிளையாடல்களில் தருமி பொற்காசு பெற்ற பகுதியில் கவிதையில் சிவனுக்கும் நக்கீரனுக்குமிடையில் சொற்பிழையா பொருட்பிழையா என்ற வாதம் ஏ.பி.நாகராஜனின் திருவிளையாடல் படத்தில் காட்சியாக வந்து இன்றுவரை மக்கள் மனதில் நிற்கிறது.
தமிழில் சொல், பொருள் மிக முக்கியம்.



வாதத்திற்குரிய பாடல் இது
"கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவு முளவோநீ யறியும் பூவே."

தமிழ் அர்த்தம் மாறும் பொழுது அழிவையும் கொண்டுவரும் "கொண்டு வாருங்கள் - கொன்று வாருங்கள்"
பாண்டிமாதேவியின் காற் சிலம்பு களவு விடயத்தில் பாண்டிய மன்னன் கள்வனைக் கொண்டுவாருங்கள்.....?.கொன்றுவாருங்கள் ...என்றாரா?!



காவலர்கள் கோவலனை விசாரிக்காது (தலையை வெட்டி) கொன்று விட்டு வந்தனர்.

தமிழ் எத்தனை அர்த்தங்களைக் கொண்டது. விளைவு பாண்டிய மன்னன் இறந்தான், பாண்டிமாதேவியும் இறந்தாள். மதுரை எரிந்தது.
கண்ணகிக்கு சிலை.
(அரசு மாறும்பொழுது அடிக்கடி சிலையும் மாறுகிறது)

எனவே சிம்பு விடயம்...மன்னிக்கவும் சிலம்பு...விடயம் என்றும் பிரச்சினையாகத்தான் பேசப்படுகிறது.

உன்னையறிந்தால் நீ உன்னையறிந்தால் பதவி என்பது சாதாரணமானதல்ல பதவியைப் பெறுவது (கிடைப்பது) கஸ்டம். அதைவிட பதவியைத் தக்கவைப்பது மிகமிக கஸ்டம். பதவியில் உள்ளவரை அதற்குமேல் உயர்த்த தொண்டர்களும் குண்டர்களும் தீவிரமாக வேலை செய்வார்கள். பதவிக்கு வந்த கொஞ்சக் காலத்தில் இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி பல சிக்கல்களுக்குள் மாட்டியிருக்கிறார்.



அமெரிக்கா வந்திருந்தபோது மகாத்மா காந்தியைப் பற்றிப் பேசுகையில் மகாத்மா காந்தி மோகன்தாஸ் என்பதற்கு பதிலாக மோகன்லால் என தவறாகப் பேசியிருக்கிறார்.
(மோகன்லால் - மலையாள நடிகர் ஒருவரின் பெயர்)
சகல ஊடகங்களும் இதுபற்றி பல கருத்துக்களை வெளியிட்டன.

அதோடு சற்று உசாராக இருக்கவேண்டாமா? அண்மையில் ரஸ்சியாவில் கலந்துகொண்ட நிகழ்ச்சியொன்றில் இந்திய தேசிய கீதம் இசை வடிவில் ஒலிக்கும்போது அமைதியாக நிற்கவேண்டியவர் நடக்கத் தொடங்க ரஸ்சிய அதிபர் தடுத்து நிறுத்தியிருக்கிறார்.
'நிற்க அதற்கு தக' நிற்பதும் நடப்பதும் நின் செயலே.

இங்குகூட எம்மிடையே பல நிகழ்ச்சிகளில் தமிழ்த்தாய் வாழ்த்து, கனேடியதேசிய கீதம், அமைதி வணக்கம் நடைபெறும் பொழுது பலர் அதற்கு மதிப்பளிக்காமல் நடப்பதும் தொலைபேசியில் பேசுவதும் கதைப்பதும் சர்வ சாதாரணமாகிவிட்டது.




கடந்த வாரம் கொலிவூட்டில் நடைபெற்ற உலக அழகுராணிப் போட்டியில் பிரபல அறிவிப்பாளர் தவறுதலாக அழகுராணியின் பெயரை அறிவித்து அவரிற்குரிய முடி சூடப்பட்ட விடயம் உலக மக்களையே சங்கடப் படுத்தியுள்ளது.

ஜனவரி 1....15..



1. 2016 - புது வருடம்



1. சி.வை.தாமோதரம்பிள்ளை (ராவ் பகதூர்) (1832..1901) நினைவு தினம். (பல அரிய தமிழ் நூல்களை அச்சிட்டவர். ஆங்கிலேயர் பலருக்கு தமிழ் போதித்தவர்) வழக்கறிஞராகவும் நீதிபதியாகவும் பதவி வகித்தவர்)

1. 1866 - யாழ்ப்பாணத்தில் முதன்முதல் காவல்துறை (பொலிஸ்) அமைக்கப்பட்டது.

1. 1886 - விக்டோரியா மகாராணிக்கு பிறந்தநாள் பரிசாக பர்மா வழங்கப்பட்டது.



2. யாழ்ப்பாணத்தில் 4வது உலகத்தமிழாராச்சி மாநாடு ஆரம்பமானது.

2. கண்டி கடைசி அரசன் கீர்த்தி சிறீ ராஜசிங்கன் (1782)

3. குமார் பொன்னம்பலம் நினைவுதினம் (2000)

7. யாழ்ப்பாணத்தில் உதயதாரகை பத்திரிகை தமிழிலும் ஆங்கிலத்திலும் 1841 வெளியானது.



8. விஞ்ஞானி கலிலியோ (1642) நினைவுதினம்

12. எம்.ஜி.ஆர். (கொலை முயற்சி) எம்.ஆர். ராதாவினால் கழுத்தில் சுடப்பட்டார்.
(எம்.ஜி.ஆர். படங்களில் வில்லனாக நடிப்பவர் எம்.ஆர் ராதா.)



14. போகிப்பண்டிகை

15. தைப்பொங்கல்

15. சிறீ சபரிமலை ஐயப்பன் மகர ஜோதி

# பசங்க...

25ஆம் பக்கத்தொடர்ச்சி

பின்னணி இசையில் கதையோடு ரசிகர்களை ஒன்ற வைக்கிறார். பாடல்கள் ரசிக்கும் விதமாக உள்ளன.

ஒளிப்பதிவு: பாலசுப்பிரமணியம். காட்சிகள் ஒவ்வொன்றும் அழகாக இருக்கின்றன. அந்தளவு வண்ண மயமாக்கியிருக்கிறார். குழந்தைகளுக்கும் பிடிக்கும் வகையில் படமாக்கியிருக்கிறார். ஆரோல் கரோலி, பாலசுப்பிரமணியம் இருவருமே படத்துக்குப் பலம்.

எழுத்து - இயக்கம்: பாண்டிராஜ். சென்னை யின் உயர்நடுத்தர வர்க்க குடும்பத்தினர், குழந்தை பிறப்பு முதல் வளர்ப்பு வரை எப்படியெல்லாம் நடந்துகொள்கிறார்கள் என்பதை, அவர்களுக்கே தெரியாமல் பின்தொடர்ந்து எடுத்தது போலக் காட்சிகள் தத்ரூபமாக இருக்கின்றன. குழந்தைகளை நடிக்க வைப்பது அவ்வளவு சுலபமல்ல. ஆனால், பாண்டியராஜுக்கு அனாயாசமாக வருகிறது. குழந்தைகளின் சின்னச் சின்ன இயக்கத்தையும் கவனம் சிதறாமல் பதிவாக்கியிருக்கிறார். 'குழந்தைகள் கெட்ட வார்த்தை பேசுவதில்லை, கேட்ட வார்த்தை யைத்தான் பேசுகிறார்கள்' 'மதிப்பெண்களை விதைக்காதீர்கள், மதிப்பான எண்ணங்களை விதையுங்கள்' போன்ற வசனங்கள் நறுக் ரகம். சமுத்திரக்கனி தன்னுடைய குழந்தையைப் பள்ளிக்குக் கூட்டிப்போகும் நேரத்தில், குழந்தையின் ஆசிரியர் தனியார் பள்ளியில் குழந்தையைச் சேர்க்க விண்ணப்பம் வாங்க நெடிய வரிசையில் காத்திருக்கிறார். அதைப் பார்த்து, 'அரசு வேலைகளில் இருப்பவர்கள் தங்கள் குழந்தைகளை அரசுப் பள்ளிகளிலேயே சேர்க்க வேண்டும் என்று அரசாணை வர வேண்டும்' என்று சொல்லும்போது அரங்கத்தில் கைதட்டல் உயருகிறது.
பசங்க 2 - பெற்றோர் பார்க்க வேண்டிய குழந்தைகள் படம்!

# கனவொன்று நிறைவேற்றப்பட்டது

## *A Dream Fulfilled*

நிறைவை விரும்புவது மனிதனை பாரிய அளவில் ஊக்கப்படுத்துவதாக உள்ளது. அது செல்வமாகவோ, வசதியாகவோ, ஆனந்தம் தருவனவாகவோ, காதலாகவோ, குடும்ப மாகவோ, பாதுகாப்பாகவோ அல்லது மதிப்பாகவோ இருக்கலாம். அதிகளவு மக்களிடம் அவர்களின் கனவுகள் பற்றிய மிக நீண்ட பட்டியலே உள்ளது. "இவ் உலகில் உள்ள பல மக்கள் புதிய புதிய கனவுகளை கண்டுவருகிறார்கள் என இந்தப் பூமியைச் சுற்றி பிரயாணம் செய்து பெருந்திரளான மக்களிடையேயும் சிறு குழுவினரிடையேயும் உரையாற்றும்போது வாழ்வில் அமைதியையும் ஆனந்தத்தையும் அடைவதற்கான சாத்தியம் பற்றி உரையாற்றிவரும் திரு. பிரேம் ராவத் அவர்கள் கூறுவதுடன் "அந்தக் கனவுகள் எல்லாம் எம்மிடம் உள்ள அடிப்படை கனவை விட்டு எம்மை திசைதிருப்புகின்றன என நான் எண்ணுகிறேன்" எனக் கூறுகிறார்.

"எனது செய்தி மிக மிக எளிமையானது: நீங்கள் தேடுவது எதுவோ அது உங்கள் உள்ளேதான் உள்ளது."

எம்மிடம் இல்லாததொன்றைப் பற்றிக் கனவு காண்பதானது நாம் எதையோ தேடுகிறோம் என்பதைக் குறிக்கிறது. "கேள்வி என்ன வென்றால் எமது வாழ்வில் தினம்தோறும் நாம் தேடும் அந்த விடயம் என்ன?

மக்களிடம் அதற்கான பதில் இருக்கலாம் என நீங்கள் எண்ணலாம், என பிரேம் ராவத் கூறுகிறார். நாங்கள் நிறைவடைவதற்கு எங்களுக்கு என்ன தேவை என்பது பற்றி எங்களுக்குத் தெட்டத் தெளிவாகத் தெரியும் என எண்ணுகிறார்கள். ஆனால் உண்மை நிலை மக்களுக்குத் தெரியாது. மக்கள் தம்மிடமே தாம் தேடாவிட்டால், அவர்கள் உண்மையிலே தாம் யார் என்பதை அறியாவிட்டால், அவர்களுக்கு உண்மையாகவே தேவைப்படுவது என்ன என்பதை அவர்கள் அறிந்திராவிட்டால் அவர்கள் எப்படி நிறைவைக் கண்டுகொள்ளப் போகிறார்கள்?
வாழ்ந்துகொண்டிக்கும் ஒவ்வொரு மனிதனின் உள்ளேயும் நிறைவடைவதற்கான கனவொன்று இருந்து கொண்டே இருக்கிறது என அவர் கூறுகிறார். ஆனால் அதை நாம் புரிந்து கொள்ளாவிட்டால், அந்த ஆவலை பூர்த்தி செய்துகொள்ள முடியுமென நாங்கள் எம்மை விட்டு வெளியே தேடுகிறோம். என்னால் எனது கனவுகளை நனவாக்க முடியுமானால், என்னால் அமைதியில் இருக்கமுடியும் என மக்கள் எண்ணுகிறார்கள்." இல்லை என பிரேம் ராவத் கூறுகிறார். அங்கே ஒரு அவசரம் உள்ளது. அங்கு ஏற்கனவே உள்ள கனவிற்கு முன்னுரிமை செலுத்தப்பட வேண்டும்.

நான் ஓர் ஆற்றின் கதையை உங்களுக்கு உவமானமாகத் தரப்போகிறேன். ஒரு நிலத்தின் ஊடாக அது தன் பாதையை ஆரம்பிக்கும் போது விடயங்கள் நடைபெறத் தொடங்கின. ஆரம்பத்தில் ஆற்றுப்படுக்கையில் சிறிய சிறிய புற்கள் வளர ஆரம்பிக்கலாம். அங்கே சில விதைகள் உள்ளன. அவற்றிற்கு சிறிதளவு தண்ணீர் தேவைப் பட்டது. அந்தப் புற்கள் வளரத்தொடங்கின.

அடுத்து என்ன நடந்திருக்குமென உங்களுக்குத் தெரியும். அங்கே அப்புற்களை உணவாக்குவதற்கு விரும்பிய சில பூச்சிகள் இருந்தன. அடுத்ததாக அந்தப் பூச்சிகளை உண்பதற்காக அந்தப் பறவைகள். அப்பறவைகள் தம்முடன் வித்தியாசமான விதைகளைக் காவிச் செல்லும். அந்த விதைகள் முளைக்க ஆரம்பிக்கும். இறுதியில் அங்கே மரங்கள் இருக்கும். அங்கே பழங்கள் இருக்கும். அங்கே நீர் இருப்பதனால்தான் இவை யெல்லாம் உள்ளன. நீர் இல்லாவிட்டால் அந்த முழு உயிர் வாழ் இடமும் அழிந்துவிடும்.

"உங்கள் வாழ்விலும் அப்படித்தான். நீங்கள் செய்யும் சகல விடயங்களும், உங்கள் வாழ்வில் ஒரு பாகமாக நீங்கள் நினைக்கும் சகல விடயங்களும் ஏதோ ஒரு விடயத்தினால் தான் அங்கே உள்ளன. அது இல்லாவிடில், உங்கள் அபிப்பிராயம், வாழ்வு பற்றிய உங்கள் சாதகமான விடயங்கள் எல்லாம் சரிந்துவிடும். இந்த எல்லா விடயங்களையும் ஏதோ ஒரு பொருள் சாத்தியமாக்குகிறது. அது என்னவென்று உங்களுக்குத் தெரியுமா?

**Words of Peace**

பிறேம் ராவத் பற்றி மேலும் அறிந்து கொள்ள:
1.877. 707 3221 Toll free
416 431 5000 தமிழ்
416 264 7000 ஹிந்தி
www.wopg.org www.tprf.org

உயிர். உயிர்வாழ்வுதான் இவற்றையெல்லாம் சாத்தியமாக்குகிறது.

ஒரு மனித உடம்பை உருவாக்கும் பொதுவான மூலக்கூறுகள் - ஒக்சிசன், ஐதரசன், கார்பன், பொஸ்பரஸ், நைதரசன் - இவற்றையெல்லாம் ஏதோ ஒன்று சுறுசுறுப்பான ஒன்றாக இணைத்து வைத்திருக்கிறது. அதுதான் மனிதனை உயிருடன் வைத்திருக்கிறது. அதுதான் சுவாசம் என அவர் கூறுகிறார்.

"அதிகமான மக்கள் அதைப்பற்றி எதுவும் சிந்திப்பதில்லை" என திரு. ராவத் கூறுகிறார். ஆனால் நீங்கள் அதைப் பற்றி சிந்திக்க வேண்டும் என நான் எண்ணுகிறேன். ஏனெனில் வாழ்வில் உங்களுக்கு ஒரு குறிக்கோள் உள்ளது. உங்கள் குறிக்கோள் ஒவ்வொரு நாளையும் கைப்பற்றுதல் - உயிருடன் இருப்பதற்கு, உயிர்வாழ்வதற்கு, அத்துடன் இந்த உயிர்வாழ்வின் ஒவ்வொரு கணத்தையும் அனுபவிக்கவும், ஆனந்தமடையவும்.

"அமைதியை உருவாக்க முடியாது. ஏற்கனவே ஒவ்வொரு மனிதர் உள்ளேயும் அமைதி உள்ளது. உங்கள் வாழ்வில் அமைதியைப்

**தொடர்ச்சி 40ஆம் பக்கம்**




# டெஸ்ட் போட்டியில் மெக்கல்லம் அரிய சாதனை!

## விளையாட்டுத் தகவல்கள் 370

நியூசிலாந்து அணியின் தலைவர் பிரண்டன் மெக்கல்லம் ஹாமில்டன் மைதானத்தில் அரிய சாதனை ஒன்றை நிகழ்த்தியுள்ளார். இவர் இப்போட்டியில் களமிறங்கியதன் மூலம், அறிமுக போட்டியில் இருந்து தொடர்ச்சியாக 99 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி சாதனை படைத்துள்ளார். இவருக்கு அடுத்த இடத்தில் டிவில்லியர்ஸ் உள்ளார். இந்த வரிசையில் கில்கிறிஸ்ட் (96 போட்டிகள்), திராவிட் (93), சச்சின் டெண்டுல்கர் (84) ஆகியோர் உள்ளனர். மெக்கல்லத்தின் அறிமுக போட்டி மற்றும் 99-வது போட்டி இரண்டுமே அவருக்கு ஹாமில்டன் மைதானத்தில் அமைந்து இந்த சாதனைக்கு சிறப்பு சேர்த்துள்ளது. ஆனால் வாழ்நாளில் அதிக டெஸ்ட் போட்டிகளில் விளையாடி எந்த வீரரும் எட்ட முடியாத உச்சத்தில் இருக்கிறார் ஆலன் பார்டர். இவர் தொடர்ச்சியாக 153 டெஸ்ட் போட்டிகளில் களம்கண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

MOST CONSECUTIVE TESTS FROM DEBUT FOR A TEAM



| TOP FIVE | McCullum | De Villiers | Gilchrist | Dravid | Tendulkar |
|---|---|---|---|---|---|
| Matches | 99* | 98 | 96 | 93 | 84 |
| Debut | March 10, 2004 | December 17, 2004 | November 5, 1999 | June 20, 1996 | November 15, 1989 |
| End of run (match start date) | (ongoing) | January 2, 2015 | January 24, 2008 | December 10, 2005 | June 15, 2001 |

கங்குலியுடன் மோதும் ஷேவாக்: சங்கக்காரா, முரளிதரன் பங்கேற்கும் மாஸ்டர்ஸ் சாம்பியன்ஸ் லீக் அட்டவணை அறிவிப்பு! முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் பங்கேற்கும் மாஸ்டர்ஸ் சாம்பியன்ஸ் லீக் டி20 போட்டிகளின் அட்டவணை வெளியிடப் பட்டுள்ளது. இந்தப் போட்டிகளை ஐக்கிய அரபு எமிரேட்சில் நடத்த திட்டமிடப் பட்டுள்ளது. இதன்படி இந்தப் போட்டிகள் ஜனவரி 28ஆம் திகதி முதல் பெப்ரவரி 13ஆம் திகதி வரை நடக்கிறது. இந்த தொடரில் லிப்ரா லெஜண்ட்ஸ், ஜெமினி அரேபியன்ஸ், காப்ரிகார்ன் கமெண்டர்ஸ், லியோ லயன்ஸ், விர்கோ சூப்பர் கிங்ஸ் மற்றும் சகிட்டரியஸ் ஸ்ட்ரைக்கர்ஸ் என மொத்தம் 6 அணிகள் பங்கேற்கிறது. இதில் கங்குலி, ஷேவாக், காலிஸ், ஜெயவர்த்தனே, சங்கக்காரா, முரளிதரன், கில்கிறிஸ்ட், வெட்டோரி, பிரட் லீ, பிரையன் லாரா என பல முன்னாள் வீரர்கள் பங்கேற்கின்றனர். எமிரேட்ஸ் கிரிக்கெட் வாரியம் இந்த தொடருக்கு 10 ஆண்டுகள் அனுமதி வழங்கி இருக்கிறது. அமெரிக்காவில் நடந்த ஆல் ஸ்டார் கிரிக்கெட் தொடர் வெற்றி பெற்றதையடுத்து இதற்கும் ஐசிசி அனுமதி வழங்கி உள்ளது. இந்த தொடருக்கான போட்டி அட்டவணை அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் முதல் போட்டியில் கங்குலியின் லிப்ரா லெஜண்ட்ஸ் மற்றும் ஷேவாக்கின் ஜெமினி அரேபியன்ஸ் அணிகள் மோதுகின்றன. இந்த இரு அணிகள் மோதும் தொடரின் முதல் லீக் போட்டி ஜனவரி 28ஆம் திகதி துபாயில் நடக்கிறது. மொத்தம் 18 போட்டிகளை கொண்ட இந்த தொடரின் முதல் அரையிறுதி பெப்ரவரி 11ஆம் திகதியும், இரண்டாவது அரையிறுதி பெப்ரவரி 12ம் திகதியும் நடக்கிறது. இறுதிப் போட்டி துபாயில் பெப்ரவரி 13ஆம் திகதி நடைபெறுகிறது.

டெஸ்ட் போட்டியில் இலங்கையை வென்ற நியூசிலாந்தின் சாதனை துளிகள்!


இலங்கை அணிக்கு எதிரான 2ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது. டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து அணியின் சாதனை துளிகள்

- டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து அணி எதிரணியை 'வயிட்வோஷ்' செய்து தொடரை கைப்பற்றுவது இது 12-வது முறையாகும்.
- நியூசிலாந்து அணி உள்ளூரில் தொடர்ந்து 13 டெஸ்ட் போட்டிகளில் தோல்வியை சந்திக்காமல் சாதித்துள்ளது. இதில் 7 டெஸ்டில் வெற்றியும், 6 டெஸ்டில் டிராவும் கண்டுள்ளது.
- நியூசிலாந்து வீரர் கனே வில்லியம்சன் இந்த ஆண்டில் டெஸ்ட் போட்டியில் 5 சதம் அடித்ததுடன், மொத்தம் 1,172 ஓட்டங்கள் குவித்துள்ளார். அவரது சராசரி 90.15 ஆகும். இதன் மூலம் ஒரு ஆண்டில் அதிக ஓட்டங்கள் குவித்த நியூசிலாந்து வீரர் என்ற பெருமையை கனே வில்லியம்சன் பெற்றார். இதற்கு முன்பு கடந்த ஆண்டில் பிரண்டன் மெக்கல்லம் 1,164 ஓட்டங்கள் எடுத்ததே அதிகபட்சமாக இருந்தது.
- கனே வில்லியம்சன் சதம் அடித்ததன் மூலம் டெஸ்டில் அதிக சதம் கண்ட நியூசிலாந்து வீரர்கள் வரிசையில் ராஸ் டெய்லருடன் (13 சதம்) இணைந்து 2-வது இடத்தை பகிர்ந்து கொண்டுள்ளார். நியூசிலாந்து வீரர்களில் மார்ட்டின் குரோவ் அதிகபட்சமாக 17 சதங்கள் கண்டு முதலிடத்தில் உள்ளார்.

இலங்கையை "வயிட்வோஷ்" செய்து டெஸ்ட் தொடரை கைப்பற்றியது நியூசிலாந்து. இலங்கை அணிக்கு எதிரான 2ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதன் மூலம் 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரை 2-0 என முழுமையாக கைப்பற்றி அசத்தியுள்ளது. நியூசிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட இலங்கை அணி 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்றது. இதில் 2ஆவது டெஸ்ட் போட்டி ஹாமில்டனில் நடைபெற்றது. முதல் இன்னிங்சில் இலங்கை அணி 292 ஓட்டங்களும், நியூசிலாந்து அணி 237 ஓட்டங்களும் எடுத்தது. பின்னர் 55 ஓட்டங்கள் முன்னிலையில் 2ஆவது இன்னிங்சை தொடங்கிய இலங்கை அணிக்கு தொடக்க வீரர்கள் கருணாரத்னே (27), மெண்டிஸ் (46) நல்ல தொடக்கம் கொடுத்தனர். இருப்பினும் பின்னர் வந்தவர்கள் ஒற்றை இலக்க ஓட்டங்களில் நடையை கட்ட இலங்கை அணி 133 ஓட்டங்கள் எடுத்தது. இதனால் நியூசிலாந்து அணிக்கு 189 ஓட்டங்கள் வெற்றி இலக்காக கொடுக்கப் பட்டது. இந்நிலையில் எளிய இலக்கை நோக்கி 2ஆவது இன்னிங்சை தொடங்கிய நியூசிலாந்து அணி ஆரம்பத்தில் தடுமாறியது. தொடக்க வீரர்கள் லதம் (4), குப்தில் (1) ஒற்றை இலக்கங்களில் ஆட்டம் இழந்தனர். பின்னர் வந்த வில்லியம்சன், டெய்லர் (35) ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தால் நியூசிலாந்து வெற்றி இலக்கை நெருங்கியது.

அணித்தலைவர் மெக்குல்லம் 18 ஓட்டங்களிலும், சாண்டர் 4 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தார். ஆட்டநேர முடிவில் நியூசிலாந்து அணி 5 விக்கெட்டுகளை இழந்து 142 ஓட்டங்கள் எடுத்தது. வில்லியம்சன் 78 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார். வெற்றிபெற 47 ஓட்டங்களே தேவை என்ற நிலையில், தொடர்ந்து ஆடிய நியூசிலாந்து இலக்கை எட்டி 5 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது. நிதானமாக ஆடிய வில்லியம்சன் சதம் அடித்தார். அவர் 108 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழக்காமல் இருந்தார். அவருடன் வாட்லிங் (13) களத்தில் இருந்தார். இதன் மூலம் நியூசிலாந்து அணி டெஸ்ட் தொடரை 2-0 எனக் கைப்பற்றியது. சதம் விளாசிய வில்லியம்சன் ஆட்டநாயகனாக தெரிவு செய்யப்பட்டார்.

**எஸ். கணேஷ்**









யோகா சோதிடம்

- கிரகப்பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- பலன் பார்த்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361


# கனவொன்று....

### 39ஆம் பக்கத்தொடர்ச்சி

பெறுவதென்பதன் கருத்தென்ன? சுதந்திரமாக உணர்வதென்பதன் கருத்தென்ன? உங்கள் உயிர் வாழ்வில் நம்பிக்கையைக் கொண்டிருப்பதென்பதன் கருத்தென்ன? நீங்கள் அமைதியில் இருப்பதனால் நல்ல உணர்வைப் பெறுதல். நீங்கள் நல்ல உணர்வை உணர்வதால் நல்ல உணர்வை உணருதல்.

'இப்பொழுது உங்கள் உள்ளே உயிர் துடித்துக்கொண்டு இருக்கிறது. நீங்கள் உயிர் வாழ்கிறீர்கள். உங்களால் அனுபவிக்க முடியும், உங்களால் புரிந்துகொள்ள முடியும், உங்களால் தெளிவடைய முடியும். அதைத் தேடுங்கள், நேரடியாக, இப்பொழுதே. நாளைக்காகக் காத்திருக்க வேண்டாம். ஏனெனில் இன்றைய நாள்தான் உங்களுக்குத் தரப்பட்டுள்ளது. அதனுடன் இருங்கள் அத்துடன் நிறைவடையுங்கள்."






Niru BRAND
மீண்டும் ஓர் புதிய அறிமுகம்.........!!
Niru Brand Tamarind Paste!!!
புளி விதைகள் முழுமையாக நீக்கப்பட்டது...
இலகுவான சமையல் தேவைகளுக்கு மிக உகந்தது...
நீர் விட்டுக்கரைக்க வேண்டிய அவசியமில்லை...
Pâte de Tamarin
Niru BRAND®
Premium Quality
Ready to use
தரம், சுவை என்றென்றும்!!!
இப்போது உங்கள் அபிமான தமிழ்க்கடைகளில் கிடைக்கிறது




# எல்லோரும் மனம் மகிழ வழி சமைப்பாய் புத்தாண்டே!

கதிரவன் ஒளிகண்டு மக்கள் விழித்து எழுவர்
அதிகாலையில் தம் பணிகளில்
சுறு சுறுப்பாக இயங்குவர்
இருள் என்றாலும் மருட்சி இல்லை.
இரவில்தான் புது வருடக் கொண்டாட்டங்களும்
விடுமுறைக் கொண்டாட்டங்களும் களைகட்டி
மக்கள் மனம் குளிர வழி சமைக்கின்றன.

இன்பமும் துன்பமும் ஆட்டமும் பாட்டும்
இன்று நேற்று அல்ல என்றும் உண்டு
இயற்கையின் சீற்றம் ஒருபுறம்
மனிதர்களின் சீற்றம் மறுபுறம்
இரண்டும் கைகோர்த்து
ஏட்டிக்குப்போட்டி போட்டால்
மக்கள் படும் அவலங்களை
கூறிட வார்த்தைகள் ஏது?




புதிதாய்ப் பிறந்த புத்தாண்டே!
இயற்கை அழிவையும் செயற்கை அழிவையும்
தடுத்து விடுவாயா?
புத்தாண்டில் எல்லோரும் வளமாக வாழ
புதிய செய்தியுடன் விரைந்து வந்திடுவாய்

- ரஞ்சி கதிர் -

# வருக வருக புத்தாண்டே 2016

உலகோடு இணைந்து நல்லன பல செய்தாய் அதனால்
ஆயிரத்துப் பதினைந்தே உனக்கு வேண்டும் ஓய்வு
இருந்தும் மக்களுக்கு இன்னும் வரவில்லை விடிவு
ஆனாலும் நாம் தருகிறோம் பிரியாவிடை உனக்கு

ஆயிரத்துப் பதினாறாம் ஆண்டே உன்வரவை நாம்
வழிமேல் விழிவைத்து வரவேற்கக் காத்திருக்கிறோம்
எதிர்காலம் எமக்கேதும் நல்ல விடிவு கிடைக்க
பிறந்துவா இனிய புத்தாண்டே

சூழ்ந்தெம்மை நசுக்கின்ற துயரங்களைக் களைந்து
மனிதர் நன்மனத்தோடு உரம்பெற்று உயிரோடுவாழவைக்க
வருவாயென மனம்உவந்து எதிர்பார்த்து உன்வரவை
வரவேற்கக் காத்திருக்கின்றோம்

ஆண்டாண்டு தோறும் மீண்டும்மீண்டும் பிறக்கின்ற புத்தாண்டே
நம்துயர் தீர்க்கும் முடிவோடும், துணிவோடும் மகிழ்வோடும்
எதிர் கொள்ளும் பிரச்சினைக்கு எதிர்நீச்சல் போட்டு
யாவரும் சமமென வாழவைக்க வருக புத்தாண்டே

பெயரால் அன்றி வாழ்வால் நமக்குள் பெருமைவந்து சேர
விடியலுக்கான சமிஞ்ஜை ஒன்று விரைவில் வந்திட
கொட்டும் மழையில் பயிரும் பொருளும் வளர்ந்து
பட்டினிபோக்கிட வருக வருக புத்தாண்டே

- கவிநாதம் பரந்தாமன் -



# NK Movers

## We make moving easy!




***Proudly moving the local community for the last 20 years***

கடந்த 20 ஆண்டுகளாக தமிழ் சமூகத்தில் நன்மதிப்பைப் பெற்றவர்கள்

## WE SPECIALIZE IN:

- **RESIDENTIAL MOVING**
- **COMMERCIAL MOVING**
- **LONG DISTANCE MOVING**

மேலதிகமாக

**$50**

கழிவினை பெறுவதற்கு இக்கூப்பனைக் காட்டவும்

**QUESTIONS TO ASK**

Choosing a moving company is a major decision. Making sure to learn about a company's cost and service is very important. Once you are comfortable then make your final selection.

- Are you an insured company?
- Is your staff trained?
- Do you offer free estimates?
- What payment option is available? Is a deposit required?
- Is there a contact number I can contact on move day if there are any questions or challenges?
- Are there additional charges for:
  Stairs?
  Travel time from your location to mine?
  Evenings and weekends?

**TEL: 416-566-4260**

**FAX: 1-888-614-9373**

**TEL: 1-800-895-8362**

WWW.NKMOVERS.CA

clientsupport@thenkmovers.com

**32 Howden Road - Unit 2. Toronto, M1R-3E4**

"Let me help you make the right choice"
Schuren Sriskandarajah
Sales Representative
HomeLife/Future Realty Inc., Brokerage
7 Eastvale Drive, Markham Ontario L3S 4N8
SCHUREN.CA • 416.333.9393

BRINGING YOUR DREAMS TO LIFE TODAY call Vany Jeganmohan for BUYING, SELLING & INVESTING • RESIDENTIAL & COMMERCIAL
Vany Jeganmohan
Sales Representative
Cell: 416-670-7436
vanyj26@yahoo.ca
HomeLife/GTA Realty Inc., Brokerage
Bus: 416.321.6969
Fax: 416.321.6963
GTA Square, 5215 Finch Ave. E., # 203, Toronto, ON M1S 0C2
Higher Standards Agents... Higher Results!

"கனவு உங்களுடையது பொறுப்பு என்னுடையது"
List Buy Sell
RE/MAX All Stars Realty Inc., Brokerage
Independently Owned and Operated
Raj Paramasamy
Sales Representative
416-587-1619
raj.paramasamy@hotmail.com
வீடு வாங்குவதற்கு வருமானம் போதாதென்று எண்ணுகிறீர்களா?
No Credit or Bad Credit கவலை வேண்டாம்

வீடு மற்றும் வாகனக் காப்புறுதி HOME + AUTO = MORE SAVINGS*
"Call me today for a free home and auto insurance quote"
*Inclusive of all other discounts applies to Allstate's base rates. Terms & conditions apply & may vary region. Rates & discounts subject to change. Trademark used under licence by Allstate Insurance Company.
Allstate
Raji Linghan
Cell: 416.817.5060
905.427.2827 Ext:5020
Ajax Agency 15 Westney Road N

JODI MATRIMONY
தரகுப் பணம் இலவசம்
647-999-4333 / 647-291-1007
ஜோடி மாட்ரிமோனி
சேவை நோக்குடைய திருமணசேவை
25 Karachi Dr, Unit- B 26, Markham, ON L3S 0B5. E-mail: jm.09@hotmail.com

Direct:416-908-5656 MORTGAGES
1st,2nd,3rd
Purchase
Refinance
Renewal
Switches
Equity Line of Credit
For all your Mortgage needs !
Off:416-878-7979 Fax: 416-613-5779
Toll Free: 1-877-687-1214
Our Office:
1585 Markham Road, Unit# 407A
Toronto, M1B2W1 ON Canada
www.mortgagealliance.com
Email:nsubramaniam@mortgagealliance.com
Facebook:Nesan Subra
NESAN Subramaniam
Mortgage Agent
Mortgage Alliance
ACCESS INC. Lic # 11404
Independently Owned & Operated
Corporate Office: 209-8130 Sheppard Ave. East
Toronto M1B 3W3

Free Real Estate Class - Call: 416.321.6969

RE/MAX Vision Realty Inc. Brokerage
Each Office Is Independently Owned and Operated
Office: (416) 321-2228
Fax: (416) 321-0003
Email: anton@realtyagent.com
Web: RemaxVision.ca
2210 Markham Rd., Suite 1, Toronto, ON M1B 5V6
Anton Jeeva Arulappu
Broker
(416) 575-5055
Specialize in power of sale homes
Downtown, Toronto பகுதியில் புதிதாக கட்டவிருக்கும் Condo களை VIP Discount Price இல் பெற்றுக்கொள்ள அழைக்கவும்.

848,800
16 Stammers Dr
Bedrooms: 4
Washrooms: 4

499,900
78 Chad Cres
Bedrooms: 3
Washrooms: 3

225,000
123 Omni Dr 1165
Bedrooms: 1+2
Washrooms: 1

898,000
9515 Dagmar Rd
Bedrooms: 4+2
Washrooms: 5
Basement: Finished

559,900
23 Bush Dr
Bedrooms: 2+2
Washrooms: 2
Basement: Fin/Sep/Ent

875,000
1447 Water St (hamilton)
Esso

அகத்தின் அழகு முகப்பில் தெரியும்.....
உங்கள் அகத்தின் முகவரியை தேட
விசுவாசமான முகவர்.....
VK Kanthasamy
Sales Representative
Cell: 416-726-1698
Let Me find the key to your HoMe!
HomeLife/GTA Realty Inc., Brokerage
Buss: 416-321-6969 Email: vkpromise@gmail.com

SNM HEALTH CENTRE
www.snmhealthcentre.com
Specializing in:
Pain and Injury Treatment
Headache and Migraine Relief
Motor Vehicle Accidents
Workplace Injuries (WSIB)
Athletic Performance Enhancement
Corporate Wellness Programs
Women's Health and TMJ Treatment
Foot Health Solutions & Diabetic Foot Care
(Markham and 14th Avenue)
20 New Delhi Drive,
Suite 72, Markham,
Ontario, L3S 0B5
All insurances are accepted
Professional Services Include:
Physiotherapy
Chiropractic
Acupuncture
Massage Therapy
Osteopathy
Chiropody
Orthotics and Orthopedic Shoes
Custom Made Braces (Neck, Back, Knee & Ankle)
Compression Stockings
TENS
Book an Appointment Now!
647.216.6506 / 905.554.5540

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில்
வாசிப்பதற்கு www.vlambaram.com
www.tamilvanakkam.com

STOUFFVILLE BEAUTY SALON & SPA
Any Style Hair cut $8
Ladies, Gents & Kids
Grand opening Special
in Twitter
Bring this couppen
Call:905.591.5265 Cell: 647.867.5696 Email: pirabha23@gmail.com
Stouffville Garden Plaza, 18 Ringwood Dr., Unit 12, Stouffville L4A 8C1